www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
පිටු 20 பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஜூலை.31-ஆக.06,1994
ரூபா 9/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY தினமுரசு 61

## பகிரங்கமாகும் அரசியல் அவலங்கள்!

அரோகரா அரோகரா போடு X அரோகரா



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## வடக்கு-கிழக்கு மலையகம் தற்போதைய நிலவரம்

ரவுண்டப் செய்திகள்

லேடீஸ் ஸ்பெசல்

சினிவிசிட்

மகாபாரதம்

ரசிகன்-தரும் இலக்கிய நயம்

## 5 அபூர்வ சகோதரிகள்

## கவலையில் அமைதி

## ஆன்மீகம்

நாம் இவ்வுலகத்தில் பிறக்கின்றோம், வாழ்கின்றோம், இறக்கின்றோம். அக்கால இடைவெளியில் எத்தனையோ கவலைகளிலும் சோதனைகளிலும் துன்பங்களிலும் சிக்கி வேதனைப் படுகின்றோம். அவ்வேளைகளில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவோ உதவி புரிகின்றார். கவலையின்போது ஆறுதலளிக்கின்றார். சோதனைகளில் வெற்றியைத் தருகின்றார். துன்பங்களில் விடுதலை தருகின்றார். ஆகவே,

(பிலிப்பியர் 4:6,7) களில் கூறியுள்ளதை சற்று பார்ப்போம்.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத் துங்கள். என்றும்,

"அப்போது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" என்று கூறப்பட்டுள்ளது.

பரிசுத்த விவிலியத்தில் கூறப் பட்டது போன்று நாமும் எல்லாத் துன்பங்களையும் கவலைகளையும் தேவனுக்கு தெரியப்படுத்தி அவர் பாதத்தில் விசுவாசத்துடன் அமர்ந்திருப்போம்.



பெத்தானியாவில், மரித்த லாசரை உயிர்ப்பித்து லாசரின் சகோதரிகளான மார்த்தாள், மரியாளின் கண்ணீரைத் துடைத்தது போன்று, எமக்கு ஏற்படும் துன்பங்களிலும், கவலைகளிலும், சோதனைகளிலும் நம்மைத் தேற்றி ஆறுதல் தரக்கூடியவர் இறைவன் ஒருவரே.

மேரி சுமதி-நாவலப்பிட்டி.

## தொழுகையின் பிரதிபலன் சொர்க்கம்

"நபியே! உம்முடைய உம்மத்தினருக்கு ஐந்து நேரத் தொழுகைகளை நான் கடமை ஆக்கி உள்ளேன். அவைகளை அந்தந்த நேரத்தில் பேணித் தொழுது வருபவரைச் சொர்க்கத்திற்கு அனுப்ப நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். அவைகளைப் பேணித் தொழாதவருக்கு நான் பொறுப்பேற்க வில்லை" என்று அல்லாஹ் கூறுகிறான்.

நூல்-துர்ருல் மன்தூர்.

அல்லாஹ் ஐந்து நேரத் தொழுகைகளை கடமையாக்கியுள்ளான். அவைகளை அலட்சியம் செய்யாமல் நல்ல முறையில் உளுச் செய்து எவ்விதக் குறையுமின்றி அந்தந்த நேரத்தில் பயபக்தியுடன் தொழுது வருபவரைச் சொர்க்கத்திற்கு அனுப்ப அல்லாஹ் வாக்குறுதியும் அளித்துள்ளான். இவ்வாறு நிறைவேற்றாதவர்களுக்கு எந்த வாக்குறுதியும் இல்லை. அவன் (அல்லாஹ்) விரும்பினால் மன்னிப்பான். இல்லையேல் தண்டனை கொடுப்பான்.

ஆகவே, தொழுகைக்கு இவ்வளவு சிறப்பு இருக்கிறது. அதனைப் பேணித் தொழுபவர் அல்லாஹ்வின் பொறுப்பில் வந்து விடுகிறார். இன்று ஒரு அதிகாரியோ, செல்வந்தரோ யாரேனும் ஒருவருக்கு ஒரு விஷயத்தில் பொறுப்பேற்றுக் கொண்டால், அவர் எவ்வளவு நிம்மதியும், மகிழ்ச்சியும் அடைகிறார்! அந்த அதிகாரிக்கு, அல்லது செல்வந்தருக்கு மிகவும் நன்றி செலுத்துகிறார். அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பவராகவும் ஆகிவிடுகிறார். இங்கேயோ, சிரமம் இல்லாத ஒரு சாதாரண வணக்கத்திற்காக ஈருலக அரசனான அல்லாஹ்வே பொறுப்பேற்றுள்ளான்.

எனினும், மக்கள் இதில் அசட்டையாகவும், மறதியாகவும் இருக்கிறார்கள். இதனால் யாருக்கு என்ன நஷ்டம்? தமக்கே நஷ்டமும் தீங்கும் என்பதை உணர வேண்டும்.

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வீதிகள் முதல்
வானலை உட்பட முழக்கங்கள்
செவிப்பறைகளை அதிரவைத்துக்கொண்டிருக்கின்றன.

ஜனநாயகக் களத்தில்-
கருத்து மோதல்கள் வரவேற்கப்படவேண்டும்.
நூறு-நூறு கருத்துக்கள்
முன்னே வந்து முட்டி மோதலாம்.

ஆயிரம் பூக்கள் மலர்வதால்
ரோஜாவின் தரம் குறைவதில்லை.
எத்தனை மலர்கள் பூத்தாலும்
ரோஜாவின் தனித்துவம் குறைவதில்லை.

அதுபோலவே-
தம் கருத்திலே வலிவுண்டு-
மக்கள் நம்புகிற தெளிவுண்டு
என்று நம்புகிறவர்கள்
ஆயிரம் கருத்துகள் மலர்வதை
ஆவேசம் கொண்டு தடுத்திடவோ
அந்தக் கருத்துக்களிலே-
உள்ள சரி என்ன தவறு என்ன
என்று எடுத்துச் சொல்லாமல்
அந்த கருத்தை சொல்வோரை
தனிப்பட்ட வகையிலே-
தரம்கெட்ட வகையிலே
தாக்குவதன் மூலமாக தப்பிக்கொள்ளவோ
ஒருபோதும் நினைத்திட மாட்டார்கள்.

நிறை குடம் தழும்பாது.
தன் கருத்தை எடுத்துச்சொல்ல தெரிந்தவர்
ஏனைய கருத்துக்கள் வைப்போர்மீது
எரிதணல் கொண்டு பாய்ந்திடார்கள்.

தனிப்பட்ட ரீதியான
தரமற்ற வசைபாடல்களை நம்புவோர்
தம் முதுகுகளில் உள்ளதை
தாம் அறியாதவர்களாக இருப்பார்கள்.

மறுதரப்பும் அவர்கள்மீது,
அவர்கள் பாணியில் வசைபாடினால்
சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்லாமல்
அவர்களை சார்ந்துள்ளோரும்
சங்கடப்படவேண்டிய நிலை ஏற்படும்.
அவர்களது சாக்கடை அரசியலால்
அவர்கள்தம் குடும்பத்தினரும்
கூனிக் குறுகி கூசி நிற்கவேண்டியிருக்கும்.

எடுத்துச் சொல்லும் கருத்திலே
பிழை என்று எதிர்தரப்பு சொன்னால்
ஏன் பிழை என்று கேட்கலாம்.
எடுத்துச் சொன்னது ஏற்ற கருத்துத்தான்,
அதிலே தவறில்லை என்று நிரூபிக்கலாம்.
அதுதான் முதுகெலும்புள்ள அரசியல்.

துரதிஷ்டவசமாக-
நம் அரசியல் வாதிகள் பலர்
தம் தவறுகளை உணர்ந்தேயுள்ளார்கள்.
அதனால்-எதிர்தரப்பில் இருந்து வரும்
எந்தவொரு கேள்விக்கும்
பதில் சொல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள்.
அதனால்தான்-எதிர்தரப்பை அடக்க
ஒன்றில் கூச்சல் போடுகிறார்கள்.
அல்லது- துள்ளிப்பாய்ந்து கொதிக்கிறார்கள்.

தவறுகளை நியாயப்படுத்த முடியாதபோது
தனிநபர்கள்மீதான வசைபாடல்களே
தற்பாதுகாப்புக் கவசங்கள்!

அமெரிக்கத் தேர்தலில்
தொலைக்காட்சியில் தோன்றி,
வாக்காளர்கள் முன்பாக
வேட்பாளர்கள், வாத-விவாதம் நடத்தலாம்.

பில் கிளின்ரன்மீதே குற்றச்சாட்டுகள்!
உடனே குற்றம் சொன்னவரை
உள்ளே பிடித்தா போட்டார்கள்?
பொறுமையாக-புன்னகை மாறாமல்
பில் கிளின்ரன் பதில் சொல்லுகிறார்.

அந்தளவுக்கு ஜனநாயகம் முதிர்ந்தும்
மேலும் மேலும் விரிந்து விசாலமாகியும்
புதிய கட்டங்களை எட்டி வருகிறது.

நமது ஜனநாயகமோ
இன்னும் வளரவேண்டியிருக்கிறது.
இளம்பருவக் கோளாறுகளையும்
நிறையவே கொண்டிருக்கிறது.
ஆனால் நம்மவர்களோ
இருப்பதையும் கெடுத்து
குட்டிச் சுவராக்கிவருகிறார்கள்.

இவ்வாறான போக்குகள்
சிலரது கலாபம் வளர உதவலாம்.
ஜனநாயகம் விரிந்து வளர உதவாது.

தேர்தல் அரங்கிலே-
திருவாளர் பொதுஜனம்
ஜனநாயக பண்புகளை யார்-யார்
மதிக்கிறார்கள் என்பதையும்
மறந்துவிடாமல் கவனிக்கவேண்டும்.
■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-58

### வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

**பரிசுக்குரிய கவிதை**

**தலைமுறைகளின் தலைவிதி**

போரில் இறப்பது
இரண்டாவது தலைமுறை!
கண்ணீர் விடுவதும்
கதறி அழுவதும்
மூத்ததும்...! மூன்றாவதும்!!

திருமதி. எப். இனாமுல்லாஹ்
அக்குறணை.

**வியக்கப்பட்டவை**

**தொடரும்!**
துப்பாக்கிச்
சாத்தானைத்
தொழுகின்ற
வரைக்கும்
அழுகின்ற
நிகழ்வுகளே
அவனியில்
தொடரும்!
ரேணுகா றிபாய்தீன்
ஏறாவூர்-02.

**துடுப்பில்லை**
இருபத்தோராம்
நூற்றாண்டு
கரையை
அடைய
துடுப்பின்றி
நடுக்கடலில்
தவிக்கும்
ஜீவன்கள்.
செ. நடேஷ்
மட்/ஊறணி.

**உணர்வுகள்**
உயிருக்குயிரான
உறவொன்று
உதிர்ந்துவிட்டதால்
உணர்வுகள்
உடைப்பெடுக்கின்றதோ
இங்கே!
ஆர். சுரேஷ்-கலஹா.

**நிஜம்**
போர் மழையில்
விழுகின்ற
கண்ணீர்த்
துளிகள்
நாகரிகத்தின்
முகச் சுளிப்பைப்
பெறுவது நிஜம்!
அக்குறணை
சியானி நளீர்.



**கதிரையே முக்கியம்**
உங்கள் அழுகையோ முக்கியம்...?
உங்கள் ஒட்டுக்களே முக்கியம்...?
உங்கள் கவலையோ முக்கியம்...?
எமக்கு கதிரையே முக்கியம்.
எஸ். பி. மலர்-வவுனியா.

வேதனைத் தீயில் வெம்பி அழும் தம்பியே,
அங்கே அரபாத்தும் நெல்சனும்
சாதனை படைக்கிறார்கள்;
இங்கே உனக்குப் போதனை மட்டுமே!
சீ. கணேசமூர்த்தி-அக்கரைப்பற்று-08.

பசுமை படர வேண்டிய பருவத்தில்
கொடுமை விதைகளை
விதைக்காதீர்கள்!
அறுவடை செய்ய ஆட்கள்
இருக்க மாட்டார்கள்;
ஆயுதங்களே மிஞ்சும்.
எஸ். ஆனந்தி-கொழும்பு-09.

**விளம்பரம்**
சமாதானத்திற்கு
ஒரு
புதிய விளம்பரம்.
அஸ்லம் நவ்பர்
அக்குறணை.

**சமாதானம் மலர்ந்திடுமா?**
'கண்கள் கடலாகக்
கலங்கி யழுதாலும்
மண்ணான சமாதானம்
மலர்வதென்பதென்னாளோ?'
கு. தயானந்தன்-கல்முனை.

**அபூர்வ சிரிப்பு**
அழுவது இக்காலத்தில்
அவசியமாகப் போனதால்

சிரிப்பது எதிர்காலத்தில்
அபூர்வமாகப் போகிறது.
சின்னக் கண்ணம்மா-பசறை.

**காணக்கண் கூசுகின்றது**
காணக்கண் கூசுகின்றது
கண்றாவி யுத்தத்தின் விளைவை
கையெடுக்க நாதியில்லை
கருத்துப் பரிமாற யாருமில்லை.
ஐ. வாசுதேவன்-கலஹா.

அழுது ஆவதென்ன?
அனைத்தையும்
இழந்ததால்
நீங்களும் அகதிகளே!
த. ஜெயாஞ்சலி-தம்பிலுவில்-02.


உறவுக்குள் புகுந்து-எம்
கருவறுத்த விதி கொடுமை
தெருவுக்கு வந்துவிட்டோம்-யார்
தருவார் இனி நிம்மதியை.
எம். ஏ. நஜுமுதீன்-
அக்கரைப்பற்று-04.

**தீர்வதெங்கே?**
பாவியரெங்கள் வாழ்வில்
துயரங்கள் தீர்வதெங்கே?
போர் வெறியர் இழிகுணங்கள்
பாடையிலே போகும்வரை!
ஏ. அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**மாண்டவர் மீளார்!**
சேய்களோடு...சேர்ந்து
தாய்மாரும்...தந்தையரும்...
வாய்விட்டு அழுதென்ன?
மெய்விட்டுப் போன உயிர்
மீள்பட்டு...வருமா என்ன?
வாஹிட் ஏ. குத்தூஸ்-பதுளை.

**அழுகின்றோம்**
பாழும் போரினால்
பாரில் மனிதகுலம்
நாளும் அழிவதெண்ணி
நாமும் அழுகின்றோம்.
சித்தி ஜெரீனா ராஸிக்
சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல-61



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 06.08.1994.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 61

தினமுரசு வாரமலர்
த. பெ. இல-1772, கொழும்பு.

## வாசகர் சாலை

அன்பின் தினமுரசே!

இன்றுபோல் என்றும் காற்றினில் வரும் கீதமாய் காத்திருக்கும் எங்களுக்கெல்லாம் காலா காலமாய் களிப்பூட்ட வேண்டுமென கன்னி நான் கற்பனையில் இலயித்திடுவேன்.

செல்வி. ராதா ராமநாதன்-பூண்டுலோயா.

▫▫

இலக்கிய நயம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. நானும் நீயும் என்றுமே நீடூழி வாழ வாழ்ந்திடவும் உன் சேவை மென்மேலும் தொடர என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

பெ. சண்முகராஜா-மடுல்சீமையூர்.

▫▫

தித்திக்கும் முரசே!

நீ வாராவாரம் சுமந்து வரும் ஆக்கங்களும் இராஜதந்திரியின் அரசியல் அலசலும், இலக்கிய நயமும், கொலை விழும் நேரம், தேன்கிண்ணம், தகவல் பெட்டி, எக்ஸ்ரே ரிப்போர்ட், பாப்பா முரசு, லேடிஸ் ஸ்பெஷல் ஆஹா பிரமாதம். உன் பணிகள் தொடர என் வாழ்த்துக்கள்.

றிஸானா லெத்தீப்-கிண்ணியா-05.

▫▫

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம், என்பது போல தினமுரசை ஒருநாளும் படிக்காமலும் மறக்காமலும் இருக்க முடிய வில்லை.

கே. அண்ணாதுரை-நானுஓயா.

▫▫

சென்றவார 'தினமுரசு' என்ன போட்டிச் சிறப்பிதழா? கவிதைப் போட்டி, தங்கநகைப் பரிசுப் போட்டி, சொன்னது நீதானா போட்டி, தேர்தல் கணிப்புப்போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி, கடிகார பரிசுப்போட்டி என ஒரே அசத்தலாக அசத்தி அமர்க்களப்படுத்தி விட்டீர்களே சார்!

ஆர். பாலகிருஷ்ணன்
கெந்தக்கொல்ல-மாத்தளை.

தித்திக்கும் தினமுரசே, என்னில் நீ கலந்து பல மாதங்களாகி விட்டாய். ஆனால் நான் இன்றுதான் உன்னில் கலந்துகொள்கிறேன். உன்னை எல்லோரும் பாராட்டும் போது நான் என்னையே மறந்து போகிறேன். உன்னை கையில் எடுத்தால் எந்தப் பக்கம் முதலில் பார்க்க என்று திண்டாடுகிறேன். சூடு, சுவை, சுவாரசியம் உனக்கு ரொம்ப பொருத்தம். வாரம் ஒன்றை




கடந்தாலும் வாடாத மலராய் மணம் பரப்புகிறாய். அது மட்டுமல்ல, எனக்கு நல்லதொரு தூய நட்பையும் தேடித் தந்த முரசே, நீ பல்லாண்டுகாலம் வாழ்க... வளர்க என்று வாழ்த்துகிறேன். இந்த அடிமையின் வாழ்த்தை ஏற்றுக் கொள்வாயா முரசே,

எம். என். றுஸானா
யஹலதன்னை.

▫▫

தாகத்துக்கு தண்ணீர் தேவை, பசிக்கு உணவு தேவை, நோய்க்கு மருந்து தேவை, எம் இருதயங்களுக்கோ இனிய முரசு நீ தேவை. அன்பு முரசே உனது பணியும் சேவையும் நீடூழி வாழ எம் மனமார்ந்த நல்லாசிகள்.

எம். ஜே. எம். அனஸ்-அக்குறணை.

▫▫

வாரமொருமுறை வெளிவரும் தினமுரசின் சகல படைப்புக்களும் பிரமாதம். லேடீஸ் ஸ்பெஷல் சிறுகதைகள், எக்ஸ்ரே ரிப்போர்ட் போன்ற சகல படைப்புகளும் வாசகர்களை கவரக்கூடியதே! முரசுக்கு என் வாழ்த்துக்கள்.

எ. ஃப். ஸரீமா ஸனூஸ்
மக்கொனை.

▫▫

திக்கெட்டும் முரசொலிக்க தேன் சுவை தரும் தினமுரசே, நீ தரும் அத்தனை அம்சங்களும் ஆக்கங்களும் சிறந்தவையே. இன்று போல் என்றும் உன் புகழ் ஓங்கிட என் வாழ்த்துக்கள். பாராட்டுக்கள்.

கே. நவமலர்-கோட்லோஜ்.

▫▫

தினமுரசே, நீ ஆரம்பமானது முதல் சூடு, சுவை, சுவாரசியம் என்பதன் அர்த்தம் என்ன என்று விளங்குகிறது. உனது படைப்புகள் அத்தனையும் சூப்பர். உனை வாழ்த்த வார்த்தைகள் இல்லை. தினமுரசிற்கு நிகர் தினமுரசே.

பி. லிங்கம்-பலப்பிட்டிய.

▫▫

அன்பின் முரசே,

உன் ஆக்கங்கள் யாவும் மிக இனிமையானவை. என் நெஞ்சை நெகிழ்விக்கக்கூடிய இலக்கிய நயம், கொலை விழும் நேரம், சினி விசிட், வாரம் தோறும் விறுவிறுப்பாய்ச் செல்கின்றன. தொடர்ந்து இவ்வாறு ஆக்கங்கள் செல்வதற்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

எம். என். றம்ஸியா-அலபடகம.

என் அருமை முரசே,

நீ வாராவாரம் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் பாராட்டுக்குரியது. அற்புதனின் 'சிந்திக்கலாம் இங்கே' என்ற பகுதி சோகத்தில் மூழ்கி சிந்தனையற்றுக் கிடக்கும் உள்ளங்களை சிந்திக்கவைக்கிறது. என்றும் உன் சேவை தொடர, உன் புகழ் வளர என் அன்பு வாழ்த்துக்கள்.

ச. கலையரசி-யட்டதொல.

▫▫

தினமுரசை நீங்கள் சற்றுப் படித்துப் பாருங்கள். தினந்தோறும் தீந்தமிழைக் கற்றுத் தேறுங்கள். புரியாத உண்மையெல்லாம் புரியும் பாருங்கள். புரியாவிட்டால் வந்து என்னைச் சாடுங்கள்.

க. மதிசீலன்-களுவாஞ்சிக்குடி.

▫▫

வண்ண வண்ண வர்ணங்களில், வாரமொரு முறை வந்து வாசகர் எம்மை வசீகரிக்கும் வாரமலரே! உன் அபிமானியாக நானுமிருப்பதில் பெருமையடைகின்றேன். வளர்க உன் சேவை! வாழ்க உன் திறமை!

ஹஸ்மத் பர்ஹானா
எலமல்தெனிய.

▫▫

பக்கங்களைப் புரட்டிப் பார்க்கையில் சுவைக்கு விருந்தளிக்கும் தேன் கிண்ணம், இதயம் கசியும் இலக்கிய நயம்.

முரசே நீ வாழ்க- உன் புகழ் வளர வாழ்த்துக்கள்.

எஸ். உலகேஸ்-கிரான்குளம்.

▫▫

வாரந்தோறும் உன்னை வாசிக்காமல் கண்களுக்கு உறக்கமில்லை. தினமுரசே! மனப்பாரந் தீர்க்கும் உன் சுவையான சினிமாச் செய்திகள், சிந்தனைக் கவிதைகள். சிறகடித்து பறந்து வர நினைக்கிறது உள்ளம் உன் வாசலுக்கு.

எம்.பீ.எம். சாபிகான்
பமுனுபொல.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கண்டி நிலவரம்- 50க்கு 50

## ஐ.தே.க.-பொ.ஐ. முன்னணி பலப் பரீட்சை

## இருபெரும் அணிகளும் சமபல நிலையில்

ஏறக்குறைய ஏழு இலட்சம் வாக்காளர்கள் கண்டி மாவட்டத்தில்.

இதில் முஸ்லிம் வாக்காளர்கள் 90 ஆயிரம் பேர் வரை உள்ளனர். தமிழ் வாக்காளர்கள் 68 ஆயிரம் பேர் வரை இருக்கின்றனர்.

12 பிரதிநிதிகள் கண்டி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

ஏற்கனவே கலைந்த பாராளுமன்றத்தில் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் 8 பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தரப்பில் 4 பேரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அலையே மேலோங்கியிருந்த கண்டி மாவட்டத்தில் இம்முறை அந்த அலையில் மாற்றம் தெரிவதாக தற்போதைய நிலவரம் சொல்கிறது.

பொதுஜன முன்னணி பலத்த போட்டியை ஏற்படுத்தியிருக்கிறது.

தற்போதைய போட்டி நிலவரப்படி ஒரு உறுப்பினர் தேர்வாக வேண்டுமானால் 30 ஆயிரம் வாக்குகள் வரை பெற்றுக் கொள்ளவேண்டும்.

திரு. காமினி திசாநாயக்காவுடன் பொ.ஐ.முன்னணி சார்பாக மோதுவது அநுரா ரத்வத்த. இருவருமே தகுதியான போட்டியாளர்கள்.

இரு அணிகளின் வெற்றி தோல்வி எப்படியிருந்தாலும் திரு. காமினியும், அநுரா ரத்வத்தையும் வெற்றிபெறுவது உறுதி என்பதே தற்போதைய கணிப்பு. இந்த இரு துருவங்களிலும் அதிக விருப்பு வாக்குகளை பெறப்போவது யார் என்பதிலும் பலத்த போட்டி நிலவுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு. இராஜ ரத்தினத்தின் வெற்றியும் கிட்டத்தட்ட உறுதி என்பதே வாக்காளர்களது நாடித் துடிப்பறிந்தவர்களது கணிப்பாகும்.

தேசியத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் போட்டியிடும் ஜயாத்துரைக்கு பொதுஜன முன்னணி மறைமுகமாக உதவுவதாக ஒரு பேச்சு அடிபடுகிறது.

பாராளுமன்றம் செல்லத்தக்க அளவுக்கு திரு. ஜயாத்துரையால் வாக்குகளை திரட்ட முடியுமா என்பது சந்தேகம்தான்.

முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன முன்னணிக்கு ஆதரவளிப்பதால் தினேஷ் குணவர்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி, சந்திரிக்கா-அஷ்ரப் ஒப்பந்தம் பற்றிய சந்தேகங்களை சிங்கள வாக்காளர்களிடம் பரப்பி வருகிறது. வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்தே தீருவோம் என்றும் உரத்துப் பேசுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தரப்பில் முஸ்லிம் வாக்காளர்களை வெளியுறவு அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீட், ஏ.ஆர்.எம்.ஏ. காதர் ஆகியோர் கவரக்கூடும் என்பதே நம்பிக்கை.

நீண்டகாலமாக ஒரே கட்சியில் இருந்து முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தவர் என்னும் மரியாதை அமைச்சர் ஹமீட் பக்கத்திற்கு பலம்.

அதேபோல் அமைச்சர் காதர் தனிப்பட்ட ரீதியில் செய்த உதவிகளும் வாக்குகளாக மாறி உதவலாம் என்று கூறப்படுகிறது. அமைச்சர் காதர் பிரசாரத்திற்காக வாகன ஒழுங்குகளையும் செலவுகளையும் பொறுப் பேற்று செய்வதில் கட்சித் தொண்டர்கள் மத்தியில் அவருக்கு வரவேற்பு காணப் படுகிறது.

எனினும் சந்திரிக்கா அலை எந்தளவுக்கு கண்டியில் வீச்சைக் காட்டும் என்பதை பொறுத்தும், ஐ.தே.கட்சியின் இறுதிக்கட்ட பிரசார உத்திகளைப் பொறுத்தும் நிலைமை மாறலாம்.

ஐ.தே.கட்சிக்கு 6, பொ.ஐ.முன்னணிக்கு 6, என்ற கணக்குத்தான் தற்போதைய கண்டி மாவட்ட நிலவரம்.

## பாராளுமன்றப் போராட்டம் பயனற்றது

## புலிகளின் ஆலோசகர் தெரிவிப்பு!

19.07.94 அன்று யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பினால் 'தமிழீழ நிர்வாக சேவை' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக சேவை ஆரம்ப விழாவில் புலிகளது அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார்.

"அகிம்சை வழியில் போராடிய எம் முன்னோர்களால் உரிமைகளை வென் றெடுக்க முடியவில்லை.

இனப்படுகொலை வடிவில் ஒடுக்கு முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. அகிம்சை ரீதியிலான, பாராளுமன்ற போராட்ட வடிவிலான போராட்டங்கள் தோல்வி கண்டன.

எமது மக்களது அழிவு ஒரு உச்சக் கட்டத்துக்கு வந்த வேளையில் ஆயுதப் போராட்டம் தலைதூக்கியது.

இறுதியான போராட்ட வடிவம் ஆயுதப் போராட்டமே.

தமிழீழ விடுதலை என்பது ஒரு நீண்ட செயன்முறைக்கு உட்பட்டது. சிவில் நிர்வாக முறைகளில் எமது உறுப்பினர்களது கண்காணிப்பின்கீழ் ஒவ்வொரு அமைப்பாக நிறுவி வருகிறோம். எமது நிர்வாக கட்டமைப்பு ஒரு குழந்தைப் பருவத்தில் இருக்கிறது." என்றும் திரு.பாலசிங்கம் தெரிவித்தார்.

நிர்வாக அமைப்புகளுக்கு தெரிவு செய்யப்பட்ட ஊழியர்கள் சத்தியப்பிரமாண மும் செய்து கொண்டார்கள்.

## ஒட்டுவது தொண்டர் பொறுப்பு! உரிப்பதுதான் பொலிசார் கடமை!

கொழும்பு நகரில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உறுதியான உத்தரவு- திடீர் என்று........!

'சகல கட்சி பிரசுரங்களையும், தோரண அலங்காரங்களையும் அகற்றுங்கள்.'

பொலிசார் வீதிகளில் இறங்கி உத்தரவை செயற்படுத்தும்போது பிரதமர் அழகாக புன்னகைத்தபடி போஸ் கொடுத்த சுவரொட்டிகளை தொடவாமா விடவாமா என்று சங்கடப்பட்டுக்கொண்டதை காண முடிந்தது.

கொழும்பு நகரெங்கும் பச்சையைவிட நீலம் அதிகமாக தெரிந்ததும் உறுதியான உத்தரவுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

"பொது இடங்களில் ஒட்டக்கூடாது." என்னும் வாசகம் சகல அரசியல் கட்சிகளின் சுவரொட்டிகள் மற்றும் பிரசுரங்களில் ஒரு சம்பிரதாயத்திற்காக இருப்பதுபோல் காணப்படுகிறது. சிகரெட் பெட்டியில் 'புகைப்பது உடல் நலத்திற்கு கெடுதி' என்று போடுவது போலத்தான் இதுவும் என்கிறார் ஒரு பொதுமகன்!

## பதில்சொல்லவில்லை பொ.ஐ.முன்னணி

## பௌத்த உயர்பீடம் வருத்தம்

வட-கிழக்கு பிரச்சனை தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்களின் நிலைப்பாடு எவ்வாறுள்ளது என்று தெரிவிக்குமாறு நாட்டிலுள்ள பௌத்தர்களின் விவகாரங் களுக்குப் பொறுப்பான உயர் பீடம் விடுத்த கோரிக்கைக்கு இதுவரை பொதுஜன முன்னணியின் பதில் தனக்கு கிடைக்க வில்லையென மதிஹி பன்னசீக நாயக்க தேரோ கூறினார்.

"நாங்கள் விடுத்த கோரிக்கைக்கு பொதுஜன முன்னணியிடமிருந்து 'கடிதம் கிடைத்தது' என்று ஒரே வரி பதில் மட்டும்தான் கிடைத்துள்ளது" என்றார் அவர்.

நாட்டிலுள்ள பௌத்த மத பீடாதிபதிகள் மற்றும் புத்தமத நிறுவனங்களின் பிரமுகர்கள் ஒன்பது பேருடன் வண.பன்னசீக தேரோவும் ஒப்பமிட்டு முக்கிய அரசியல் தலைவர் களுக்கு இம்மாத ஆரம்பத்திலேயே கடிதங்கள் அனுப்பியிருந்தனர். வட-கிழக்கு தொடர்பான பிரச்சனைகளுக்கான தீர்வு எத்தகையது என்று கோரியே இக்கடிதங்கள் அனுப்பப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியும் மகாஜன எக்சத் பெரமுனையும் மட்டுமே தங்களுடைய நிலைப்பாட்டினை விளக்கியிருப்பதாக தேரோ கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கா மகா சங்கத்துக்கான தனது பதிலில், அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களைத் தொடரும் என்று குறிப்பிட்டிருந்தார், என்று தேரோ கூறினார்.

## "மட்டக்களப்பில் மூன்று நிச்சயம்"?

## கூட்டணி வட்டாரம் உறுதி!

"மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்கள் உறுதி." என்று கூட்டணி வட்டாரம் கூறுகிறது.

ஆனால் தேர்தல் அரங்கின் நிலவரங்கள் அங்கு இரு ஆசனங்கள்தான் கூட்டணியின் வசம் போகும் என்பது போலவே தென்படுகின்றன.

மட்டக்களப்பு-அம்பாறை என்னும் இரு மாவட்டங்களிலும் தேர்தல் கூட்ட பரபரப்புக்களில் தமிழ் வாக்காளர்கள் அதிக ஈடுபாடு காட்டுவதாகத் தெரியவில்லை.

77ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இருந்த உற்சாகம் இன்றுவரை தமிழ் வாக்காளர்களிடம் காணப்படவில்லை.

முஸ்லிம் வாக்காளர்கள் மத்தியில் தேர்தல் சூடு பரவியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழ் அமைப்புக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியும் நேரடி மோதலில் குதித்துள்ளன. ஆனால் சாதக நிலை கூட்டணியின் பக்கமே இருக்கிறது.

ஆயுத அத்துமீறல்கள் பற்றிய மக்களது வெறுப்பு கூட்டணிக்கு ஆதரவான வாக்குகளாக மாறலாம்.

தமிழர்களது வாக்குகள் சிதறக்கூடாது என்று மட்டக்களப்பு-அம்பாறை வாக்காளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனோபாவம் கூட்டணிக்கோ அல்லது தமிழ் தேசிய ஐக்கிய முன்னணி கூட்டில் உள்ள ரெலோவுக்கோதான் சாதகமாக அமையும்.

## திருவிழா ஆவேசம்



எல்லாம் உங்களாலேதான்.... எதுக்கு இப்படி ஒரேயடியா உணர்ச்சிவசப்பட்டு ஆவேசமா பேசினீங்க.....? பாருங்க இவருக்கு 'சாமி' வந்துடுச்சு.

(நன்றி–மதன் ஜோக்ஸ்)

## மாற்றுக்கட்சியினர் புகமுடியாத கோட்டைகள்

## கப்பலால் இறங்கியவுடன் கட்சி மாற்றம்!

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் அலை பயங்கரமாக இருக்கிறது.

சாய்ந்தமருது, கல்முனைக் குடி, மருதமுனை, ஒலுவில், பாலமுனை போன்ற பகுதிகளுக்குள் முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த பிற கட்சிகள் சென்று பிரசாரத்தில் ஈடுபடுவதே பெரும் சிரமமான காரியமாக இருக்கிறது.

ஆகஸ்ட் 16க்குப் பின்னர் அமைச்சர் மன்சூரின் அரசியல் முற்றுப்புள்ளியாகிவிடும் என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரம் அடித்துக் கூறுகிறது. நிலவரங்களை பார்க்கும்போது மன்சூரின் நிலை திருப்தி கரமாக இல்லை என்றே தெரிகிறது.

இதேபோல வடக்கே யாழ் மாவட்டத்தில் ஈ.பி.டி.பிக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட முயன்ற ஒரு தமிழ் அமைப்பின் உறுப்பினர்களை அனலதீவு என்னுமிடத்தில் உள்ள மக்கள் விரட்டியடித்துள்ளனர். அந்த அமைப்பின் உறுப்பினர்கள் கடற்படை முகாமுக்குள் ஓடி அடைக்கலம் கேட்டபோது ஊர்வலமாகச் சென்ற மக்கள் அந்த அமைப்பினர் ஊருக்குள்வர கடற்படை அனுமதிக்க வேண்டாம் என்று கோரியுள்ள னர். சுற்றிவளைத்து தாக்கிய மக்கள் மத்தியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் இருந்தனர் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். குற்றம் சாட்டியுள்ளது.

எழுவைதீவு என்னுமிடத்தில் பிரசாரத் திற்காக படகில் சென்ற அமைப்பினர்மீது கூழ் முட்டைகளை வீச மக்கள் முனைந்த போது கடற்படையினர் அந்த உறுப்பினர் களை பாதுகாத்து அழைத்துச் சென்றனர்.

இதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினர் தமது பிரசாரத்திற்காக அழைத்துச் சென்ற வரதராஜன் என்னும் ஒருவர் அங்குபோய் கப்பலில் இருந்து இறங்கியவுடன் ஈ.பி.டி.பி. அமைப்பின ரோடு இணைந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். வரதராஜன் நெடுந்தீவை சேர்ந்தவர் என்றும் அவர் மூலமாக தம்மை மக்களிடம் அறிமுகம் செய்யவே ஈ.பி.ஆர். எல்.எஃப். கொழும்பில் இருந்து அவரைக் கூட்டிச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

தெற்கில் பொதுஜன முன்னணி யின் கோட்டைகளாக கருதப்படும் சில பகுதி களுக்குள் ஐ.தேசியக் கட்சி நுழைய முடியாத நிலையில் இருக்கிறது. மீறி நுழைய முயலும்போது மோதல்கள் ஏற்படுகின்றன.

தென் மாகாணத்தில் பச்சை-நீல அணிகளின் மோதலில் உயிர்ப் பலிகளும் ஏற்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி தரப்பில் இருந்து அடிதடிகளில் ஈடுபடக்கூடிய சொத்தி உபாலி போன்ற வர்கள் இல்லாமையால் தெரு மோதல்கள் களை கட்டவில்லை.

## ஊவா மாகாணத்தில் தேர்தல் நிலவரம் -காராளன்-

## அரசின் மீதான அதிருப்தி எதிரணிக்கு சாதகமாகுமா? இ.தொ.கா. உதவியோடு ஐ.தே.க. வெற்றிக்கு முனைப்பு!

மலையக மாகாணங்களில் ஒன்றான 'ஊவா'விலும் தேர்தல் ஜுரம் சூடுபிடித்து விட்டது. ஆளும் கட்சியும் எதிர்கட்சிகளும் சூறாவளி சுற்றுப் பயணங்கள் செய்து தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்கின்றன.

ஏற்கனவே ஜனாதிபதி ஒரு ரவுண்ட் அடித்துவிட்டார். தமிழ் சாகித்திய விழாவோடு, இ.தொ.கா. தலைவரும் தனது பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டார். இம்முறை 'ஊவா' மாகாணத்தில், அதிகத் தமிழ் வாக்காளரைக் கொண்ட பதுளை மாவட்டத்தில் ஆளும் ஐ.தே.க.வுடன் இணைந்து போட்டியிடும் இ.தொ.காவின் சார்பில் மட்டுமே இரண்டு தமிழ் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஐ.தே.கவின் தொழிற்சங்கமான இ.தே. தோ.தொ. சங்கத்தின் சார்பாக போட்டியிட விருந்த மாகாணசபை உறுப்பினரான கே.வேலாயுதத்தின் பெயரும் இறுதி நேரத்தில் நீக்கப்பட்டது; அவரது ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பொ.ஐ.மு.சார்பில் பல தமிழ் வேட் பாளர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டபோதும் இறுதி நேரத்தில் வி.தோ.தொ.சங்கத் தலைவரான திரு.கிருஷ்ணசாமியின் பெயர் பலமாக அடிபட்டு, அதுவும் சில முக்கியஸ் தர்களால் அமுக்கப்பட்டது.

இரண்டு சுயேச்சைக் குழுக்கள், ஒன்று முஸ்லிம்கள், மற்றது புரட்சிகர கம்யூனிஸ்ட் டுக்கள் சார்பானது.

இரண்டு குழுக்களுக்கும் ஆசனங்கள் எதுவும் கிடைப்பதற்கான சாத்தியம் தென்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான், எதிரணி சார்பில் சந்திரிக்காவுடன் செல்லாவும் சேர்ந்து பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளனர் என்று பேசப்படுகிறது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை, பொ.ஜ.முன்னணியின் பக்கமே அதிஷ்டக் காற்று வீசுகின்றது. அதிலும் இளம் சட்டத்தரணியும், மாகாண சபை உறுப்பினரு மான, திரு.டிலான் பெரேராதான் அதன் வேட்பாளர்களின் மத்தியில் முன்னணியிடத்தை வகிக்கின்றார்.

மலையக தோட்ட தமிழ் மக்கள் மத்தியில் அரசின்மேல் அதிருப்தியடைந்த நிலையும் காணப்படுகின்றது.

இருந்தபோதும் இவர்களின் அதிருப்தியை சரியான முறையில் பயன்படுத்தி பலன்பெற எதிர்கட்சிகள் முயற்சி செய்யத் தவறிவிட்டன. அதனால், இ.தொ.கா. வேட்பாளர்களான சென்னன், சுப்பையா, ஆகியோரின் வெற்றி வாய்ப்பு நிச்சயமாகியுள்ளதுடன் அவர்களின் தயவோடு ஐ.தே.க. அதிக ஆசனங்களை பெற்றுவிட முடியும் என்று உறுதியாக நம்பி செயற்படுகின்றது.

இ.தொ.கா.உறுப்பினரான திரு.சென்ன னுக்கு இருக்கும் அமோக ஆதரவு திரு.சுப்பையா அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

# "ஊர்ப்பழக்கம்-சாதித்திமிர்-பிராமணிய சிந்தனை!"

# கூட்டணி சிவாமீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். தாக்குதல்!!

வவுனியா மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை வேட்பாளராக திரு.மு.சிவசிதம்பரம் போட்டியிடுகிறார்.

புளொட்மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கள் கூட்டணியினரின் வரவை கடுமையாக விமர்சித்துக்கொண்டிருக்கின்றனர்.

கூட்டணியினரும் உடனுக்குடன் பதிலடி கொடுத்து வருகிறார்கள்.

சமீபத்தில் கூட்டணித் தலைவர் திரு.சிவாவுக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பு வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் காரசாரமான வார்த்தைகள் காணப்பட்டன.

"வடமராட்சியை பிறப்பிடமாகக் கொண்ட நீங்கள் எமது சமூகத்தில் புரையோடிப்போன சாதி அமைப்பின் தாக்கங்களில் இருந்து விடுபடவில்லை."

"ஐயா! உங்கள் கொப்பாட்டன் பரம்பரை சாதித்தடிப்பில் இருந்து வருகிறது."

"ஐயா! பெரும்பான்மை மனிதர்களை அடக்கி அரசியல் நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட பிராமணிய சிந்தனை உங்கள் மண்டையில் உறைந்து கிடக்கின்றது. உங்கள் சொந்தக் கிராமத்தின் புரையோடிப் போன பிற்போக்கு சிந்தனைகளில் இருந்து விடுபடவில்லை. அவற்றை அசிங்கமாக வாந்தி எடுக்கிறீர்கள்."

இவ்வாறு அந்தப் பிரசுரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தெரிவித்துள்ளது.

சிவாவின் பிறந்த ஊரைச் சொல்லியும், சாதி வெறியுள்ளவர் என்று சாடியும் தரமற்ற அரசியல் பிரசாரத்தை ஈ.பி.ஆர்.எல்.எஃப். செய்வதாக கூட்டணியினர் கண்டித்துள்ளனர்.

வடமராட்சி சாதி வெறியுள்ள பகுதி போல சித்தரிக்கப்படுவதும், எக் கட்டத்திலும் சாதி ரீதியான கருத்துக்களை கூட்டணி முன்வைக்காதபோது சாதியை இழுத்துப் பேசுவதும் ஆரோக்கியமற்ற அரசியல் பிரசாரமாகும் என்பது அவர்களின் வாதம்.

கூட்டணியினரின் அரசியல் கருத்துக்களோடு மோதாமல் சிவாவின் குடும்ப பின்னணியை இழுத்தும், 'கொப்பாட்டன் பரம்பரை' என்று சொல்லியும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியிட்ட பிரசுரம் வாக்காளர்களை முகம் சுளிக்கவைத்திருக்கிறது.

அந்தப் பிரசுரத்திற்கு கூட்டமொன்றில் பதில் அளித்த திரு.சிவசிதம்பரம், 'நான் சட்டையை கழற்றிவிட்டு ஒன்றுக்கு பத்துத் தடவை பார்த்துக்கொண்டேன். பூணூலை அங்கே காணவில்லை" என்று தெரிவித்தார்.

திரு.சிவாவின் பிறந்த ஊரான வடமராட்சியை இழுத்துப் பேசுவது மூலமாக அவர் வெளி மாவட்டக்காரர் என்று மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். வவுனியா வேட்பாளர் பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ள திரு.சுரேஷ் பிரேமச்சந்திரனும் வெளி மாவட்டக்காரர் என்பதுதான் வேடிக்கை.

## சொல் எறி போதுமே கல்லெறி ஏனய்யா?

(ஏறாவூர் நிருபர்)

மட்டு.ஐ.தே.க. அமைப்பாளர் செய்யதலி மௌலானா தலைமையிலான குழுவினர் மட்டு.மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்துவிட்டு ஏறாவூர் வரும்போது மக்களினால் வரவேற்கப்பட்டு ஊர்வலமாக பிரதான வீதி வழியாக அழைத்து வரப்பட்டனர். முன்னாள் சுரோஸ் பா.உ.வும் தற்போதை ஸ்ரீ.ல.மு.கா. வேட்பாளருமான பஷீர் சேகுதாவூத்தின் இல்லத்தருகே ஊர்வலம் வரும்போது ஊர்வலமாக வந்தவர்கள்மீது அவ்விடத்தில் கற்கள் வீசப்பட்டன.

இதனால் மௌலானா உட்பட ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தாக்கப்பட்டார்கள். பொலிசார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு குழப்பத்தைத் தடுத்தனர். சரமாரியான கல் வீச்சின்போது வீதியருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஷீர் சேகுதாவூத்தின் வான் கண்ணாடிகள் உடைந்தன.

குழப்பத்தைத் தவிர்க்கு முகமாக அனைவரையும் அமைதி காக்குமாறு மௌலானா அவர்கள் வேண்டிக்கொண்டார். ஒரு மணிநேரம் தடைப்பட்ட ஊர்வலம் வேறு வழியாக டாக்டர் பரீத் மீராலெப்பையின் அடக்கஸ்தலம் சென்று புன்னைக்குடா வீதி வழியாகச் சென்று முடிந்தது. ஊர்வலத்தில் ஐ.தே.க. வேட்பாளரும் ஓட்டமாவடி பிரதேச சபைத் தலைவருமான முஹைதீன் அப்துல் காதர் அவர்களும் கலந்து கொண்டார்.

மௌலானா அவர்கள் பொலிஸ்மா அதிபருடன் தொடர்புகொண்டதற்கிணங்க உடனடியாகப் பாதுகாப்புப் படையினர் அழைக்கப்பட்டு ஏறாவூரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

## வன்னியில் ஒரு வேடிக்கை! சின்னம் தேட முடியவில்லை!

வன்னியில் சுயேச்சைக் குழு ஒன்றின் சார்பில் போட்டியிடுபவர் திரு.கா.த. குலேந்திரன்.

அரசியல் ஈடுபாடே இல்லாமல் வெளி நாட்டுக்கு ஆட்கள் அனுப்பும் ஏஜென்சி வேலை நடத்திக்கொண்டிருந்தவர்.

இவரது சகோதரர் புலேந்திரன் ஐ.தே.கட்சியின் வவுனியா அமைப்பாளராக இருந்து, தமிழ் இயக்கமொன்றால் கொல்லப்பட்டார். அதன் பின்னர் அவரது மனைவியான திருமதி ராஜமனோகரி புலேந்திரன் அரசியலுக்கு வந்து ராஜாங்க அமைச்சரானார்.

திரு.குலேந்திரனுக்கு தனது மைத்துனியோடு ஒத்துப்போவதில்லை.

குடும்ப உறவுகளில் உள்ள கசப்பு இப்போது அரசியல் மோதலாக வெடித்திருக்கிறது. மைத்துனிக்கு சேரும் வாக்குகளைப் பிரிக்க மைத்துனர் குலேந்திரன் தேர்தலில் குதித்திருக்கிறார். தன்னோடு ஒரு பத்துப்பேரைச் சேர்த்து ஒரு வேட்பாளர் பட்டியலும் வெளியிட்டு பிரசாரமும் நடத்திவருகிறார்.

ஆரோக்கிய அரசியலுக்கு குழிவெட்டும் குலேந்திரன் போன்றவர்களுக்கு பொருத்தமான சின்னமாக மண்வெட்டி வழங்கப் பட்டுள்ளது.

ஆனால், பிரசுரம் அடித்து அதிலே சின்னம் பொறிக்க மண்வெட்டிப் படம் தேடிக் குலேந்திரனும் அவரது குழுவினரும் களைத்துப்போனார்கள்.

எனவே தமது பிரசுரத்தில் சின்னம் இருக்கவேண்டிய இடத்தில் 'மண்வெட்டி' என்று குறித்திருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| சுயேச்சைக்குழு | மண் வெட்டி | X |

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் எல்லாம் வானம் ஏறி வைகுந்தம் போக ஆசைப்படும் காலம் இது.

## தேர்தல் சூடு- எரிந்தது அலுவலகம்!

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை அமைச்சர் மன்சூருக்கு பலத்த அடி கொடுப்பதில் முஸ்லிம் காங்கிரஸ் குறியாக இருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மன்சூரின் தோல்வி மறக்க முடியாததாக இருக்கவேண்டும் என்று தனது ஆதரவாளர்களிடம் வலியுறுத்தி இருப்பதாகவும் மு.காங்கிரஸ் வட்டாரம் கூறுகிறது.

மற்றொரு அமைச்சரான அப்துல் மஜீத் சம்மாந்துறையில் தனக்குரிய செல்வாக்கை ஒன்றுதிரட்ட முயன்று வருகிறார். இதனால் ஐ.தே.கட்சி அலுவலகம் ஒன்று அங்கு கொளுத்தப் பட்டுள்ளது. மஜீத்தின் செல்வாக்கை கண்டு பயந்து தான் அலுவலகத்தை கொளுத்தினார்கள் என்று மு.காங்கிரஸ்மீது குற்றம் சாட்டுகிறார்கள் மஜீத்தின் ஆதரவாளர்கள். தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்கிறது மு.காங்கிரஸ்.

## 'செருப்படி' பேச்சால் வெறுப்பு

### -நிருபரோடு துள்ளிய வேட்பாளர்-

திருமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பிரசாரங்களால் ஏனைய தமிழ் கட்சிகள் அதிர்ச்சி யடைந்துள்ளன.

தமிழ் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் வந்தால் "செருப்பால் அடியுங்கள்" என்று ஒரு அமைப்பினர் சில பகுதிகளில் கூறிச்சென்றார்கலாம்.

"ஓடிப்போன தலைவர்களுக்கு இங்கே என்ன வேலை?" என்று தமிழ்கட்சிகள் கூட்டணியை பற்றிப் பேசுவது வாக்காளர்களை திருப்தி செய்யும் பேச்சாக இல்லை.

"இவர்கள் மட்டும் என்ன ஓடாமல் நடந்தா போனார்கள்? கூட்டணித் தலைவர்கள் சொந்த செலவில் போனார்கள். இவர்கள் இந்திய அரசின் செலவில் கப்பலில் ஓடினார்கள்" என்று வாக்காளர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

திருமலையை மாகாணசபையின் தலைநகராகியதாகச் சொல்லி ஈ.பி.ஆர்.எல்.எஃப். வாக்கு கேட்பதும் ஏனைய தமிழ் கட்சிகளுக்கு பிடிக்கவில்லை.

"திருமலைதான் தமிழீழத்தின் தலைநகரம் என்று 77 பொதுத் தேர்தலில் நாம்தான் அறிவித்தோம்." என்கிறது கூட்டணி.

"மாகாணசபைக்கு கட்டிடம் கட்டுவதாகக் கூறி சுருட்டிய நிதிபற்றியும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கூறட்டும்" என்கிறார்கள் ஏனைய தமிழ் கட்சியினர்.

இதே சமயம் திருமலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக போட்டியிடும் திரு.தில்லை முகிலன் முரசோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

"நான் ஒரு இலட்சம் ரூபா இயக்கத்துக்கு கொடுத்துவிட்டு அதனை மீளப்பெறவே தேர்தலில் போட்டியிடுவதாக செய்தி வெளியிட்டுள்ளீர்கள்.

நான் கொடுக்கும் நிலையில் வசதியானவன் அல்ல. தருவதை வாங்கும் நிலையில் இருப்பவன்." என்று கூறினார்.

வாங்கும் நிலையில் இருப்பவரான தி.முகிலன் இதுவரை தேர்தல் செலவுக்காக எவ்வளவு வாங்கியுள்ளார் என்பதையும் தெரிவித்திருக்கலாம். வெளியிட்டிருப்போம். திருவாளர் தில்லை முகிலன் தினமுரசின் திருமலை நிருபரோடும் துள்ளியுள்ளாராம்.

தில்லை முகிலனுக்கு உள்ள செல்லப்பெயர் 'தில்லு முல்லு' மாகாணசபை காலத்தில் ஆயுதத்தோடு திரிந்த அதட்டி மிரட்டிய நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வேட்பாளர் நமது நிருபரோடு நடந்து கொள்ள பார்த்திருக்கிறார் என்று நினைக்கிறோம்.

திரு.தில்லை முகிலனின் மறுப்பை முரசு ஏற்கிறது. அவர் இப்போது வாக்குகளை வாங்கும் நிலையில் இல்லையென்றாலும், வேட்பாளர் பட்டியலை நிரப்பிய கூலி தரப்படுமானால் அதனை வாங்கும் நிலையில் உள்ளதை அனுதாபத்தோடு நோக்குகிறோம்.

## 'வரமாட்டேன் போ' கூட்டமும்-ஆள் திரட்டலும்

திருகோணமலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று ஜமாலியா மைதானத்தில் நடைபெற்றது.

சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டபோதும் கூட்டம் குறைவாக காணப்பட்டது.

பிரதமர் என்ன நினைக்கப் போகிறாரோ என்று பரபரப்பான ஐ.தே.கட்சி பிரமுகர்கள் வீடு வீடாக சென்று கூட்டத்திற்கு வருமாறு 'அன்புத்'தொல்லை கொடுத்தார்கள்.

தாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் காரர்கள் என்று முகத்துக்கு நேராகவே கூறிய பலர் கூட்டத்திற்கு வர மறுத்து விட்டனர்.

ஐ.தே.கட்சியினரின் ஆள் திரட்டலுக்கு கூட மாட உதவிய பொலிசார் களைப் படைந்து "இவர்களால் எமக்கு தொல்லை" என்று முணுமுணுத்ததும் காதில் விழுந்தது.


ADVT

## மீன்பாடும் தேன்நாட்டில் தித்திக்கும் ✝ தெய்வத்தின் கிருபை தேடி ✝

### சில நாட்கள்


05 வருட தலைவலி- தோல்வியான குடும்ப வாழ்விலிருந்து விடுதலை பெற்றவர்.


06 வருடம் தொடர்ந்து காய்ச்சல். 05 வருட அஸ்த்மாநோய் ஜெபத்தால் சுகம் பெற்றவர்.

இன்று நாடுகளும், தேசங்களும் இறைவனின் இயற்கை காரியங்களை எடுத்து இயம்ப முடியாதவாறு முழு உலகமும் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத நிலை. மனிதனின் கண்ணீர் செந்நீராக மாறி, நீலவானம் சிவந்த சமுத்திரமாக தெரிகிறது.

மனிதனின் செந்நீர் உயிருக்கும் உலகுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்நிலையிலே சமாதானம் எங்கே? சாந்தி எங்கே? விடுதலை எங்கே? என்று ஒவ்வொருவரும் அங்கலாய்க்கும் நிலை உருவாகி வேதனையின் விழிம்பிலே மனுக்குலம் நிற்கிறது. மதம் எனும் மாயையான கண்ணாடியிலே தெய்வத்தின் பிரதிபிம்பத்தை பிரதிபலிக்க முடியாத நிலையிலே, எமது கண்ணீர், வேதனை, நோய் போன்ற பிரச்சினைகள் தீர அம் மெய் தெய்வத்தின் திருப்பாதத்தில் இயேசு ஜீவிக்கிறார் பணியின் சுவிசேஷ கூட்டம் மட்டக்களப்பு நகரில் நடைபெறுகிறது.

திரண்டு வந்து தெய்வீக அருளை பெற்றுக்கொள்ளுங்கள்!


பிறவியிலேயே மூளை வளர்ச்சி இல்லை. சுயநினைவற்ற நிலை, வைத்தியர்கள் கைவிட்டபோதும் தேவ கிருபையால் சுகமான வாலிபன்.


குண்டு விபத்தின் மூலமாக அதிர்ச்சியடைந்து நரம்புத் தளர்ச்சி, நடக்க முடியாத நிலை, பிரசவகாலம்- பிரசவத்தில் மரித்துவிடுவார் என கூறப்பட்டது. தேவ கிருபையால் சுக பிரசவத்துடன் இன்று சுகமாக இருக்கிறார்.

இடம்: வேபர் அரங்கு, மட்டக்களப்பு
காலம்: யூலை 27–31 வரை

(நாட்டின் சூழ்நிலை நிமித்தமாக பகல் 1.30 முதல் மாலை 5.30வரை நடைபெறும். வெய்யில் வேளையிலும் நிழலில் அமர்ந்து பங்குபற்றும் வண்ணமாக திறந்த கூடாரம் அமைக்கப்படும்.)

செய்தி: சகோதரன் செ.இராஜேந்திரம்
இயேசு ஜீவிக்கிறார் பணி
கொழும்பு.


17 வருட தலைவலி, நரம்புத் தளர்ச்சி, சுய நினைவு அற்ற நிலை, நித்திரை இல்லை, ஒரு நாளைக்கு 15 முறை மருந்து குடிக்க வேண்டும் ஜெபத்தால் சுகமடைந்தார்.

குறிப்பு: பிரயாண வசதிகள் உண்டு. பிரயாண வசதிகள் இல்லாதவர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்துதர கவனிக்கப்படும்.

தியாக உள்ளத்தோடு கலந்து தெய்வத்தின் அருளை பெற்றுக்கொள்ளுங்கள்.

இலவசம்!

JESUS LIVES
P.O.BOX- 1044
COLOMBO.


## விளம்பரப் பகுதி


பாடல் பதிவால் பலரது மதிப்பை பெற்ற ஸ்தாபனம்

VICTOP RECORDING STUDIO

356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6. Phone-592453

பழைய-புதிய திரைப்படப் பாடல்கள், பக்திப் பாடல்கள் முக்கியமான கர்நாடக சங்கீதப் பாடல்கள் யாவற்றையும் இசைத்தட்டுக்களில் இருந்து நேரடியாக பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப்படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

* T.V.—டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

பயிற்சி வகுப்புக்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

* கேக் வகைகள்
* சிற்றுண்டிகள்
* கறி சோறு வகைகள்
* ஸ்டொக்கினட் பூக்கள் (Stockynut Flowers)
* சில்க் ரிபன் பூக்கள் (Silk Ribbon Flowers)

ஆகஸ்ட் 6ம் திகதிக்கு முன் நேரில் வந்து சந்திக்கவும்.

Niranjani Selvarajah
55, Vivekananda Hill,
Kotahena, Colombo 13.

அக்குறணையில் பஜ்ரியாஸ்

தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் புனித குர்ஆன், நவீன இஸ்லாமிய- இலக்கிய வெளியீடுகள், பாடசாலைப் புத்தகங்கள், பேக் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், சுத்தமான அத்தர் வகைகள், பிளாஸ்டிக் பென்சில் சாமான்கள், எல்லாவிதமான வாழ்த்து மடல்கள், கைக்கடிகாரங்கள், பரிசுப் பொருட்கள் இவையனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள பலவருடகாலம் தமது சேவையைச் சிறப்புற ஆற்றி வரும் எம்மையே நாடுங்கள்.

பஜ்ரியாஸ் நியூ பஜ்ரியாஸ்
பள்ளி வீதி அஸ்னா மார்க்கட்
அக்குறணை-6 அக்குறணை-6

பெயர் மாற்றம்

இல.215/1 புளுகொஹதன்ன, அக்குறணையில் வசிக்கும் கறுப்பையா சுப்ரமணியம்- சுப்பிரமணியம் பெரிய நாயகி ஆகிய நாங்கள் இருவரும் இன்றுமுதல் எமது பெயர்களை முறையே,

மொஹமட் நஜீம்
சித்தி பாத்திமா

என்று மாற்றி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவோம் என்பதனை இத்தால் தெரியப்படுத்துகிறோம்.

கண்டியில்

தேர்தல் விளம்பரங்கள் உட்பட மற்றும் விளம்பரங்களுக்கும், முரசு பிரதிகளுக்கும் தொடர்பு கொள்ளவும்—
விநியோகஸ்தர்
தினமுரசு
31, யட்டிநுவர வீதி
கண்டி.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்
விளம்பரதாரர்-விளம்பர முகவர்கள் கவனத்திற்கு
எமது புதிய முகவரி

| | |
|---|---|
| விளம்பர மேலாளர் | Advertising Manager |
| இல.5, காவிந்த பிளேஸ் | No. 5, Kavinda Place, |
| கிருலப்பனை | Kirulapone, |
| கொழும்பு-6. | Colombo-6. |

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பகிரங்கமாகும் அரசியல் அவலங்கள்!

நாரதர்

தேர்தல் திருவிழாவிலே மட்டும்தான் ஜனநாயகத்தின் அருமையை சகல கட்சிகளும் மக்களுக்கு நினைவூட்டுவார்கள்.

அதிலும் தமிழ் கட்சிகள் பேசும் ஜனநாயகம் கேட்க, நல்ல சுவையாக இருக்கும்.

தங்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்ப ஜனநாயகத்தின் நீள, அகல, உயரங்களை தமிழ் கட்சிகள் தீர்மானித்துக்கொள்கின்றன.

கடந்த பாராளுமன்றத் தேர்தல் வடக்கு-கிழக்கிலே நடந்தபோது ஈ.பி.ஆர். எல்.எஃப். எஜமானாக இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் பொதுப் பட்டியலில் தமிழ் கட்சிகள் போட்டியிட வேண்டும் என்று இந்தியா முடிவு செய்திருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதற்கு விரும்ப வில்லை.

ஆனாலும் இந்தியாவின் முடிவை மீறினால் தமது மாகாணசபை அதிகாரமே ஆட்டம் காணும் என்பதால் ஒப்புக் கொண்டது.

ஈரோஸ் மட்டும் தனித்து நின்று போட்டியிடட்டும் என்று இந்தியாவும் விரும்பியது.

ஜனநாயகத் தேர்தல் ஒன்றை அமைதிப்படை நடத்தி முடித்தது என்று சொல்வதற்கு ஈரோசின் போட்டி உதவியாக இருக்கும் என்பதுதான் இந்தியாவின் முடிவுக்கு காரணம்.

அதனால்தான் ஈரோசுக்கும் இந்தியா ஆயுதம் வழங்கியது. தேர்தல் செலவுக்கு பணமும் கொடுக்கப்பட்டதாகவும் தகவல்.

கூட்டணியின் தலைமையில் பொதுப் பட்டியலில் போட்டியிட்ட ஈ.பி.ஆர். எல்.எஃப். உட்பட சகல தமிழ் அமைப்புக்களும் பொதுப்பட்டியலுக்கு எதிராகவே வேலை செய்தன.

யாழ் மாவட்டத்தில் கூட்டணியினர் தேர்தல் பிரசாரம் செய்யக்கூட அதிகாரங்களையும் பயன்படுத்தி பொதுப் பட்டியலில் உள்ள கூட்டணித் தலைவர்களுக்கு எதிராக வேலை செய்தார்கள்.

பொதுப்பட்டியல், பொதுச் சின்னம் என்று அறிவித்துவிட்டு உள்ளேயே நடந்த கழுத்தறுப்புக்களால் தனித்துப் போட்டியிட்ட ஈரோஸ் இலாபம் அடைந்தது.

இந்தியப் படைக்கு தலையையும், புலிகளுக்கு வாலையும் காட்டிக்கொண்டு ஈரோஸ் அதிக ஆசனங்களை அறுவடை செய்துகொண்டது.

தேர்தலில் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் தோற்றுப் போனார்கள். வாக்களிப்பில் நடந்த மோசடிகளும், பிரசார தடைகளும் தோல்விக்கு காரணமாக அமைந்தன.

எனினும் தேசியப் பட்டியல் மூலமாக அமரர் அமிர்தலிங்கம் பாராளுமன்றம் செல்ல முடிந்தது.

அந்த நேரத்தில் வரதராஜப்பெருமாளுக்கு அமிர்தலிங்கம் வெட்கமில்லாதவராக, சூடு, சொரணையில்லாதவராக தெரிந்தார்.

"தேசியப்பட்டியலில் போகிறீர்களே ஐயா" என்று அமுதரைப் பார்த்து பெருமாள் கைகொட்டிச் சிரித்தார்.

தாம் சிரித்தால் போதுமா? ஊரும், உலகமும் சிரிக்கட்டும் என்று அறிக்கையும் விடுத்தார். அதுதான் அன்று ஈ.பி.ஆர். எல்.எஃப். வழங்கிய ஜனநாயகம்.

ஆனால் என்ன பரிதாபம் பாருங்கள். இம்முறை நடக்கும், பாராளுமன்றத் தேர்தலில் அதே வரதராஜப்பெருமாளின் பெயர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சியின் தேசியப் பட்டியலில் காணப்படுகிறது.

பாராளுமன்றத் தேர்தலில்-நேரடியாகப் போட்டியிட்டால் தோல்விவரும் என்று தெரிந்து- அவரே முன்னர் சொன்னதுபோல- பின் கதவால் செல்ல ஆசைப்படுகிறார்.

இப்போது அவரோ அவரது கட்சியோ அதிகாரம் இன்றி இருப்பதால் தேசியப் சொல்லுகின்றன.

அந்த குற்றப் பட்டியலை பார்த்தால் இவர்கள் ஏன் அந்த அமைப்புக்களோடு ஒற்றுமைக்கு போக நினைத்தார்கள் என்று நமக்கு குழப்பம் வருகிறது.

யாழ் மாவட்டத்திலே தேர்தல். பொதுப் பட்டியல் தயாரிக்க வேண்டும் என்று தமிழ் கட்சிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் புத்தி சொல்லுகிறார்.

தங்களுக்குள் ஒன்றுபட்டு சிந்திக்க முடியாத தமிழ் அரசியல் கட்சிகள் பாதுகாப்புப்படை செயலாளரின் முன்பாக பள்ளி மாணவர்கள் போல அமர்ந்திருந்தார்கள்.

கூட்டணியும், குமார் பொன்னம்பலமும் மட்டும்தான் தமது கருத்தை சொல்லிவிட்டு எழுந்து கொண்டார்கள்.

படையினரோடு நிற்கும் தமிழ் கட்சிகளோடு ஒற்றுமை முயற்சியில் தாம் ஈடுபடவில்லை என்று அறிக்கைவிட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். பாதுகாப்பு செயலாளர் எடுத்துக்கொண்டு ஈ.பி.டி.பி. ஆரோக்கிய அரசியலை உருவாக்க முடியாது.

யாழ் மாவட்டத் தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு சாதகம் அதிகம் இருக்கிறது.

கடந்த நான்கு வருடமாக அங்குள்ள தீவுப் பகுதிகளில் நிலைத்திருப்பது அதன் பலம்.

தேர்தல் அறிவிக்கப்பட்டபின் அங்கு செல்லும் கட்சிகளுக்கு அந்தப் பலம் இல்லை என்பதே பலவீனம்.

எனினும், யாழ் மாவட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகளது பிரசாரங் களுக்கு ஈ.பி.டி.பி தடையாக இருக்கு மானால் அதன் ஜனநாயக கோசங்கள் கேள்விக்குள்ளாகும்.

தாம் சொல்வதைச் செய்வோம் என்கிறது ஈ.பி.டி.பி. அப்படியானால் தாம் சொல்லும் ஜனநாயகத்தை அது நடைமுறைப்படுத்தி காட்டவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை தனது அரசியல் ஆளுமையை வெளிப்படுத்தியே தீருவது என்று சங்கற்பம் பூண்டுள்ளது.

ஆனால், தம்பிமார் பார்த்துத்தான் வாசிப்பார்கள் என்று கூட்டணி அடிக்கும் கிண்டலில் அர்த்தமில்லை.

1977 பொதுத் தேர்தலில் யாழ் தொகுதியில் போட்டியிட்ட திரு.யோகேஸ்வரன் ஆரம்ப பிரசார கூட்டங்களில் தமிழை உச்சரிக்கவே கஷ்டப்பட்டார். ஆனால், அவரைத்தான் இளைஞர்களது தலைவன் என்று கூட்டணியினர் அறிமுகம் செய்தார்கள்.

இப்போதுகூட திரு.நீலன் திருச்செல்வத்தின் தமிழ் உச்சரிப்பு தடுமாறுகிறது.

ஆகவே கூட்டணியினரின் அவ்வாறான கேலிகள் அவர்களையும் திருப்பிச் சுடும்.

சிறந்த பேச்சாளர்கள்தான்



## அரோகரா அரோகரா போடு X அரோகரா!

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அனுமதிக்கவில்லை.

யாழ்ப்பாணம் அசோகா ஹோட்டலில் போய் காத்திருந்துவிட்டு அமிர்தலிங்கம் ஏமாற்றத்தோடு கொழும்பு திரும்பினார்.

கிழக்கில் வேட்பாளர் பட்டியலில் அமரர் அமிர்தலிங்கத்தின் பெயர் முதலிடத்தில் இருந்தது.

ஆனால் ரெலோவும், ஈ.பி.ஆர். எல்.எஃப். இனரும் அமுதரை தோற் கடித்தே தீருவது என்று உறுதியான முடிவோடு வேலை செய்தார்கள்.

அமுதரும் தம்மோடு பாராளுமன்றம் வந்தால் தமது குரல் எடுபடாமல் போகும்.

கூட்டணியினருக்கு தமிழ் மக்களிடம் உள்ள செல்வாக்கு வெளிப்படுமானால் இந்தியா தம்மையெல்லாம் ஓரம்கட்டி விட்டு கூட்டணியைத்தான் முன்னுக்கு கொண்டுவரும் என்றெல்லாம் யோசித்து கூட்டுக்குள் குழி பறிப்பு நடத்தினார்கள்.

அப்போது வடக்கு-கிழக்கு மாகாண முதல்வராக இருந்தவர் திரு. வரதராஜப்பெருமாள்.

அமரர் அமிர்தலிங்கம் மக்களால் ஏற்கப்படும் தலைவராக மீண்டும் வெளிப்படுத்தப்பட்டால் தனது ஆர்ப் பாட்ட அரசியலுக்கு ஆபத்தாகிவிடும் என்று பயந்தார்.

அதனால், மாகாணசபையின் சகல கெட்ட கோபம் வந்துவிட்டது.

எவ்வளவு கஷ்டப்பட்டும், எவ்வளவோ முயன்றும் அமுதர் பாராளுமன்றம் செல்வதை தடுக்க முடியவில்லையே என்று ஆத்திரப்பட்டார்.

"அமிர்தலிங்கத்தாருக்கு வெட்கமில் லையா? மக்களால் நிராகரிக்கப்பட்டவர் பின் கதவு வழியாக பாராளுமன்றம் செல்வது நியாயமா?" என்று ஒரு அறிக்கைவிட்டார். பத்திரிகைகளிலும் அது வெளியாகியிருந்தது.

வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாளின் கருத்துப்படி தேசியப் பட்டியல் என்பது பின்கதவு வழியாக பாராளுமன்றம் செல்லும் முறை.

அதுவும் மக்களால் நிராகரிக்கப்பட்ட வர்கள் வெட்கமில்லாமல் பாராளுமன்றம் செல்லும் வழிதான் தேசியப் பட்டியல்.

திரு.பெருமாளின் கையில் அன்று அதிகாரம் இருந்தது. இந்தியாவும் வேறு யாரும் இல்லை என்ற நிலையில் அவரது கட்சியை அரவணைத்துக்கொண்டிருந்தது.

எனவே-வாக்குச் சாவடிகள் மூலமாக நேர்வழி மற்றும் குறுக்குவழியில் சில வெற்றிகளையாவது அவரது கட்சி பெறக்கூடிய சூழல் இருந்தது.

எனவே-தேசியப் பட்டியல் அவரால் கேலி செய்யப்பட்டது.

சரியோ, தவறோ தமிழ்பேசும் மக்களது உரிமைப் போராட்டத்தில் அடிபட்டு உதைபட்டு, இரத்தம் சிந்திய அமரர் பட்டியலும் ஜனநாயகமான வழிமுறையாகத் தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் பொதுப் பட்டியலில் நின்றபடியே தம்மால் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்ட கூட்டணியினரின் அலுவலகக் கதவுகளை இம்முறை ஈ.பி.ஆர்.எல்.எஃப். போய் தட்டியது.

"ஐயா கூட்டுக்கு வாருங்கள். உங்கள் சின்னத்தில் பொதுப் பட்டியலில் எங்களுக்கும் இடம் தாருங்கள்" என்று கேட்டார்கள்.

"முடியாது போ வெளியே" என்று கூட்டணியினர் கதவை அறைந்து சாத்தி விட்டார்கள். இது கூட்டணியின் முறை. கடந்த தேர்தலில் பட்ட காயத்தை மறக்காமல் பழிவாங்கிவிட்டார்கள்.

கூட்டாக போட்டியிட கூட்டணியிடம் விண்ணப்பம் போட்டபோது ஈ.பி.ஆர். எல்.எஃப். கூட்டணியினரை புனிதமானவர் களாக நினைத்தது.

அவர்கள் கூட்டுக்கு மறுத்தபோது துரோகிகள் என்றும், சாதித்திமிர், பரம்பரை செருக்கு கொண்டவர்கள் என்றும் கண்டுபிடித்து அறிக்கை விடுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மட்டுமல்ல ரெலோ, புளொட், ஈரோஸ் என்று சகல அமைப்புக் களும் தாம் ஒற்றுமைக்கு முயற்சி செய்தோம் என்று அறிக்கை விடுக்கின்றன.

ஒற்றுமைக்கு தம்மால் அழைக்கப்பட்டு உடன்பட மறுத்த கட்சிகளது கடந்தகாலம் பற்றி ஒரு பெரிய பட்டியலில் குற்றம் முன்னிலையில் தனக்கு இரண்டு ஆசனம் கேட்டு கொள்கை உறுதியை வெளிப் படுத்தியது.

ஒரு காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பின் தலைமையில் இருந்தவர்கள்தான் இன்று ஈ.பி.டி.பியின் தலைமையிலும் இருக்கிறார்கள்.

ஒன்றாய் இருந்து இரு வேறானவர்கள் ஒன்றுபடுவது நடப்பதில்லை. அதுதான் இங்கே இயக்கவரலாறு.

எனவே-'ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பை யாழ் மாவட்டத்தில் முகம் கவிழ வைத்தே தீருவேன்' என்று ஈ.பி.டி.பி. அடம்பிடிக்கிறது. இந்திய அமைதிப்படை காலத்திய அத்து மீறல்களுக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். மக்களால் தண்டிக்கப்படவேண்டும். அதுதான் அவர்களோடு ஆசனம் பகிர மறுத்தோம் என்று சொல்கிறது.

கிழக்கில் ஈ.பி.டி.பி. இம்முறை போட்டியிடவில்லை.

அங்கு தமது அரசியல் பணிகளை மேலும் ஆழமாக்கி, சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்கப் போவதாக கூறியுள்ளது.

ஆனால், இந்திய அமைதிப்படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இருந்து அடித்துச் சுருட்டிய சிலரை ஈ.பி.டி.பி. உள்வாங்கியுமிருக்கிறது.

ஏனைய இயக்கங்களில் இருந்து காற்று மாறும்போது பக்கம் மாறிய பிரமுக அரசியல்வாதிகளை தன் தரப்பில் தலைவர்களாக வேண்டும், பாராளு மன்றம் செல்ல வேண்டும் என்றால் மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ராசதுரையைத்தான் 1977 பொதுத் தேர்தலில் கூட்டணி தனித்து நிறுத்தியிருக்க வேண்டும். காசி ஆனந்தனையும் போட்டிக்கு நிறுத்தி பலப்பரீட்சை நடத்த அனுமதித்திருக்கக் கூடாது.

முன்னுக்குப் பின் முரனான பேச்சுக்களும், தமது நிலைக்கேற்ற ஜனநாயக முழக்கங்களும் தேர்தல் திருவிழாவில் கேட்டவண்ணமுள்ளன.

அரோகரா கோசத்திற்குள் புள்ளடி களை பிடுங்கிக்கொள்ள எல்லோரும் ஜனநாயக பக்தர்களாகி விட்டார்கள்.


நேற்று நீ சொன்ன வார்த்தை காற்றோடு போயாச்சு. பொதுவாக சகல அரசியல்வாதிகளுக்கும் இது பொருந்தும்.

ஜனநாயகம் என்பதற்கு பொதுவான சில வரையறைகள் இருக்கின்றன.

ஆனால், நம் கட்சிகள் தம்மிடம் உள்ள பலம், பலவீனம், ஆயுதம், அதிகாரம், ஆட்பலம் பொறுத்து தமக்கு தேவையான விதத்தில் வரைவிலக்கணம் தருகின்றன.

இன்றைய தேர்தலிலும் அந்த வேடிக்கையும், அவலங்களும் வெளிப்படுகின்றன ●

## அதிரடி அய்யாத்துரை



கூட்டான கட்சியின் வரவு தம்பிமாரை ஒரு கலக்குத்தான் கலக்கியிருக்கு பாருங்கோ. பொல்லைக் கொடுத்து அடிவாங்குற கதையா விவாதங்களிலை மாட்டிக் கொள்ளுகினம் தம்பிமார்.

ரெண்டு எழுத்து இயக்கக்காரரின் பெயரை பாவிச்சு வெல்ல நினைக்கிற ஆட்களைப் பற்றிய விவரங்களை அவை திரட்டுறமாதிரி ஒரு தகவல். பதவி எடுக்க எங்கடை பெயரை பாவிக்கிற ஆட்களை விடமாட்டம் எண்டு யாழ் பகுதியிலை சொல்லுகினமாம்.

தேர்தல் பிரசாரத்திலை முசுபாத்தியளுக்கும் குறைச்சல் இல்லைப் பாருங்கோ. கிழக்கிலை மரச் சின்னக்காரர் ஒரு அமைச்சரை மாட்டுக்கார வேலன் என்று கேலி செய்தவையாம். மறுநாள் அந்த அமைச்சர் அதுக்கு சொன்னபதில்,"மாட்டுக்கார வேலன் எம்.ஜி.ஆர் ஆஸ்பத்திரியிலை இருந்துகொண்டு ஜெயிச்சவர். நானும் இலண்டன் போய் சத்திரசிகிச்சை செய்து கொண்டுதான் வந்தனான். வெற்றிமேல் வெற்றி வந்து என்னைச் சேரும்" எண்டாராம். இந்த சூடு பதில் சூடு விவகாரத்திற்கு காரணம் என்ன என்று தெரியுமோ? அந்த அமைச்சரை இரட்டை மாட்டு வண்டியிலே ஆதரவாளர்கள் ஊர்வலமாய் அழைத்துப் போனவையாம்.

இலக்கம் சொல்லி விருப்பு வாக்கு கேட்கிற விசயத்தில ஒரே கட்சியளுக்கையே வாயும், வயிறும் வேறை வேறை கதைதான்.

வேறை டிப்பாட்மெண்ட் போட்டுக்கொடுத்த றோட்டெல்லாம் தான் போட்டுக்கொடுத்த மாதிரி சொல்லித் திரியுறாராம் திருவான மலை நகரத்தின் தலைவர்.

கிழக்கிலை உள்ளூராட்சி சபை வாகனங்கள் அங்கை அங்கை அதிகாரத்திலை உள்ள ஆட்களுக்காக ஓடித்திரியுதாம். அரச வாகனங்கள் விட்டுக்கொடுக்குமோ? பச்சைக்காக ஓடித்திரிந்து பெற்றோல்-டீசல் குடிக்குதுகளாம். யாரும் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே.

கொழும்பிலை குமாரர் அணி படு சுறுசுறுப்பாத்தான் வேலை செய்யுது. குமாரரின் பாரியாரும் அவரை வெல்ல வைக்க பிரசார வேலைகளில் நேரடிக் கவனம் எடுக்கிறாராம்.

மாகாணசபை தமிழ் கட்சியின் செயலாளருக்கு விருப்பு வாக்குப்போடச் சொல்லி கேட்கும் பிரசுரங்கள் கொழும்பிலை இருந்து வன்னிக்குப் போனதாம். விழுமோ எண்டு பாக்கத்தான் போறம் எண்டு அந்த கட்சிக்காரர் சிலரோ பல்லைக் கடிக்கினமாம். எம்.பியா இருந்தால்தான் கட்சி நடத்தலாம் எண்டு சொல்லி தொண்டர்களை அனுதாப்பட வைக்கிற முயற்சியில் இறங்கியிருக்குதாம் செயலாளர் வட்டாரம்.

கொழும்பிலை நீலக் கலர் அதிகம் தெரிய, வெறுப்பாகிப் போன பச்சை வட்டாரம் நீலமும் வேண்டாம், பச்சையும் வேண்டாம் கழட்டி வீசுங்கோ எண்டு ஓடர் போட, தோரணங்கள், சோளைகள் மாயமாகிப்போச்சு.

அரசியல் வெப்பம் தணிக்க பாரதிதாசன் கவிதையில் ஒரு துளி.

"நிறைவிருட்டில் ஒரு புதிரைப் போட்டான்;
நிலவெரிப்ப தென்னவென்று கேட்டான்.
குறையுமதியும் இல்லை என்றேன்
குளிர் முகத்தில் முகம் அணைத்தான்"

அரசியல் களத்திலே எதிர்தரப்பை அடிக்கும்போதும் ஒரு நயம் கைக்கொள்க. காதலோ-மோதலோ எதிலும் ஒரு நயம் ஒரு இதம் மெத்த நல்லது.

இன்ரெலிஜென்ஸ் ரிப்போர்ட் 1

# திருமதி அமிருக்கு இடம்தர மறுப்பு!

# இறுதிவரை ஒற்றைக்காலில் நின்ற சம்பந்தர்!!

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இரு பிரிவுகள் இருக்கின்றன.

இளைஞர்களின் தியாகங்களையும் மதிக்க வேண்டும். அவர்களது பங்களிப்புக்களையும் மறுக்க முடியாது என்று கருத்துடையோர் ஒரு பிரிவினராக இருக்கின்றனர். இயக்கங்களது தவறுகளை விமர்சிக்கும் அதேவேளை, ஒரு காலகட்டத்தில் அவர்கள் செய்த பங்களிப்பையும் மறுக்கக்கூடாது. இன்று அவர்களில் பலர் பாதை மாறியிருப்பது பற்றிப் பேசலாம் என்பது அவர்களது வாதம்.

திரு.மாவை சேனாதிராஜா, திரு. தங்கத்துரை போன்றோர் அப்பிரிவில் முக்கியமானவர்கள்.

திரு.நீலன் திருச்செல்வம், திரு.சம்பந்தர் போன்றோர் இளைஞர்களின் தியாகங்கள் பற்றிய புறக்கணிப்பு உணர்வுகளை கொண்டவர்களாக இருக்கின்றனர்.

நீலன் திருச்செல்வம், தான் ஒரு சட்ட வல்லுநர் என்ற தகுதியொன்றுமே தலைவராகப் போதுமானது என்று நினைக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சாத்வீகப் போராட்டங்கள், கூட்டணியின் மிக முக்கிய வளர்ச்சிக் கட்டங்கள் என்பவற்றில் பங்குகொள்ளாத ஒருவராகவே அவர் இருப்பதால் ஒரு பிரமுகர் பாணியிலான நடைமுறையை வெளிக்காட்டி வருகிறார்.

திரு.தங்கத்துரை, மாவை சேனாதிராஜா போன்றவர்கள் தம்மையும் வருத்தி உழைத்து வளர்ந்தவர்கள். அதனால் அரசியல் அனுபவம் மட்டுமல்லாமல் ஏனைய தமிழ் அமைப்புக்களது சரி-தவறுகளை மதிப்பிட்டு அவர்களது தியாகங்களையும் மதிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் இந்த இரு பிரிவினருக்கும் இடையில் ஒரு சமரசப் போக்கை கடைப்பிடிக்கிறார்.

இந்த இரு.பிரிவுகளும் எதிர்வரும் பொதுத் தேர்தல் பற்றிய வியூகங்களை வகுப்பதில் முரண்பட்டுக்கொண்டன.

திருமலையில் போட்டியிட முதலில் விருப்பம் தெரிவித்த சம்பந்தர் அங்கு திரு.தங்கத்துரைக்கு உள்ள ஆதரவு தன்னை விட அதிகம் என்பதால் மெல்ல நழுவி விலகப்பார்த்தார்.

அவரையும் போட்டியிடவைப்பது பெரும் பாடாகிவிட்டது. விருப்பு வாக்குகள் கேட்டு பிரசாரம் செய்யாமல் கூட்டணி சின்னத்திற்கே வாக்குகள் கேட்பதை முதன்மைப்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்ட பின்னரே சம்பந்தர் அரைமனதோடு சம்மதித்தார்.

திருமலைமாவட்ட தேர்தல் விளம்பரங்கள் மற்றும் பிரசாரங்களில் மட்டுமே சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மட்டும் கூறப்படுகிறது.

**ஒற்றன்**

ஆனால், மட்டக்களப்பிலும், வன்னியிலும் கூட்டணியின் விளம்பரங்களிலும், பிரசாரங்களிலும் வேட்பாளர்களது இலக்கங்கள் குறியிடப்பட்டு விருப்புவாக்குகள் கோரப் பட்டுள்ளன என்பதை கூட்டணிப் பிரமுகர் ஒருவரே சுட்டிக்காட்டினார்.

தங்கத்துரையிடம் அடிவாங்குவது சம்பந்தருக்கு ஒரு பெரிய கௌரவப் பிரச்சனை.

ஆனால், கூட்டணியின் ஆரம்ப காலத்தில் சம்பந்தரைவிட பிரபலமானவராக அறியப்பட்டவர் திரு.தங்கத்துரை.

எனினும் 1970 பொதுத் தேர்தலில் திரு.தங்கத்துரையை வேட்பாளராக நிறுத்த அமரர் அமிர் மறுத்ததாகவும் அதனால் அமுதரோடு தங்கத்துரை முரண்பட்டிருந்ததாகவும் மற்றொரு கூட்டணி விசுவாசி கூறினார்.

அந்த விசுவாசி தனது கூற்றுக்கு ஆதாரமாக தமிழ் நாட்டில் திரு.தங்கத்துரை கூட்டணியோடு நெருக்கமாக இல்லாமல், தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசனின் தமிழ் ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தோடு இணைந்து வேலை செய்ததை குறிப்பிடுகிறார்.

ஆயினும் திருமதி அமிர் விடயத்தில் திரு.தங்கத்துரை அவருக்கு இடம்கொடுக்கப் பட வேண்டும் என்று வாதாடியதை வரவேற்கலாம் என்கிறார் அந்த விசுவாசி.

தமிழ் நாட்டில் கூட்டணியினர் அடைக்கலமாகி தமது அரசியல் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியோடு இருந்தபோது அமரர் அமிர்தலிங்கத்தோடு பக்கபலமாக நின்றவர் மாவை சேனாதிராஜாதான் என்கிறார் ஒரு அமிர்தலிங்கம் விசுவாசி.

இதேவேளை கூட்டணியின் தேசியப் பட்டியலை தயாரிக்கும் விவாதத்தில் இந்த இரு பிரிவுகளும் காரசாரமாக முரண்பட்டுக் கொண்டன என்கிறது விஷயம் தெரிந்த வட்டாரம். அந்த வட்டாரத்தை மேலும் கிளறியபோது கிடைத்த தகவல்கள்:

தற்போது இலண்டனில் இருக்கும் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தை தேசியப் பட்டியலில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று தங்கத்துரை, மாவை போன்றோர் கூறியுள்ளனர்.

திருமதி அமிரின் பெயரைக் கேட்டவுடன் துள்ளிக்குதித்தவர்கள் இருவர்; ஒருவர் திருவாளர் சம்பந்தர். மற்றவர் சட்டத்தரணி நீலன் திருச்செல்வம்.

கூட்டணித் தலைவர் சிவாவும் திருமதி அமிருக்கு இடமளிப்பதில் தனக்கு ஆட்சேபனை கிடையாது என்றுவிட்டார். விவாத முடிவில் நீலனும் விட்டுக்கொடுக்கும் நிலைக்கு இறங்கியிருக்கிறார். ஆனால் செயலாளர் நாயகம் சம்பந்தர் பிடித்த பிடியை விடவேயில்லையாம்.

அதனால் சம்பந்தரின் முகம் கோணாமல் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் பெயர் இல்லாமல் தேசியப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

அரசியலின் பக்கமே எட்டிக்கூடப் பார்க்காமல் இருந்த திருமதி சரோஜினி யோகேஸ்வரனை கொழும்பில் திரு.குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேச்சைக் குழுவில் கூட்டணி தனது வேட்பாளர்களில் ஒருவராக நியமித்துள்ளது.

ஆனால் "தமிழரசுக் கட்சிக்காலத்தில் இருந்து கூட்டணியின் மேடைகள்வரை "வாழ்க ஈழத் தமிழகம் வாழ்க வாழ்க வாழ்கவே" என்று பாடியும், பேசியும் போராட்டங்களில் அமுதரோடு சேர்ந்து கலந்தும் கொண்ட திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தை மட்டும் தூக்கிப்போட்டு விட்டது. இதைப் போய் யாரிடம் சொல்லி அழ" என்கிறார்கள் விஷயமறிந்த கூட்டணி விசுவாசிகள்.

அதுசரி, திருவாளர் சம்பந்தருக்கு அப்படி என்ன கோபம் திருமதி அமிர் மீது?

இன்ரெலிஜென்ஸ் ரிப்போர்ட் 2

# வேட்பாளர்களை வாபஸ் வாங்குவோம்

# குமார் அணிக்கு நீலன் மிரட்டல்!



திரு. குமார்

கொழும்பில் திரு.குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேச்சைக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அக்குழுவில் பலர் போட்டியிட்டாலும் திரு.குமார் மட்டுமே அரசியல் அரங்கில் அறியப்பட்ட ஒருவராக இருக்கிறார்.

அக்குழுவுக்கு வரும் வெற்றியோ தோல்வியோ அது குமார் பொன்னம்பலத்தை மட்டும் சார்ந்ததாகவே அமையும். அக்குழுவில் இருக்கும் மீதிப்பேர் ஆகஸ்ட் 16க்குப் பின் தம் சொந்த அலுவல்களை கவனிக்கச் சென்றுவிடுவார்கள்.

கூட்டணிகூட பிரபலமான எவரையும் கொழும்பில் நிறுத்த முன்வரவில்லை. பாவம், திருமதி யோகேஸ்வரன்! இப்போதே எம்.பியாகிவிட்டது போன்ற கனவில் இலயித்துப்போய் இருக்கிறார். ஆகஸ்ட் 17ல் அந்தக் கனவு கலையும்போது கஷ்டமாகத்தான் இருக்கும்.

இதேவேளையில் சுயேச்சைக் குழுவுக்கும் வேட்பாளர்களைக் கொடுத்துவிட்டு, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் வேட்பாளர்களை திரு.நீலன் சிபாரிசு செய்த விவகாரம் குமார் வட்டாரத்தை கொதிப்படைய வைத்துவிட்டது.

தனது துணைவரின் தேர்தல் பணிகளில் பங்கெடுத்துவரும் திருமதி குமார் பொன்னம்பலம் நீலனின் இரட்டைப்போக்கு பற்றி அவரிடமே நேரடியாக கேட்டிருக்கிறார். தர்க்கப்பட்டு கோபப்பட்ட நீலன் "எமது வேட்பாளர்களை வாபஸ் பெறவைப்போம்" என்று எச்சரிக்கும் தோரணையில் பேசியிருக்கிறார். திருமதி குமார் அலட்சியமாக "அதற்கென்ன செய்யுங்கள்" என்று ஒரு போடு போட்டிருக்கிறார்.

மறுநாள் கூட்டணி சார்பான மூன்று வேட்பாளர்களையும் அழைத்து குமார் தரப்பினர், நீலன் செய்த வெட்டி ஓடல் வேலையையும் கூறி, வேட்பாளர்களை வாபஸ் பெறப் போவதாக மிரட்டியதையும் கூறியுள்ளார்கள். "வாபஸ் பெறும் எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா?" என்றும் மூன்று பேரிடமும் கேட்டிருக்கிறார்கள்.

ஏனைய இரு வேட்பாளர்களும் அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்க்க, திருமதி யோகேஸ்வரன் மட்டும் அவசரமாக சொன்ன பதில் இது; "நல்ல கதை. அதெப்படி வாபஸ் வாங்க முடியும்?"

இதெல்லாம் ஒரு பக்கமிருக்க, நீலன்-குமார் பனிப்போர் பற்றிய நதிமூலம் ரிஷிமூலம் அறிய நினைத்தபோது கிடைத்த தகவல்களில் சில:

இருவருமே தங்கள் பெயரோடு அப்பாக்களது பெயரையும் பொருத்திக் கொண்டிருப்பவர்கள்.

அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் தமிழ் காங்கிரஸ். திருச்செல்வம் தமிழரசுக்கட்சி. இருவருமே சிறந்த சட்டத்தரணிகள். ஆனாலும் ஜி.ஜி.பொன்னம்பலம் சட்டத் துறையில் ஒரு புலி. இருவருமே அரசியலில் இரு துருவமாக இருந்தவர்கள். இறுதியில் மட்டுமே ஒன்றாக இணைந்தவர்கள். என்றாலும் யாழ் தொகுதியில் 1970ல் நடந்த தேர்தலில்தமிழரசுக் கட்சி வேட்பாளர் சி.எக்ஸ். மார்டினிடம் தோல்வியடைந்த ஜி.ஜி,சாகும்வரை யாழ்ப்பாணப் பக்கமே எட்டிப்பார்க்கவில்லை. கூட்டணி ஐக்கியத்திலும் ஆர்வம் காட்டவில்லை.

ஆனாலும் கூட்டணித் தலைவர்கள் என்று தந்தை செல்வாவின் பெயரோடு அமரர் ஜி.ஜியின் பெயரும் ஒரு கௌரவப் பெயராக இடம்பெற்றிருந்தது.

யாழ் மேயர் துரையப்பா கொலை வழக்கில் மட்டுமே (கொழும்பில் நடந்தது) அமரர் பொன்னம்பலம் ஆஜராகித் தலை காட்டினார். அதில் அமரர் திருச்செல்வமும் ஆஜரானார். அந்த வழக்கில்கூட ஜி.ஜி. சட்டவாதங்களோடு நின்று கொண்டார்.

ஆனால் திருச்செல்வம் தமிழீழக் கோரிக்கைக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் இருப்பதாக வாதாடினார்.

அந்த வழக்கில் ஆஜராக தந்தை செல்வா, ஜி.ஜி.,திருச்செல்வம் ஆகியோர் சென்றபோது மூன்றுபேரையும் ஒன்றாய் நிறுத்தி யாரோ ஒரு புத்திசாலி புகைப்படப் பிடிப்பாளர் எடுத்த படத்தைத்தான் ஐக்கியத்தின் வெளிப்பாடாக கூட்டணியினர் வெளியிட்டார்கள். கலண்டர்களிலும் அப்படம் வெளியாகி பல்லாயிரம் தமிழர் வீடுகளிலும் தொங்கிக்கொண்டிருந்தது.

அது தவிர கூட்டணியின் சட்ட மறுப்பு மற்றும் பொதுக் கூட்டங்கள் எதிலும் ஜீ.ஜீ. தலை கறுப்பைக்கூட காட்டவில்லை.

அவர் இறந்தபின்தான் பூதவுடல் யாழ்ப்பாணம் வந்தது.

"பொன்னா உன்னை தங்கத்தேரில் வைத்து ஊர்வலம் நடத்த எண்ணியிருந்தோம். ஆனால் பொன்னுடல் அன்றோ வந்திருக்கிறது. என்ன செய்வோம் நாங்கள் ஐயா" என்று கூட்டணியினர் இரங்கல் கவிதை வாசித்தார்கள்.

ஒற்றுமை தவிர்க்க முடியாத அவசியமாக இருந்தபோதும் புகைச்சல் உள்ளே இருந்தது.

அதுபோலத்தான் இப்போது திரு. குமாரை கூட்டணி ஆதரிக்கும்போதும் அவர் தம்மைவிட வெகுஜன செல்வாக்கு பெற்றுவிடக்கூடாது என்பதில் கூட்டணித் தலைவர்கள் சிலர் உள்ளூர திட்டம் வைத்திருக்கிறார்கள்.

திரு.நீலனுக்கும், குமாருக்கும் யார் பெரியவர் என்னும் போட்டி சட்டத்துறையில் மட்டுமல்லாமல் அரசியல் துறையிலும் திரைமறைவில் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

தங்கள் தந்தையர் காலத்தைய பனிப்போரின் தொடர்ச்சியை இருவரும் பாதுகாத்து வருகிறார்கள்.

திரு.குமார் பொன்னம்பலம் திரு.நீலன் திருச்செல்வம் இருவருக்குமிடையே யாருக்கு முதுகெலும்பு உண்டு என்று பார்த்தால் நிச்சயமாக குமாரைச் சொல்லலாம்.

குமார் அரசியலில் யாரை எதிர்த்தாலும், ஆதரித்தாலும் இன்றுவரை அதனை பகிரங்கமாக சொல்லி வருகிறார்.

ஆனால் திரு.நீலன் அரசை விமர்சித்தபடியே அரசாங்கத் தலைவர்களோடும் உறவுகளை வைத்துக் கொண்டிருப்பார்.

இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் சிலரோடு நல்லுறவுகளை வைத்திருக்கிறார்.

திருமதி சந்திரிக்காவுக்கு சில ஆலோசனைகளை திரு.நீலன் வழங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதே சமயம் இரு பெரும் தேசியக் கட்சிகளையும் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என்று கூட்டணித் தலைவர் திரு.சிவா அறிக்கை விட்டிருந்தார்.

திரு.குமார் பொன்னம்பலம் நீலனின் இரட்டைத் தனத்தால் சீற்றமடைந்துள்ளார். "அமிர்தலிங்கம் மரியாதைக்குரிய எதிரியாக அரசியலில் இருந்தார். ஆனால் நீலன் தனது தந்தையார் மாதிரி குறுக்குவழியில் வரும் எதிரி" என்று சுயேச்சைக் குழு வேட்பாளர் மத்தியிலேயே திரு.குமார் பொன்னம்பலம் கோபப்பட்டு பேசியதாக தகவல். தேர்தலுக்குப் பின் விரிசல் அதிகமாகும்!

# மரடோனாவின் பாதையில்......

ஸ்போர்ட்ஸ்



**இம்முறை உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தில்ஆடிய மரடோனா சரியான கோணங்களில்தான் பந்தை உதைத்து விளையாடினார். ஆனால், போதை மருந்து விவகாரத்தால் மரடோனா தானே ஒரு பந்தாகி அடிபட்டார். மரடோனா கடந்து வந்த பாதை இங்கே பட்டியலிடப்படுகிறது.**

பிறப்பு: ஆர்ஜென்டினாவின் தலைநகரான பியூனோஸ் அயர்சிலுள்ள வில்லா பியோரிட்டா என்ற சேரிப்பகுதியில் 1960ம் ஆண்டு ஒக்டோபர் 30ம் திகதி டியாகோ ஆர்மாண்டோ மரடோனா பிறந்தார். இவருடைய தந்தைக்குப் பிறந்த எட்டுப் பிள்ளைகளில் இவர் 5வது பிள்ளையாவார்.

1976: ஒக்டோபர் மாதம் ஆர்ஜென்டினாவில் ஜூனியர் பிரிவில் முதன் முதலாக விளையாட வருதல்.

1977: ஆர்ஜென்டினா அணியில் இடம் பெறுதல்.

1978: ஆர்ஜென்டினாவில் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நடைபெற்ற போது இவர் ஆர்ஜென்டினா அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

1979: ஜப்பானில் நடந்த வேள்ட் யுத் கப் (உலக இளைஞர் கோப்பை) போட்டிக்கு ஆர்ஜென்டினா அணியைத் தலைமை யேற்று நடத்திச் சென்று வெற்றி பெற்றார்.

1981: போகா ஜூனியர்ஸுடன் சேர்ந்து முதலாவது ஆர்ஜென்டினா லீக் பட்டத்தை வெல்லுதல்.

1982: 1982ம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டி முடிவுற்ற பின் ஆகஸ்ட் மாதம் 3 மில்லியன் டொலர் ஒப்பந்த அடிப்படையில் பார்சிலோனாவுக்குச் செல்லுதல், அங்கு உடல் நலக்குறைவினாலும், விளையாட்டில் எற்பட்ட பலத்த அடியினாலும் துன்புறுதல்.

1984: நெப்போலி விளையாட்டுக் கழகம் 7.5 மில்லியன் டொலர் கொடுத்து இவருடன் ஒப்பந்தம் செய்தல்.

1986: ஜூனில் நடைபெற்ற உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியின் கால் இறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணியை வீழ்த்துதல். பின்னர் உலகக்கோப்பைக் கால்பந்தின் இறுதிப்போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் மேற்கு ஜேர்மனியை வீழ்த்தி ஆர்ஜென்டினாவுக்கு உலகக்கோப்பையைப் பெற்றுக்கொடுத்தார்.

1987: ஜூன் மாதம் நெப்போலிவிளையாட்டுக் கழகத்திற்காக முதலாவது இத்தாலியின் லீக் பட்டத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

1989: மே மாதம் நெப்போலிக்காக யு.ஈ. எஃப்.ஏ. கோப்பையை வென்றார்.பின்னர் தன்னை ஃபிரெஞ்சு கிளப்பிற்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

1989: ஜூன் மாதம் நெப்போலிக்காக இரண்டாவது தடவையாக இத்தாலியின் பட்டத்தை வெல்லுதல்.

1990: ஜூலை மாதம் இத்தாலியில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டிக்கு ஆர்ஜென்டினா அணியைத் தலைமை யேற்று நடத்திச் சென்றார். இறுதிப்போட்டியில் ஜெர்மனியிடம் 1-0 கோல் கணக்கில் தோல்வி அடைந்தது.

1990: நவம்பர் மாதம் ஐரோப்பிய கிண்ணத்திற்கான போட்டி நடைபெற்றபோது முதலில் அணியுடன் செல்ல மறுத்து பின் 24 மணி நேரம் கழித்துத் தனி விமானத்தில் சென்றார்.

1991: மார்ச் மாதம் கொகைன் போதைப் பொருள் வைத்திருந்தாக 15 மாதகாலம் கால்பந்துப்போட்டிகளில் விளையாடக் கூடாதென சர்வதேச தடைபெற்றார்.

1991: ஏப்ரலில் ஆர்ஜென்டினாவுக்குத் திரும்பியதும் மீண்டும் கொகைன் போதைப் பொருளை வைத்திருந்ததாலும் அதனை உபயோகித்ததாலும் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

1992: ஜூன் மாதம் சர்வதேச தடை பெற்றதால் மீண்டும் நெப்போலி அணிக்காக விளையாட மறுத்தார்.

1992: செப்டெம்பர் மாதம் ஸ்பெயின் கிளப்பான சிவில்லாவுடன் விளையாட 7.5 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

1993: ஆர்ஜென்டினாவில் கால்பந்துக் கழகத்தின் 100வது ஆண்டு விழாவை முன்னிட்டு பெப்ரவரி மாம் நடைபெற்ற கால்பந்துப்போட்டியில் பிரேசில் அணிக்கு எதிராக ஆடிய ஆர்ஜென்டினா அணிக்குத் தலைமை தாங்கினார்.

1993: மரடோனா தன் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்பதால் சிவில்லா கிளப் அவருக்குக் கொடுக்கவேண்டிய 1 மில்லியன் டொலர் பணத்தைக் கொடுக்க மறுக்கவே, ஜூன் மாதம் அவர் ஆர்ஜென்டினா திரும்பினார்.

1993: 15வது உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு முன் நடத்தப்பட்ட தகுதிச் சுற்றுப்போட்டியில் அவுஸ்திரேலியா அணியை எதிர்த்து விளையாட ஒக்டோபர் மாதம் ஆர்ஜென்டினா அணியில் இடம்பெற்றார். அதனைத் தொடர்ந்து மற்றைய போட்டிகளிலும் இடம்பெற்றார்.

1994: பயிற்சிக்கு வராததால் நீவெல்ஸ் கிளப் மரடோனாவை நீக்கியது. பெப்ரவரி மாதம் பத்திரிகை நிருபர்களைத் துப்பாக்கியால் சுட்டு 4 பேரைக் காயப்படுத்தினார்.

1994: ஏப்ரல் மாதம் உலகக்கோப்பைக் கால்பந்து போட்டிக்கு ஆயத்தமாக மொராக்கோவுடன் நடைபெற்ற ஒரு போட்டியில் பெனாஸ்டி ஸ்ட்ரைக் மூலம் ஆர்ஜென்டினா அணிக்கு வெற்றியை ஏற்படுத்திக்கொடுத்தார்.

1994: ஜூன் மாதம் நடைபெற்ற உலகக் கோப்பைக் கால்பந்துப்போட்டியில் கலந்து கொண்டார் மரடோனா. பின்னர் போதைப் பொருள் உட்கொண்டதாகக் கண்டுபிடிக்கப் பட்டதால் சர்வதேச தடைபெற்றார்.

**யா**ழ்குடா நாட்டில் எதிர்வரும் பொதுத் தேர்தலை நடத்த அனுமதிக்க வேண்டாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கையின் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்குடா நாட்டின் பெரும்பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. அங்கு மக்கள் வாக்களிக்கும் சூழ்நிலை காணப்படவில்லை என்று கூட்டணியினர் தெரிவித்துள்ளனர்.

திரு.மு.சிவசிதம்பரம்கூட 1983ம் ஆண்டின் ஆடிக் கலவரத்தின் தாக்கத்தை அனுபவித்திருந்தார்.

கொழும்பு நொறிஸ்கனால் (Noris canal) பகுதியிலுள்ள அவரது இல்லம் காடையர்களின் வெறியாட்டத்துக்குள்ளாகியிருந்தது.

காடையர் கும்பல் திரு.மு.சிவசிதம்பரத்தின் வீட்டுத் தளபாடங்களையும் சேதப்படுத்தியிருந்தது. கூடவே திரு.சிவசிதம்பரம் தமது அறையில் வைத்திருந்த புத்தர் சிலையொன்றையும் அக்கயவர் கூட்டம் நாசமாக்கியிருந்தது.

வடக்கு-கிழக்கில் 1989ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தல் வேடிக்கையானதாகவே விளங்கியிருந்தது. பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத நிலையிலும், வேட்பாளர்கள் குறித்து மக்கள் தகுந்த வகையில் அறிந்துகொள்ள முடியாத சூழ்நிலையிலுமே அத்தேர்தல் நடத்தப்பட்டிருந்தது.

இந்தியப் படையினர் பட்டி, தொட்டிகளிலெல்லாம் ஆயுத பாணிகளாக நின்ற நிலையிலேயே வாக்களிப்புகள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்றிருந்தன.

அலசுவது – இராஜதந்திரி

இலங்கையின் அரசியலில் கலந்து விட்டிருந்தார்.

இதன் மூலம் இனவாதத்தை இலங்கையின் பேரினவாதக் கட்சிகள் தமது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் சூழ்நிலைகளை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவே

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கே கிடைத்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு.மங்கள முனசிங்க பாராளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியிருந்தார்.

# இனப்பிரச்னை தீர்வுக்கு ஒருபோதும் ஒத்துழைக்காத பேரினவாத கட்சிகள்!

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ்குடா நாட்டில் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் முழு உற்சாகத்துடன் தேர்தல் பிரசாரங்களில் குதித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் தமது பிரதேச தனித்துவம், மொழி உரிமை, சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக அமைப்பு, தமது பிரதேசம் சார்ந்த பொருளாதாரம், மற்றும் கலை-கலாசாரங்களைப் பேணுதல்

1983ம் ஆண்டு இனக் கலவரம் தென்னிலங்கையில் தமிழ்பேசும் மக்கள்மீதான அடக்குமுறை, அடாவடித்தனம் என்பவற்றின் உச்ச நிலையை வெளிப்படுத்தியிருந்தது.

இதனையடுத்து ஆட்சியாளர்களால் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் முடுக்கிவிடப் பட்ட இராணுவ நடவடிக்கைகள் பல்லாயிரக் கணக்கானவர்களைப் பலியெடுத்துள்ளன. கூடவே பலகோடி பெறுமதிமிக்க உடமைகளையும் இராணுவக் கெடுபிடிகள் துவம்சம் செய்துள்ளன.

கடந்த பத்து வருட காலமாக வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும்

இவ்வாக்களிப்புகள்கூட நேர்த்தியான முறையில் இடம்பெற்றிருந்தனவா? என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருந்தது.

எனவே 1989ம் ஆண்டு குளறுபடியுடன், குழப்பமும், அந்நியப் படையினரின் ஆக்கிரமிப்பும் காணப்பட்ட சூழ்நிலையில் அரை வேக்காடான தேர்தலில் பங்குபற்றிய கூட்டணியினர், தற்போது யாழ் குடாநாட்டில் நிலவும் சூழ்நிலை குறித்துக் குறிப்பிடுபவை வேடிக்கையானவையாகவே இருக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கில் நடமாடித்திரிந்து அரசியல் நடத்திய காலங்களில் மாற்றுக் கட்சி

ஆரம்பித்தில் அறிமுகப்படுத்தியிருந்தார்.

1956ம் ஆண்டு ஜுன் மாதம் இலங்கையில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சியில் தனிச் சிங்களச் சட்டம் அமுலுக்கு வந்திருந்தது.

இச்சட்டத்தை எதிர்த்து அன்று காலி முகத்திடலில் அமரர்கள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஈ.எம்.வி.நாகநாதன், கு.வன்னியசிங்கம், அ.அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் பலர் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது சத்தியாக்கிரகிகள் காடையர் கூட்டத்தினால் படுமோசமான முறையில்

அப்போது கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரால் ஒரு உறுதியான தீர்வுத் திட்டத்தையோ அல்லது ஆக்கபூர்வமான யோசனைகளையோ முன்வைக்க முடியவில்லை.

பாராளுமன்ற தெரிவுக்குழு நடவடிக்கையின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும், ஆளும் ஐ.தே.கட்சியினரும் ஒரே விதமான நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இனப்பிரச்னைக்கு தகுந்த தீர்வைக் காணத் தவறியிருந்தனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி



எஸ்.ஜே.வி.

## சந்திரிக்காவின் தந்தை பண்டாரநாயக்காவினால் துரத்தியடிக்கப்பட்ட தமிழ் அரசியலாளர்கள்!



பண்டாரநாயக்கா

இராணுவ நடவடிக்கைகள், ஒரு நேர்த்தியான அரசியல் தீர்வை எட்டுவதற்குத் தடையாக இருந்து வருகின்றன.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் சமஷ்டி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிர்வாக முறையே தமது பிரச்சனைகளுக்கு ஒரு சிறந்த தீர்வாக அமைய முடியுமென உறுதியாக

உறுப்பினர்களை, குறிப்பாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இருந்த தேசியக் கட்சிகளின் உறுப்பினர்களை கடுமையாகச் சாடிவந்தனர்.

மாற்றுக் கட்சியினரை 'துரோகிகள்' என்ற வார்த்தைப் பிரயோகத்தில் அழைப்பதையே கூட்டணியினர் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அன்று யாழ் குடாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினராகவும்,

நையப்புடைக்கப்பட்டிருந்தனர்.

இதுதவிர எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போதே 1956ம் ஆண்டிலும் பின்னர் 1958ம் ஆண்டிலும் தமிழ் மக்களுக்கெதிராக இனக் கலவரங்கள் வெடித்திருந்ததென்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இனப் பிரச்னையைத்

தொடர்பாகத் தெட்டத் தெளிவான நிலைப் பாட்டையே எப்போதும் கொண்டுவந்துள்ளனர். அத்துடன் கடந்த காலங்களில் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் தமது பிரதேசங்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களுக்கான அங்கீகாரத்தையும்

நம்புகின்றனர்.

அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம்கூட வடக்கு-கிழக்கில் சமஷ்டி அமைப்பிலான ஆட்சிமுறையொன்று ஏற்பட வேண்டியதன் அவசியத்தை முன்பு வலியுறுத்தியிருந்தார்.

அமரர் செல்வநாயகம் தமது பாராளுமன்ற உரையொன்றில், அரசு வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையில் ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்த தவறினால் நாளடைவில் பிரிவினைக்கான ஒரு யுத்தத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று அன்று எச்சரித்திருந்தார்.

எனவே வடக்கு-கிழக்கு வாழ்

யாழ் நகர மேயராகவும் இருந்த அல்பிரட் துரையப்பாவை 'பேரினவாதிகளின் அடிவருடி', 'தமிழர்களின் துரோகி' என்றெல்லாம் கூட்டணியினர் கூட்டமேடைகளில் முழங்கி வந்தனர்.

ஆனால் இன்று அதே கூட்டணியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணி மீது நம்பிக்கை தெரிவித்து தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்காவை ஓர் இளந் தலைமுறையின் தலைவர் எனவும், அவரது கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் வடக்கு-கிழக்குப்

தீர்க்கும் வகையில் அன்று எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகியோருக்கிடையே செய்துகொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தமும் பேரினவாதிகளின் நெருக்குதல்களையடுத்து கிளித்தெறியப் பட்டிருந்தது.

திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்கவின் தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சியில் மட்டுமல்ல. தாயார் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில்கூட இனப்பிரச்னைத்தீர்வு குறித்து தெளிவான அரசியல் திட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

1970ம் ஆண்டு நாட்டில் புதிய


ஆகியன ஒரே விதமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன என்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு நடவடிக்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியிருந்தது.

இந்நிலையில் தமிழ் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று



சந்திரிக்கா

## அல்பிரட் துரையப்பாவைத் துரோகி என்றவர்கள் இன்று சந்திரிக்காவின் தயவை நாடி நிற்கும் பரிதாபநிலை!!



சிவசிதம்பரம்

வழங்கி வந்தனர்.

ஆனால் இன்று வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் கொண்டிருந்த அரசியல் நிலைப்பாட்டுக்கே குந்தகம் விளைவித்து, ஒரு குழப்பமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகவே தமிழ் அரசியல் கட்சிகளின் தற்போதைய நடவடிக்கைகள் விளங்குகின்றன.

இலங்கையின் பேரினவாத அரசியல் வாதிகள் இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு சிறுபான்மையின மக்கள் மீதான அடக்குமுறைகளை விரிவு படுத்தியே வந்திருக்கக் காணப்படுகின்றனர்.

மொழி ரீதியாவும், தொழில் வாய்ப்பு, கல்வி வாய்ப்பு ஆகியன தொடர்பாகவும் நன்கு திட்டமிட்டு சிறுபான்மையினரைப் பேரினவாத சக்திகள் அடக்கி, ஒடுக்கி வந்துள்ளன.

ஆனால் கடந்த ஒரு தசாப்தகாலமாக பேரினவாத ஆட்சியாளர்கள், வடக்கு-கிழக்கின் சிறுபான்மையின மக்களை இராணுவ ரீதியாக அணுகி வருவதுடன், அவர்களின் கோரிக்கைகளையும் தமது மனம் போன போக்கில் புறக்கணித்து வருபவர்களாகவும் இருக்கின்றனர்.

**1983**ம் ஆண்டு ஆடிக்கலவரம் இடம் பெற்று ஒரு தசாப்த காலத்தின் பின்னர் இத்தடவை பொதுத் தேர்தல் இடம்பெறுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்

தமிழ்பேசும் மக்களை திருப்தி செய்யக்கூடிய தீர்வினை எட்டத் தவறிய நிலையிலேயே தற்போது தமிழ் அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் முண்டியடித்து நிற்கின்றன.

இத்தடவை தேர்தலில் குதித்திருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து எத்தகைய தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காதவையாக இருக்கின்றன.

ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒன்றையொன்று கடுமையாகத் தாக்கி வருகின்றன.

வடக்கே யாழ் குடாநாட்டில் தேர்தலை நடத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அங்கே யுத்த நிலைமை தேர்தல்களை நடத்துவதற்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்று கூட்டணியினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இதே கூட்டணியினர் 1989ம் ஆண்டு இந்திய இராணுவத்தினருக்கும், புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதல்களுக்கு மத்தியிலேயே வடக்கு-கிழக்கில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் குதித்திருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மட்டுமல்ல அவர்களுடன் கூட்டுச் சேர்ந்த வேறு சில தமிழ் அரசியல் கட்சிகளும் 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பங்குபற்றியிருந்தன.

பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காணமுடியும் எனவும் கூட்டணியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா இன்று அரசியல் களத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த ஒருவராக இருந்து வருகின்றார்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கை, மற்றும் இலங்கையில் இன்று முக்கிய சவாலாக இருந்து வரும் வடக்கு-கிழக்கு பிரச்னை என்பன குறித்து திருமதி.சந்திரிக்கா தாம் பங்குபற்றும் கூட்டங்களிலெல்லாம் பிரஸ்தாபித்து வருகின்றார்.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வே சிறந்த பரிகாரமாக அமைய முடியுமென்று திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா குறிப்பிட்டு வருகின்றார்.

ஆனால் இன்று இலங்கையில் இனவாதம் வேரூன்றுவதற்கு திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்காவின் தந்தையாரான அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவே மூல காரணமாக இருந்தார் என்பதை எவரும் இலகுவில் மறந்து விடமுடியாது.

அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா 'சிங்களம் மட்டுமே' என்ற சட்டத்தை அறிமுகப்படுத்தி இனவாத விஷத்தை

அரசியலமைப்புத் திட்டமொன்றை திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிமுகப்படுத்தியிருந்தார். ஆனால் இந்த அரசியல் திட்டம் எந்த வகையிலும் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதி செய்வதாக இருக்கவில்லை.

அத்துடன் கல்வியில் வட பகுதி இளைஞர்களின் பெறுபேறுகளுக்குக் 'கால் கட்டு'ப் போடும் தரப்படுத்தல் முறையும் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலேயே அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. இத்தரப்படுத்தல் முறையினால் பெருமளவு தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் உயர் கல்வி பெறும் வாய்ப்பை இழந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

எனவே நாட்டில் பேரினவாதக் கொள்கைகளை ஆழ வேரூன்றச் செய்து இன்றுவரை இனப் பிரச்னை தொடர்பாக தெளிவான தீர்வுத் திட்டங்கள் எதனையும் முன்வைக்கத் தவறிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று தற்போது குறிப்பிட்டு வருவது, அக்கட்சியின் தேர்தல் பிரசார தந்திரத்தையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத் தொடரைத் தலைமைதாங்கும் சந்தர்ப்பமும்

முரண்பட்டவையாக தேர்தல் களத்தில் குதித்திருப்பதுடன் இனப்பிரச்னை தீர்வு குறித்து உறுதியான கொள்கை எதனையும் கொண்டிராதவையாக, தொடர்ந்தும் பேரினவாதக் கட்சிகள்மீது நம்பிக்கை கொண்டவையாக இருக்கக் காணப்படுகின்றன.

எந்தவொரு தேசியக் கட்சியும் தென்னிலங்கையில் ஆட்சி அமைக்கலாம். தமிழ் அரசியல் கட்சிகளும் தமக்குப் பிடித்தமான கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தும், அல்லது தனித்து நின்றும் அரசியல் நடத்தலாம்.

ஆனால் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வு என்பது, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுக்கள் மற்றும் அவர்களுடன் எட்டப்படும் உடன்பாடுகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

இதனை தென்னிலங்கையின் அரசியலாளர்கள் மட்டுமல்ல; நாட்டு மக்கள் அனைவருமே நன்குணர்ந்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை பற்றி தேர்தல் காலத்தில் பிரஸ்தாபித்துவரும் தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள், மற்றும் தமிழ் கட்சிகளின் தேர்தல் நடவடிக்கைகள் வெறுமனே ஒரு 'கண்ணாமூஞ்சி' ஆட்டமாகவே இருக்கின்றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# புறக்கணிக்கக்கூடாத பிரச்சனைகள்

லேடீஸ் ஸ்பெஷல்

## ஆணும்-பெண்ணும் கவனிக்க வேண்டியவை



திருமண தம்பதிகளுக்கிடையில் பரதரப்பட்ட கருத்து மோதல்கள் இடம்பெறுவதுண்டு. இவற்றில் இருவருக்கும் பாலியல் தொடர்பான பிணக்குகளும் இருக்கக்கூடும்.

ஆனால் இவற்றை ஒருவருக்கொருவர் பரஸ்பரம் வெளிக்காட்டாமல் மறைத்து விடுவதனால் பல்வேறு பிரச்சனைகள் உருவாகின்றன.

உடல்கூடல் குடும்ப ஒற்றுமைக்கு இன்றியமையாத ஒரு அம்சம். ஆனால் இதிலுள்ள குறை நிறைகளை மனம் விட்டுட்டுப் பரிமாற முடியாத நிலையிலேயே பல சிக்கல்கள் தோன்றுகின்றன. உண்மையான காரணத்தை விட்டு விட்டு கணவனும் மனைவியும் வெவ்வேறு குற்றச்சாட்டுகளை ஒருவர்மீது மற்றவர் சாட்டத் தலைப்படுவதனால் விவகாரம் அளவுக்கு மீறிவிடுவதுண்டு.

"பாலியல் பற்றிய பிரச்சனைகளை கணவன் மனைவி இருவரும் மனம் திறந்து பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதனைத் தீர்க்காவிட்டால் திருமண முறிவுதான் ஏற்படும்" என்கிறார் பிரபல உளவளப் பகுப்பாய்வாளரான டாக்டர் மண்ணி றிச் என்பவர்.

பிச்சனைகளைப் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக பெரும்பாலான கணவன்மாரும் மனைவிமாரும் சற்றும் தொடர்பற்ற சம்பவங்களையிட்டு கத்திச் சண்டை பிடிக்க ஆரம்பித்து விடுகின்றனர் என்றுகூறுகிறார் டாக்டர் றிச்.

பாலியலில் ஒருவர் திருப்தி அடைந்து மற்றவர் திருப்தி அடைய முடியாத நிலை ஏற்படுவது இயல்பு. திருப்தியற்ற நிலைக்கான காரணம் என்ன என்பதனை இருவரும் மனம் விட்டுப் பேசித் தீர்த்தால் திருப்தி காண்பது சுலபமாகிவிடும் என்று கூறும் டாக்டர் றிச் பாலியலில் 5 வாதங்களை முன் வைக்கிறார்.

1. தாம்பத்திய உறவின்போது ஒருவர் எத்தகைய நிலையினை அடைய விரும்புகிறார் என்பதனை அறிய முடிவதில்லை. இதனால் ஒருவர் மற்றவருடைய உடலையும் உணர்வையும் பாதிப்படைய வைக்கிறார்.
   ஒருவருடைய உணர்வுகளுக்கும் உடற்கூற்றுக்கும் அடுத்தவருடையவை ஒத்துப்போகாதிருக்கலாம்.
2. பாலியலின்போது ஒருவருடைய எண்ணங்களுக்கும் அவருடைய இயல்பான போக்குக்கும் ஒத்துவராத தன்மையில் மற்றவருடைய செயற்பாடுகள் இருக்கலாம்.
3. சிலர் சில நடவடிக்கைகளை ஒளிவு மறைவின்றி செயற்படுத்துவதால் அதற்கு மாறான எண்ணம் கொண்டவர் அதற்கு விரோதமாக நடக்க முயன்றால் வாக்கு வாதங்கள் தோன்றலாம்.
4. பகிரங்கமான இடங்களில்-பலர் முன்னிலையில் சில சேட்டைகள் செய்வதை சில பாலார் விரும்புவதில்லை.
5. தங்கள் காதலை ஒருவர் பால் வெளிக்காட்டச் சிலர் கூச்சப்படலாம். அதே வேளை அடுத்தவர் வெளிப்படையாகவே நிரூபிக்கவேண்டும் என்று வற்புறுத்துவதனால் பிணக்குகள் எழுகின்றன.

"இத்தகைய வேறுபாடுகள் இருதரப்பினராலும் உணரப்பட்டு தீர்க்கப்படாவிட்டால் மணம் முடித்து சில மாதங்களிலேயே மன-மண முறிவு ஏற்பட்டுவிடும்" என்கிறார் டாக்டர் றிச்.

பிரச்சனைகளைத் தீர்க்க இருவரும் மனம் விட்டுப்பேசி பல மார்க்கங்களை அலசிப் பார்க்கலாம். இதில் 10முதல் 60 வாதங்கள் இடம்பெறவும் கூடும். ஆனால் குறிப்பிடத்தக்க பலன் கிடைத்தே தீரும்.

தொடர்ந்து பலகாலம் நட்புரிமையுடன் விவாதித்தும் பலன் கிட்டவில்லையானால் உங்கள் பிணக்குகளுக்கு உடலுறவுதான் காரணமல்ல-வேறு ஏதோ குறைபாடு இருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

# அழகு-அழகு-பேரழகு

## பழகிக்கொள்ள சில பயிற்சிகள்

நுக்கா-நாதன்



ஒரு பெண்ணுக்கு பெருமை படும்படியாக அழகிய தோற்றம் கொடுப்பது மார்பகம். மார்பில் கொழுப்பு குறைவாக இருந்தாலும் மார்பில் உள்ள தசை நீண்டு சுருங்கும் தன்மையுடையதாக இருப்பதாலும் மார்பில் தொய்வு ஏற்படுகின்றது.

ஒரு சில பயிற்சிகள் மேற்கொள்ளுதல், சரியான மார்புக்கச்சை அணிவது போன்றவற்றினால் மார்பகத்திற்கு எடுப்பான தோற்றம் கொடுக்க முடியும். சிலருக்கு மார்பகம் தட்டையாக (Flat bust) இருக்கும். இதற்கு சில பயிற்சி மூலம் பருக்கச் செய்யலாம்.



**பயிற்சி-1:** தரையில் ஒரு விரிப்பின்மேல் உட்காரவும். தலையை அண்ணாந்து பார்த்தபடி முதுகை நேராக நிமிர்த்தவும். முழங்கையை முன்புறம் வளைத்து உள்ளங்கைகளின் நடுவில் ஒரு புத்தகத்தை வைத்து பலம் கொண்ட மட்டும் அழுத்தவும். ஆறு விநாடிகள் கழித்து கைகளை தளரவிடவும். இதேபோல் தொடர்ந்து 10 தடவை செய்யவும்.

**பயிற்சி-2:** தரையில் நின்று கொண்டு இரு கைகளையும் பின்னோக்கி ஆட்டவும்.



அடுத்து முதலில் வலது கையை மேல் நோக்கி தூக்கிச் சென்று முதுகுப் புறத்திற்குச் கொண்டுவர வேண்டும். அதே சமயம் இடது கையை கீழ்ப்புறம் மடக்கி இரு கைகளையும் பின்புறம் பட்டன் போடுவது போன்ற பாவனையில் வைத்துக்கொள்ளவும். இதேபோல் இடது கையை மேல் தூக்கி முதுகுப் புறத்திற்கு கொண்டு வரவேண்டும். அதே சமயம் வலது கையை கீழ்புறம் மடக்கி இரு கைகளையும் பின்புறம் பட்டன் போடுவது போன்று வைக்கவும் தொடர்ந்து 10 தடவை செய்யவும்.

புரதச்சத்துக் கலந்த உணவுகள் மார்பகத்தை நன்றாக ஒரே மாதிரி இருக்கச் செய்பவை. காபோவைதரேற்று உணவுகள் மார்பகத்தை தளரச் செய்துவிடும். ஆகவே கூடுமானவரை அவற்றை ஒதுக்கவும்.



எப்பொழுதும் நொறுக்குத் தீனி என்று எதையாவது மென்றுகொண்டே இருப்பவர்களுக்கு கொழுப்பு திசுக்கள் குறையும். இதனால் மார்பகத்தின் அளவு திடீரென்று குறையும். ஹர்மோன் கிரீம் கொண்டு மசாஜ் செய்யலாம். மசாஜ் செய்யும்போது மேல் நோக்கி இதமாகச் செய்யவேண்டும். Breast stroke செய்து நீச்சலடிப்பதன் மூலம் அழகான மார்பகங்களை பெறலாம்.



பெரிய பருத்த மார்பகங்கள் சீக்கிரத்தில் தொய்ய வாய்ப்புண்டு. தினமும் ஓட்டப் பயிற்சி செய்வதன் மூலம் மார்பகத்தின் அளவைக் குறைக்கலாம்.

கைகள் இரண்டையும் நீட்டியபடி அமர்ந்து முதுகுத் துண்டை நிமிர்த்தி உட்காரவும். கைகளை முன்புறம் நீட்டி-படகில் துடுப்பு போடுவது போலச் சழற்றவும். இம்மாதிரிச் செய்யும்போது முழங்கைகளை வளைத்து மார்புவரை கொண்டுவர வேண்டும். இப்படி 10 தடவை செய்யவேண்டும்.

கரட், பீன்ஸ், பச்சைக் காய்கறிகள் கீரை இவற்றை உணவில் அதிகம் சேர்த்துவர மார்பகத்தின் தளர்ச்சியினைத் தடுக்கலாம்.

### 'பிரா' ஏன் அணிய வேண்டும்?

மார்பகத்தை தொய்யவிடாமல் தாங்குவதோடு மட்டுமல்லாமல் அதன் வடிவத்திலும் இதனால் முன்னேற்றம் காண முடியும். மார்பகத்தின் அளவுக்கேற்ப பெரியது சிறியது நடுத்தரமானது என பல அளவுகளில் 'பிரா'க்கள் உள்ளன. அதிக இறுக்கமில்லாமலும் தோள்-முதுகுப் புறம் ஆகிய உறுப்புகளில் நன்கு பொருந்தும் படியாகவும் 'பிரா' இருக்க வேண்டும். மார்பகத்தை தூக்கி நிறுத்தி, எவ்வித தடையுமில்லாமல் தாங்கி தசைகள் தொங்காமலும் மிருதுவானதுமான பிரா அணிய வேண்டும். தட்டையான பிரா கூடாது.

பருத்த மார்புடையவர்கள் சரியாக பொருந்தக்கூடிய அளவிலான பிரா அணியவேண்டும்.

மிக இறுக்கமான பிரா அணிவதால் இரத்தோட்டம் பாதிக்கப்படும். பெண்கள் மார்பகம் உருவாகி வளரும் பருவத்திலிருந்தே பிரா அணியத் தொடங்கவேண்டும். ஆரம்பத்திலேயே சரியாக மார்பகம் பெறலாம். தட்டையான மார்பகம் உடையவர்களுக்கு அட்டைவைத்த பிரா உகந்தது. பெரியமார்பகம் உடையவர்களுக்கு பிரா நாடா அகலமானதாக இருந்தால் நல்லது. தாய்மை காலத்தில் மார்பகம் தொய்ந்துவிடாமல் இருக்க பிரா அணிந்தபடி இருக்கவேண்டும்.




அது திறப்புத் துவாரம் வழியே அடுத்தவர் அந்தரங்கம் அறிந்து திருப்திப்படும் கையாலாகாத்தனம்.

ஆனால், குடும்ப உறவு என்னும் தகுதியால் தரமற்றவர்களை அரசியலில் அறிமுகம் செய்யும்போது அதனை சுட்டிக்காட்டும் தேவை ஏற்பட்டுவிடுகிறது.

தன் சொந்தக் கட்சிக்குள்கூட தியாகங்களை மதிக்காதவர்கள் மக்களின் நலனுக்கு விசுவாசமாயிருப்பார்கள் என்று எப்படி நம்ப முடியும்?

ஆகவேதான் தவறான நபர்களை தோளில் தூக்கி வைத்திருப்பவர்கள் நண்பர்களே என்றாலும் கண்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

பூவோடு சேர்ந்த நார் மட்டுமல்ல, சாக்கடையில் விழுந்த சந்தனமும் மணம் பெறும். முன்னையது முகம் மலர வைக்கும். பின்னையது மூக்கை பொத்திக் கொள்ள வைக்கும்.

அரசியலில் நமது நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதற்காக, அவர்களோடு நிற்பவர்கள் எல்லோரும் நம் நண்பர்கள் என்று நம்பிவிடக்கூடாது.

வாக்குத் தேடும் அரசியலில் தூய்மையான நோக்கமுள்ளவர்கள் அரிதாகிவிடுகிறார்கள்.

வாக்குப் பொறுக்குவோர் நாவசைக்கும்போது பொய்கள் பிரசவமாவதும் தெரியாத இரகசியமல்ல.

சில கொள்கையாளர்களிடம் கூட தன் சகாவை முதுகில் குத்தாத குணம் இருக்கிறது.

அடிப்பது கொள்ளையென்றாலும் தங்களுக்குள் குழிபறிக்காத ஒரு நேர்மை இருப்பதை வரவேற்கலாம்.

ஆனால், நம் அரசியல்வாதிகள் சிலர், அந்தக் கொள்ளைக்காரர்களின் தரத்தில்கூட வைத்து நோக்கப்பட முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், குறைந்த பட்சமாக மனித உணர்வுள்ளவர்களாக, தன் தொண்டர்களின் உழைப்பை மதிக்கத் தெரிந்தவர்களாக இல்லாதவர்களை அரசியலில் முகவிலாசம் பெற விடக்கூடாது.

தவறான அரசியலுக்கு துணை போகும் என் நண்பர்கள் இதனை நினைவில் கொள்வார்களாக!

(மீண்டும் சிந்திக்கலாம்)

### சிந்திக்கலாம் இங்கே...

வினையை விதைத்துவிட்டு தினை விளையும் என்று நினைப்பது முட்டாள்தனம்.

என் இனிய நண்பர்கள் சிலர் வினை விதைப்பவர்களோடு நின்றுகொண்டு தினையை அறுவடை செய்துவிடலாம் என்று அழகான கற்பனையில் ஆழ்ந்து போயிருக்கிறார்கள்.

அந்த என் நண்பர்கள் அரசியலில் இருக்கிறார்கள்.

அரசியலிலும் தவறான முகங்களோடு தங்கள் முகங்களையும் அறிமுகம் செய்துகொண்டு அவதிப்படுகிறார்கள்.

அரசியலில் அவர்கள் வளர்ந்தால் வாழ்த்தப்போகும் முதல் ஆள் நானாயிருப்பேன்.

ஆனால் அவர்களோ தங்கள் உழைப்பை களைகள் வளர காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மதியாதார் வாசலை மிதிக்காதே என்பார்கள்.

ஆனால், என் நண்பர்களோ தங்கள் உழைப்பை மிதித்தவர்களை மதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

வியர்வை கொட்டி உழைப்பவனை விலத்தித் தள்ளிவிட்டு குடும்ப உறவுகளுக்கு முதலிடம் கொடுப்பவர்களை தலைவர் என்று சொல்ல எப்படி முடிகிறது?

ஊன் வெறுத்து, உறக்கம் மறந்து இலட்சிய வேள்விக்காக தங்கள் இளமையை நெய்யாக ஊற்றியவர்கள் அவர்கள்.

இன்று கழித்துவிடப்பட்ட எண்ணெய்யாக வெளியே கொட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கட்சிக்காக அவர்களில் பலர் சிறையில் இருந்தார்கள்.

அவர்கள் சிறையில் இருந்தபோது கட்சியோடு 'ஹலோ' மட்டுமே சொல்லிக்கொண்டு சிலர் தங்கள் படிப்பை பார்த்துக்கொண்டார்கள்.

சிறையிலே இருந்தவன் கஷ்டதாரியாகிவிட்டான்.

வெளியே இருந்து படித்தவன் பட்டதாரியாகிவிட்டான்.

பட்டதாரி தலைவருக்கு உறவாக இருந்தமையால் கட்சிக்குள் வந்து காலுக்குமேல் கால் போட்டபடி இருந்துவிட்டான்.

சிறையால் வெளியே வந்த கஷ்டதாரியை அந்தப் பட்டதாரிக்கு பல்லக்கு தூக்கச் சொல்கிறார்கள்.

போராட்டத்திலே பட்ட தழும்புகளுக்கு உள்ள மரியாதையைவிட போராட்டத்தையே திரும்பிப் பார்க்காமல் படித்தவன் பெற்ற பட்டத்திற்கு மரியாதை அதிகமாகிவிட்டது.

முன்னாள் தலைவர்களை கேலி செய்துகொண்டே தங்கள் கட்சிகளுக்குள் மெத்தப்படித்தவர்களுக்கு மொத்த மரியாதை கொடுப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள்.

எங்கள் முன்னாள் தலைவர்கள் இளைஞர்கள் உயிரைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது படித்து பட்டம் பெற்றவர்களல்ல.

அவர்களைக் கேலி செய்யும் சிலரோ தங்கள் தொண்டர்களை களத்துக்கும், தங்கள் சகோதரர்களை பல்கலைக் கழகத்துக்கும் அனுப்பி வைத்தார்கள்.

தனிப்பட்ட குடும்ப உறவுகள் பற்றி அலசுவது அநாகரிகம்.

### முரசின் பரிசு

பெண்கள் மட்டுமே பங்குகொள்ளும் போட்டி இது. மிக்ஸிகள், பெண்களுக்கான கைக்கடிகாரங்கள், நவீனரக இல்ல உபயோகப் பொருட்கள், மற்றும் பல ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

அடுத்த முரசில் இருந்து பரிசுத்திட்டக் கூப்பன்கள் வெளியாகும். சேகரிக்க ஆரம்பியுங்கள். அடுத்த 25 வாரத்தில் 25 அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

## கைவேலைப் பகுதி-நீங்களும் செய்து பாருங்கள்

### பொபி-பூ

எஸ்.எஸ்.

**தேவையான பொருட்கள்:**

வெளிரிய மஞ்சள்நிற ஸ்ரொக்கிநெற்
தங்க நிறக்கம்பி
கம்ரேப் (ஒட்டும்நாடா)
மகரந்தம், சிவப்பு நிறம் சிறிய கட்டு
கட்டுக்கம்பி
நூல்-
வளையம் 10 அங்குல விட்டம்
பேப்பர் றிபன்-தங்கநிறத்தில்
பச்சைநிற ஸ்ரொக்கிநெற்

**தேவையான அளவுகள்:**

**பெரிய பூ**
5 1/2 அங்குல அளவிலான 5 துண்டுகள்
(பத்துப் பூக்களுக்கு 10x5 துண்டுகள்)

**மொட்டு**
3 அங்குல அளவிலான 3 துண்டுகள்.
(8 மொட்டுகளுக்கு 8x3 துண்டுகள்)


**இலைகள்:** 5 அங்குல அளவிலான 10 இலைகள்

**செய்முறை:**

பூவிற்கான 5 1/2 அங்குல அளவிலான ஐம்பது துண்டுகளை தனித்தனியாக எடுத்து இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கி இடையில் சிறு சிறு நெளிவுகளை அமைக்கவும். (படம் 1ல் காட்டியவாறு) இவ்வாறு அமைத்த இதழ்களுக்கு மஞ்சள் நிற ஸ்ரொக்கிநெற்றினால் மூடி கீழ்பக்கமாக எடுத்து நூலினால் கட்டவும். ஐம்பது இதழ்களுக்கும் இவ்வாறு செய்யவும். மகரந்தத்தில் ஐந்தினை எடுத்து கட்டுக்கம்பியினால் கட்டி அதன் அருகருகே இதழ்கள் ஐந்தை வைத்து நூலினால் கட்டவும். கட்டியபின் கம்ரேப் சுற்றவும். இவ்வாறு கம்ரேப் சுற்றிய பின்பு இதழ்களை இலேசாக விரிக்கவும். இதேபோன்று மிகுதி ஒன்பது பூக்களையும் செய்யவும்.


மொட்டிற்கான 3x8 துண்டுகளை எடுத்து பூவினை அமைத்தது போன்று மகரந்தத்துடன் 3 இதழ்களை அருகருகே வைத்துக்கட்டவும். இவ்வாறு கட்டிய இதழ்களை விரிக்க வேண்டாம்.

இலை- படம் 2ல் காட்டியவாறு இலைகளை அமைத்து பச்சை நிற ஸ்ரொக்கிநெற்றினால் கட்டவும். ஸ்ரொக்கிநெற் கட்டிய இலைகளை கட்டுக்கம்பியினால் கட்டி கம்ரேப்பினால் சுற்றவும். இதேபோன்று 10 இலைகளை அமைக்கவும்.



படம்.1

மேற் கூறப்பட்ட யாவற்றையும் செய்து முடித்து விட்டீர்கள் தானே அவைகளை தனித் தனியே எடுத்து வைக்கவும். பின் 10 அங்குல விட்டமுள்ள வளையத்தில் படம் 3ல் காட்டியவாறு பூ, மொட்டு, இலை இவைகளோடு பேப்பர் றிபனையும் வைத்துக் கட்டவும். வளையத்தில் உள்ள பூக்கள், இலைகள், மொட்டுக்கள் இவைகளை பார்வைக்கு ஏற்றவாறு அழகாக்கிக் கொள்ளுங்கள். அழகாக்கிய பூ வளையத்தை இல்லத்தை சிறப்பிக்க சுவர்களில் தொங்க விடலாம். மணப்பெண் தோழிகளுக்கும் கையில் கொடுத்து அழகுபடுத்திக் கொள்ளலாம்.



படம்.2


படம்.3

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மார்புகள் இரண்டல்ல- மூன்று!

எம்.ஐ.யு. ரகுமான்-மருதமுனை

அமெரிக்காவில் லிட்டில் றோக் என்னும் பகுதியில் உள்ள பெண் உலக அதிசயச் செய்திகளில் பரபரப்பான பிரபலம் பெற்றுவிட்டார்.

1968ம் ஆண்டு பிறந்த அப்பெண் மணிக்கு 14 வயதிற்கு பின் உடலில் ஒரு பாரிய மாற்றம்.

அவர் பூப்பெய்திய வேளையில் மூன்றாவது மார்பகம் ஒன்றும் வளர்ச்சியடைந்தது.

ஆரம்பத்தில் மருத்துவர்கள்கூட தேவையற்ற தசை ஒன்று வளர்வதாக நினைத்து மருத்துவம் செய்து பார்த்தார்கள்.

எந்த மருந்தாலும் பயன் இல்லை. மூன்று மார்பகங்களோடு வெளியே செல்ல வெட்கமாக இருந்தது.

கல்லூரியில் சக மாணவ மாணவிகளது கிண்டலும் கேலியும் தாங்கமுடியவில்லை. படிப்பை நிறுத்திவிட்டாள்.

பெரிய போர்வை ஒன்றால் மேல் உடலை மறைத்தபடி தான் வெளியே போய் வந்தாள்.

எப்படியோ இவர் பற்றிய தகவலை அறிந்த நடனக்குழு ஒன்று கில்லாடியான திட்டம் ஒன்றுபோட்டுவிட்டது.

தமது நடனக்குழுவில் அவரை ஆடுமாறு அழைப்புவிடுத்தது. ஊதியமும் கை நிறைய.

முதலில் தயங்கினாலும் பின்னர் சம்மதித்து ஆடத் தொடங்கினார். மேலாடைகளை சற்று விலக்கி ஆடும் நடனம். பார்வையாளர்கள் திறந்த விழிமூட மறந்தனர்.

செய்தி பரவ கூட்டம் திரள்கிறது. இப்போது ஒரு நிகழ்ச்சிக்கு ஒரு இலட்சம் ரூபாவரை ஊதியம் சம்பாதிக்கிறார். மாதத்திற்கு பத்து நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளமட்டுமே சம்மதிக்கிறார். மேலதிக மார்பகத்தால் கிடைத்த மாபெரும் பாக்கியம்.

# தகவல் பெட்டி

## இவ்வார அதிரடித் தகவல்



# ஒன்றாகப் பிறந்த ஐந்து சகோதரிகள்

## அதிசயப் பிறப்பும் அனுபவித்த துன்பங்களும்



இறந்தபோது சோகம்





இருவரை இழந்தபின் மூவர் மட்டும்

அறுபது வருடங்களுக்கு முன்னர்- 1934ம் ஆண்டு மே 28ம் திகதி ஒரே சூலில் 5 பெண் குழந்தைகள் பிறந்தன. இது ஒரு உலக அதிசயம் என்று அன்று கணிக்கப்பட்டது.

கனடா-ஒன்ராறியோ மாநிலத்தில் கல்லண்டர் நகருக்கு அருகே பண்ணை ஒன்றில் ஒரு சிறு குடிசையில் பிறந்த இவர்கள், எதிர்பார்த்ததைவிட சுகதேகிகளாக வளர்ந்தனர். இவர்களுடைய முகச் சாயலிலோ அங்க அடையாளங்களிலோ எந்த விதமான மாறுபாடும் காணப்படாமையினால் இவர்களைப் பார்க்க வருவோர் தொகையும் அதிகரித்துவிட்டது.

அக்கால கட்டத்தில் கனடா பொருளாதாரச் சீர்குலைவால் திண்டாடிக்கொண்டிருந்தது. விவசாயியான தந்தை இக்குழந்தைகளை பராமரிக்க முடியாது தவித்தார்.

ஏற்கனவே அந்தக் குடும்பத்தில் 5 பிள்ளைகள் இருந்தனர். சிக்காகோ நகரில் நடைபெற்ற உலகக் கண்காட்சியில் இக்குழந்தைகளைக் காட்சிப் பொருளாக வைக்க ஒருவர் முன்வந்து தகப்பனுக்கு குறிப்பிட்ட தொகை பணமும் தருவதாக வாக்களித்திருந்தார்.

இந்த வேளை தான் ஒன்ராறியோ அரசு தலையிட்டு குழந்தைகளின் பராமரிப்புப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது.

உள்ளூர் பத்திரிகைகள் இக்குழந்தைகளின் படக்கதைகளை பிரசுரிக்க ஆரம்பித்தன. பல வர்த்தக நிறுவனங்கள் இக்குழந்தைகளின் பல தோற்றங்களைப் புகைப்படங்களாகப் பிடித்து தங்கள் பொருட்களுக்கு விளம்பரம் தேடின.

அமெரிக்காவிலிருந்து கனடா வரும் உல்லாசப் பயணிகள், நயகரா நீர் வீழ்ச்சியைப் பார்க்கப் போவதைவிட இக்குழந்தைகளைச் சென்று பார்ப்பதனையே பெரிதும் விரும்பினர்.

குழந்தைகளை வைத்துப் பராமரிக்க தனியானதொரு கட்டடம் ஒதுக்கப்பட்டது. பராமரிப்புக்கான தனி சபை ஒன்றும் அமைக்கப்பட்டது. மருத்துவர்கள், தாதிமார் என்று எல்லாம் தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டனர். குழந்தைகளும் வளர வளர இவர்களை காட்சிப் பொருளாகக் காணவருவோரின் தொகையும் அதிகரித்தது. மூன்று திரைப்படங்களிலும் இக்குழந்தைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இவர்களுக்கு 8 வயதாகும்வரை 50 கோடி டொலர்வரை இக்குழந்தைகளால் வருமானம் கிடைத்திருப்பதாக இப்பொழுதுதான் அந்தரங்கத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐவரையும் பணம் சம்பாதிக்கும் காட்சிப் பொருட்கள்போலவே பெற்றவர்களும் நடத்தத் தொடங்கியதுதான் கொடுமையிலும் கொடுமை.

இவர்கள் படிப்படியாக வளர ஆரம்பித்ததும் கட்டுப்பாடுகளும் கண்டிப்புகளும் அதிகமாகத் தொடங்கியிருக்கின்றன. எந்த ஆணுடனும் இவர்கள் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லையாம். இவர்கள் ஆண் சிநேகிதர்களைப் பிடித்துவிடாமலிருக்க வேவு பார்ப்போரையும் இவர்களின் தந்தை ஏற்பாடு செய்திருந்தாராம்.

இவர்கள் 20 வயதை அடைந்து மொன்றியலில் படிக்கச் செல்லும்போது ஒவ்வொருவருக்கும் தலா 160,000 டொலர் நிதியம் ஏற்படுத்தப்பட்டிருந்ததாம். ஆனாலும் இவர்களுடைய பெற்றாரும் மூத்த சகோதரர்களும் மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே எல்லாவற்றையும் அபகரித்து விட்டனராம்.

இந்த ஐவரில் இப்பொழுது அனற்ரே, சிசிலி மற்றும் ஐவோன் ஆகிய மூவருமே உயிருடன் உள்ளனர். எமிலி 1954லும் மாரி 1970லும் இறந்துவிட்டனர்.

இவர்களுடைய பரிதாபகரமான வரலாறு இதுகாலவரை வெளியிடப்படவில்லை. தங்கள் 60 வயதைக் கொண்டாடிய பின்னரே கதை வெளிவரத் தொடங்கியிருக்கிறது.



16 வயதானபோது ஐவரும் ஒன்றாக, புன்னகை மலர பவனிவரும் காட்சி இது.



## சிறிய மீன்-பெரிய தொல்லை


அந்தாட்டிக் சமுத்திரத்தில் மிகச் சிறிய மீன்கள் சில மிகப் பெரிய தொல்லை கொடுப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நீச்சலுடையோடு குளிக்கப் போகும் பெண்களுக்கும் இவை வம்பு பண்ணுகின்றன. உயிராபத்துக்கும் இடமுண்டு. அதனால் கடலில் குளிக்கச் செல்வோர் எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

தொல்லைதரும் இந்த மீன்களது நீளம் ஆக 3 செ.மீற்றர் மட்டும்தான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## அன்பான பாப்பாவுக்கு!

அளவான போசனம்
அகத்திற்கு மகிழ்ச்சி பாப்பா!
சுத்தமான காற்றை
சுவாசி பாப்பா!
மாலை வெய்யில்
மருந்து பாப்பா!
காலையில் குளிப்பே
சிறப்பு பாப்பா!
கொதித்தாறிய நீர்
குடிப்பதற்கு ஏற்றது பாப்பா!
உண்ட பின் நூறடி
உலாவுதல் நன்று பாப்பா!
உண்டதும் நித்திரை
கொண்டிடல் தீது பாப்பா!
பசித்தாலன்றி புசித்தல்
ஆகாது பாப்பா!
இரவில் தூக்கம்
எண்மணி நேரம் பாப்பா!
இரவொழிய பகலுறக்கம்
செய்யேல் பாப்பா!
அளவுக்கு மிஞ்சினால்
அமிர்தமும் நஞ்சு பாப்பா!

இரா.தமிழ் வண்ணன்
புனித சென்ஜோன்ஸ் த.ம.வி-இறக்குவானை.

"ஏட்டைத் துடைப்பது கையாலே-மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே
வேட்டையடிப்பது வில்லாலே-அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே"
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை



# அறிஞர்களின் ஆணவம்

ஒரு சமயம் வேற்று நாட்டைச் சேர்ந்த மூன்று பேரறிஞர்கள் பல நாடுகளுக்குச் சென்று அங்குள்ள அறிஞர்களுடன் வாதப்போர் புரிந்து, வெற்றிகள் பல பெற்றபின் துருக்கி நாட்டிற்கு வந்தார்கள். அவர்கள் உண்மையிலேயே திறமையான பேரறிஞர்கள்தான். ஆனால் அந்தத் திறமையே அவர்கள் தலைக்கனத்திற்கு வழி வகுத்தது. இவ்வுலகில், தங்களை அறிவாற்றலால் வெற்றிகொள்ள யாருமே இல்லை என்ற மமதை அவர்கள் மூவரையும் ஆட்டிப்படைத்தது.

அவர்கள் துருக்கி மன்னரிடம் வந்து, "உங்கள் நாட்டின் தலைசிறந்த பேரறிஞருடன் நாங்கள் வாதம் செய்ய வந்திருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள்," என்று கூறினார்கள்.

மன்னரும் அதை ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் போட்டியிட முல்லா நஸ்ருதீனை ஏற்பாடு செய்தார்.

அன்று போட்டி நடக்கும் நாள்.

போட்டிக்கென்று அரண்மனை மைதானத்தில் மேடையும் பந்தலும் போட்டு அலங்கரித்திருந்தார்கள். போட்டியைக்காண மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தார்கள்.

மன்னரும், முக்கிய அமைச்சர் பிரதானிகளும் தங்களுக்கென்று அமைக்கப்பட்ட இருக்கையில் வந்து அமர, அந்த மூன்று பேரறிஞர்களும் விலையுயர்ந்த ஆடை அணிகலன்கள் அணிந்து, பார்ப்போர் வியக்கும் வண்ணம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வந்து அமர்ந்தார்கள்.

முல்லா நஸ்ருதீன் ஆடம்பரத்தை எப்போதும் விரும்பாதவர். என்னதான் மன்னரின் செல்வாக்கு உள்ளவராக இருந்தாலும், பகட்டான ஆடை அணிகலன்கள் அணிவதை அவர் விரும்புவதில்லை. எப்பொழுதும் எளிமையான ஆடைகளையே அணிவார். அன்றும் மிக எளிமையாகவே வந்து, அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்தார்.

"அறிஞர்களே! எங்கள் நாட்டு அறிஞர் முல்லா நஸ்ருதீனிடம் நீங்கள் கேள்விகள் கேட்கலாம்," என்றார் மன்னர்.

கூடியிருந்த மக்கள் அனைவரும், அந்த அறிஞர்கள் என்னென்ன கேள்விகள் கேட்கப் போகிறார்கள், அவற்றிற்கு முல்லா நஸ்ருதீன் எப்படிப் பதிலளித்துத் தங்கள் நாட்டின் மானத்தைக் காப்பாற்றப் போகிறார் என்பதை அறியும் பொருட்டு, அந்த அறிஞர்களையும், முல்லா நஸ்ருதீனையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

முதல் அறிஞர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு முல்லாவைப் பார்த்தார்.

"அறிஞரே! உலகத்தின் மைய இடம் எது?" என்று கேட்டார்.

முல்லா ஒரு வினாடிகூட யோசிக்கவில்லை.

"நான் பயணம் செய்து வந்த என் கழுதை இந்த மைதானத்தின் வெளியே நிற்கிறது. அந்த இடம்தான் உலகத்தின் மைய இடம்," என்று பதில் சொன்னார்.

"அது எப்படி மைய இடமாகும்?" என்று கேட்டார் அதே அறிஞர்.

வேண்டுமானால் இவ்வுலகத்தை அளந்து பார்த்துக்கொள்ளுங்கள். என் கழுதை நிற்கும் இடம் மைய இடமாக இருப்பது உங்களுக்குத் தெரியும்." என்றார் முல்லா.

'உலகத்தை அளந்து பார்ப்பதா? இது நடக்கக்கூடிய காரியமா? மிகப் பெரிய அறிஞரான என்னை வாய் திறக்காதபடி செய்துவிட்டாரே' என்று நினைத்தபடி வாயை மூடிக்கொண்டார்.

முதலாவது அறிஞர் தோற்றுவிட்டதை அறிந்த இரண்டாவது அறிஞர் சற்று உஷாராகி இந்த முறை முல்லாவை மடக்கிவிட வேண்டும் என்று நினைத்து, "வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் மொத்தம் எத்தனை?" என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்கு, முல்லா எப்படிப் பதில் சொல்லப் போகிறார் என்பதை அறிய மக்களும், மன்னரும், அமைச்சர் பிரதானிகளும் முல்லாவையே வைத்த கண் வாங்காமல் பார்க்கத் தொடங்கினர்.

முல்லா அந்த அறிஞரை மிகவும் அலட்சியமாகப் பார்த்து, "என் கழுதையின் உடம்பில் எத்தனை உரோமங்கள் உள்ளதோ, அத்தனை நட்சத்திரங்கள்தான் வானத்தில் உள்ளன," என்றார் முல்லா.

"உங்கள் கழுதையின் உடம்பில் எத்தனை உரோமங்கள் உள்ளன?" என்று கேட்டார் அதே அறிஞர்.

"நான் சொல்லுவது நம்பகமாக இருக்காது. இத்தனை பேர் முன்னிலையில் நீங்களே எண்ணிப்பாருங்கள். எத்தனை நட்சத்திரங்கள் வானத்தில் உள்ளன என்பதை நீங்களே தெரிந்து கொள்வீர்கள்," என்றார் முல்லா.

"கழுதையின் உரோமங்களை எண்ணுவதா... அவர் அடுத்த பதிலே பேச விடாதவாறு மிகவும் சாதுர்யமாய் பதில் சொல்லி மடக்கி விடுகிறாரே நம் திறமை எல்லாம் பிசுபிசுத்துப் போகிறதே," என்று நினைத்து மௌனமானார் இரண்டாவது அறிஞர்.

இரு அறிஞர்களும் முல்லாவிடம் தோல்வியுற்றதும், தான்வைத்திருந்த கேள்விகளை எல்லாம் தூக்கி எறிந்து விட்டுப் புதிதாக யோசித்தார் மூன்றாவது அறிஞர்.

ஒரு புதிய கேள்வி அவருக்குப் 'பளிச்' என்று தோன்றியது.

"அசைக்க முடியாதது எது?" என்று கேட்டார் அவர்.

"நம்பிக்கை" என்று 'பளிச்' என்று பதில் சொன்னார் முல்லா.

மூன்றாவது அறிஞரும் தோல்வியுற்று தலையைக் கவிழ்த்திக்கொள்ள மக்களின் கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

துருக்கி நாட்டின் மானத்தைக் காப்பாற்றியதற்காக மன்னர், முல்லாவை ஆரத் தழுவி வாழ்த்தினார். ஏராளமான பொன்னும் பொருளும் அவருக்குப் பரிசளித்தார்.

'என்னதான் அறிவும் திறமையும் இருந்தாலும் 'தான்' என்ற அகந்தை கொண்டோமானால் அந்த அறிஞர்களுக்கு ஏற்பட்ட அவமானமே நமக்கும் ஏற்படும்.'

## விடுகதைகளும் விடைகளும்

1. மூக்கை வெட்டினால் கை போய்விடும். அது என்ன?
2. ஓஹோ மரமே உயர்ந்த மரமே, ஒரு பிடி இலைக்கு விதியற்ற மரமே. அது என்ன?
3. ஒரு பச்சை குருவி, ஒரு வெள்ளை குருவி, ஒரு குறு கலர்குருவி, கருப்பு குருவி, இந்த நாலு குருவியும் ஒரு பொந்துக்குள் போய் வெளியே வரும் போது சிவப்பு நிறம். அது என்ன?
4. திருக்குணாமலை பெண்களுக்கு முறுக்குனாபோல் கொண்டை. அமுக்குனாப் போல வராவிட்டால் அவளுக்கும் எனக்கும் சண்டை. அது என்ன?

**விடைகள்**

1. தும்பிக்கை 2. கல்லி மரம்
3. வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை
4. இடியப்பம்

வி.மங்களேஸ்வரி-மாவத்தகம.

1. கவச வீரர்களை தனித்தனியே கொல்வார்கள். கவச வாகனத்தை வீசி எறிவார்கள்.
2. பிறரை சுமப்பான். தன்னை தான் சுமக்கமாட்டான். அது என்ன?
3. ஐந்தெழுத்தில் ஓர் ஊரின் பெயர். முதல் இரண்டெழுத்தை எடுத்தால் ஒரு பிராணியின் பெயர். அது என்ன?
4. நான் பலபேரை தாக்குவேன். என்னை யாரும் தாக்க முடியாது. நான் யார்?
5. காட்டிலே பார்த்தால் கட்டையன். வீட்டிலே பார்த்தால் நெட்டையன். யார் அவன்?
6. ஆயிரம் கண்கள் உண்டு- நட்சத்திரமுமல்ல. நீரிலே நீந்துவான்- மீனுமல்ல. அவன் யார்?

**விடைகள்**

1. தீப்பெட்டி 2. மையம் (பிரேதம்)
3. சுன்னாகம் 4. மின்சாரம்
5. பாய் 6. வலை

எம்.ஐ.லபீபா-காத்தான்குடி-04.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.08.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 51
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 48

**பரிசுக்குரியவர்**
ஏ.எல்.ஜனுபா
சாய்ந்தமருது-11

**பாராட்டுக்குரியவர்கள்**

செல்வன்.வீரோகமட் சமீஸ்-கண்டி.

கோ.ஜானகி-கொழும்பு-06.

செல்வி.ச.சரத்குமாரி-கலவான.

எஸ்.சுமித்திரா
விபுலானந்தர் தமிழ் மகாவித்தியாலயம்
திருகோணமலை.

ச.டேவிட்
களு/பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை
-ஹொரணை.

ம.திரிஸ்கரன்
புனித மிக்கேல் கல்லூரி-மட்டக்களப்பு.

ரா.காந்தமலர்
பெயார்லோன் தமிழ் வித்தியாலயம்.
சாமிமலை.

க.ராம்பிரகாஷ்
திருப்பெருந்துறை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.
மட்டக்களப்பு.

கா.கந்தசாமி
வவுனியா

## கண்டுபிடிக்கப்பட்டது-இவர்களால்

1. மடக்கை - ஜோன் நேப்பியர்
2. எக்ஸ் கதிர்- கொன்ராட் றோன்றஜென்
3. புகைவண்டி- ஜோர்ஜ் ஸ்டீவன்சன்
4. விமானம் - வில்பர் ஒர்வில் றைட்
5. மின்மணி - ஜோசெவ் ஹென்றி
6. நீராவி இயந்திரம் - ஜேம்ஸ் வாட்
7. றொக்கெட் - காடார்ட்
8. எயர்கொண்டிஷன் -காரியர்
9. பி.சி.ஜி - கல்மெற்றே, குபெறின்
10. ஜெட் - சேர்.பிராங்க் பிட்டிய
11. அஸ்பிரின் - ரெஸ்ரர்
12. சிரிப்பூட்டும் வாயு - பிரிஸ்டலி
13. பிளேக் கிருமி - கிற்றால் றோ
14. சடத்துவ வாயுக்கள்- வில்லியம் ராம்சே
15. காபனிழை உள்ள மின்குமிழ் - சவான்


செல்வி ஜுமானா முஜீப்-இனிகலை மு.வி., கண்டி.

## புகழ் மிக்கவர்கள் பிறந்த நாடுகள்

1. கன்பூசியஸ் - சீனா
2. மார்கோபோலோ - இத்தாலி
3. பித்தாகோரஸ் - கிரீஸ்
4. வால்டேர் - பிரான்ஸ்
5. உட்றோ வில்சன் - அமெரிக்கா
6. டோல்ஸ்டோய் - ரஷ்யா
7. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் - பிரிட்டன்
8. சோக்ரடீஸ் - கிரீஸ்
9. காந்திஜி - இந்தியா
10. சீசர் - இத்தாலி


என்.எல். முஸம்மில்-புதிய காத்தான்குடி

## ஹெர்குலிஸ் வண்டு



ஹெர்குலிஸ் வண்டு நீளமாக இருக்கும். இதன் வாய்ப் பகுதி மிக நீண்டு கொம்பு போல் காணப்படும். 6.5 அங்குல நீளத்தில் இருக்கும் இவை தென் அமெரிக்காவில் அதிகம் உள்ளன. பார்த்தால் பயங்கரமாகத் தோற்றமளித்தாலும் இந்த வண்டு தீங்கிழைக்காது.

## சுவர் முதலை



படத்தில் 1,2 எனக் காட்டியுள்ள இரு வடிவங்களை மட்டையில் வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். இரு மட்டை வளையங்களை வெட்டி அதை அந்த இரண்டு வடிவங்களுக்குப் பின் ஒட்டி விடுங்கள். ஆள்காட்டி விரலை முதல் வடிவத்தின் வளையத்திலும், நடு விரலை இரண்டாவது வடிவத்தின் வளையத்திலும் படத்தில் காட்டியுள்ளபடி நுழைக்கவும்.

மற்றொரு கையைப் படத்தில் காட்டியுள்ளபடி வைத்து அதை ஒரு விளக்கின் முன் பிடித்து சுவரில் நிழல் விழும்படி செய்யவும். சுவரில் முதலையின் உருவம் தோன்றும்.

## பச்சை குத்துதல்

- **பச்சை குத்துவது என்றால் என்ன?**
உடலில் பச்சை நிறத்தில் படங்களை நிரந்தரமாக வரைந்து கொள்வதற்குப் பச்சை குத்துதல் என்று பெயர்.
- **இது எவ்வாறு செய்யப்படுகிறது?**
கூர்மையான கல், ஊசி அல்லது எலும்பு மூலம் தோலில் அழியா வண்ணம் கொண்டு படம் வரைவார்கள்.
- **இது எவ்வளவு பழமையானது?**
கற்கால குகை ஓவியங்களில்கூட இந்தக் கலை சித்தரிக்கப்பட்டுள்ளது. பண்டைய கிரேக்கர்களும், ரோமானியர்களும் அடிமைகளுக்கும், குற்றவாளிகளுக்கும் பச்சை குத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.
- **இந்த வழக்கத்தால் ஏற்படும் சுகாதாரக்கேடு என்ன?**
பச்சை குத்தும் ஊசி சரியாகச் சுத்தப்படுத்தப்படாமல் பலருக்கும் பயன்படுத்தப்பட்டால் தொற்றுநோய் பரவும்.



**பச்சை குத்தியதை எவ்வாறு அழிக்கலாம்?**
முன்பெல்லாம் முடியாது. இப்போது லேசர் கதிர்கள் மூலம் அழித்து விடலாம் எனக் கண்டுபிடித்துள்ளனர்.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எழுதுங்கள்- இதோ முகவரி-
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772
கொழும்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

### தண்டவாளங்கள்
இரண்டுபேரும்
சேரத்தான் துடிக்கிறார்கள்!
யாரோ...
தவறாக
வழிகாட்டி விட்டார்கள்!

### இலங்கை
அசோக வனத்தில்
சீதை அழுத...
கண்ணீர்த்துளி!

### புன்னகை
இதழ்
சிப்பிகள்
உதிர்வது!

சோ.ஸ்ரீதரன்
பொகவந்தலாவை.

### பிரிவு
காதல்
சந்தகத்தோடுக் கொடுத்த—
இலவச இணைப்பு!

### பௌர்ணமி
இதென்ன..
இத்தனை
நாட்களுக்குப் பிறகு
கண்ணும் கருத்துமாய்—
'நிலவு' காவலன்
உலகை
காவல்காக்கிறான்!
ஓ—
தேர்தல் காலமோ—?





# தேன் கிண்ணம்

### தேர்தல் போட்டியாளர்
பொய்களுக்கு
வர்ணம் பூசி
அழகாக உண்மையாக்கி
'நைலாக' நம்பவைத்து
வாக்கை கேட்பதில்மட்டும்
கைதேர்ந்தவர்கள்.

••

சிலை—தகர
வீடுகளையும்
சிட்டுவீடாய்
மாற்றுவோமென்று
'சிட்டை'க்குறி வைத்துக்
கேட்பதில்
வல்லவர்கள்.

••

திஸ்வா ஸலாம்—தர்கா நகர்.

### தேர்தல் பாட்டுப் பாடுவோம்
கட்சிக்கொடியில்
கச்சைகள் கட்டி
கொப்புகள் தாவும்
குரங்குகள் பாரடா—தம்பி
குரங்குகள் பாரடா—தம்பி

வெட்கமும் இன்று
வெறுமையானது
மானமும் ரோஷமும்
மறைந்து போனதோ
வோட்டு வேட்டையில்
வேட்டு வார்த்தைகள்
வெழுத்து வாங்கிறார்—தம்பி
வெழுத்து வாங்கிறார்—தம்பி

வருணங்கள் கலப்பது
வாடிக்கையாகும்
வேஷங்கள் போடும்
வேடிக்கை மனிதர்
கூடிக்கலக்கும்
கூத்தடிச் சந்தை
கூட்டங்கள் பாரடா—தம்பி
கூட்டங்கள் பாரடா.

நேற்றைய வார்த்தைகள்
காற்றோடு போயின
தூற்றிய வாய்கள்
போற்றிடும் வாசம்
வார்த்தைகள் இன்று
நத்தைகள் போன்று
வோட்டுப் போடடா—தம்பி
வோட்டுப் போடடா.

பேயுடன் பிசாசு
கூடிக் குலவும்
நாயுடன் நரிகள்
ஊழையில் கலக்கும்
தாயும் சேயும்
சண்டை பிடிக்கும்
கோலங்கள் பாரடா—தம்பி
கோலங்கள் பாரடா.

பட்டினி மனிதர்
செத்தும் போனபின்
குத்திக் கரண
விலைகள் குறைப்பு
என்சாண் மனிதர்
எரிவதைக் கேளடா—தம்பி
எரிவதைக் கேளடா.

நின்று பாரடா—தம்பி
நிமிர்ந்து பாரடா— தம்பி
நேற்றைய பொழுதில்
உதிர்ந்த குருதியில்
விழுந்த மானிடம்
விளைவைக் கேளடா—தம்பி
வோட்டுப் போடடா.

—கருங்கொடியூர் கவிராயர்—

### நட்சத்திரங்கள் மின்னட்டும்
எமது வாக்கு மேகங்கள்
தேர்தல் மழைக்காக
கருகட்டியிருக்கும்
காலமிது.

வீதியெங்கும்
பாய்கின்றன
அபேட்சகத்தவளைகள்.



எங்கள் தலைவர்கள்
வழமைபோல்
இப்போகத்திலும்
நம்பிக்கை
விதை விதைத்து
வைப்பார்கள்.

வாசல் தேடி
வருவோரெல்லோரையும்
நன்றாய்ப் பார்த்துக்
கொள்ளுங்கள்.
தவறினால் இன்னும்
ஐந்து வருடங்கள்
காத்திருக்கணும்.

இப்போதுகளில்
எவரும் மதில்களுக்கு
வர்ணப் பூச்சிட
வேண்டாம்.
எங்கள் அபேட்சக
ராமர்களின்
பதாகைப் பாதங்கள்பட்டு
எங்கள் சுவர்களின்
நிர்வாண சாபம்
கலைந்துபோகும்.

எங்கள்
தலைவிதியை நாமே
நிர்ணயிக்கும்
இப்போதுகளில்தான்
நமது தலைமை சீதையை
தேர்ந்தெடுக்கும்
சுயம்வரமாகிப்போன
இந்த தேர்தலின்போதுதான்
இந்நாட்டு மன்னர்கள்
நாம்!

எமது வாழ்க்கைக்குள்
வெளிச்சத்தை
விதைக்காவிட்டாலும்
நாம் செல்லும்
இருண்ட பாதைக்கு
வெளிச்சம் போடும்
சின்னச் சின்ன
நட்சத்திரங்களையாவது
மின்னவைப்போம்!

மெய்யன் நட்ராஜ்
பூண்டுலோயா.

### ஒரு வசந்த நினைவு



என்
இதயத்தை எடுத்து
வைத்திருக்கும்
இனிய ஸ்னேகிதி,
இவை...
உனக்குத்தான்
எழுதுகின்றேன்.

என்
கனவு தேவதையே,
நான் போட்ட
காதல் கடிதம்
கைக்கு
கிடைத்ததா?

மனதை
மறுபிரதி எடுத்து
உனக்கு
மடல்வரைந்தேன்,
ஏன்
மறுமொழி
வரவில்லை?

ஏனடி கேட்டாய்
இருந்த இடத்தில்
அமைதியாய்
இருந்த
என் இதயத்தை?

உனது
நேரம் பரிமாற்றத்துக்கு
என் நேசத்துடனல்லவா
விளையாடினாய்?

நானா தவமிருந்தேன்
தா இதயத்தை என்று
நானா
தவமிருந்தேன்?

இந்த
புனிதமான மனதினுள்
புயலடிக்க வைத்துவிட்டு
நீ மட்டும் தென்றலாய் திரிவது
நியாயமா?

இதயத்தில்
நீ இருந்த இடத்தில்
இரத்த வெடிப்பினை பார்!
அந்த,
காயத்தை ஆற்றுவது
காலங்களால் முடியாது
கண்மணி,
உன் கடிதங்களால்தான்
அதனால் எழுது
ஏதாவது எழுது
உன் அக்காவின்
மழலை பற்றியாவது!

முடிந்துபோன,
கதை என்றாய்,
என்னை நீ மனதில்
முடிந்துவைத்த கதையா?

முயன்றுபார்,
உன்
முகத்திரையை
அகற்றிவிடலாம்.
உனது
வீம்பான கர்வத்தால்
எமது
வசந்தகாலங்கள்தான்
வீணாகக் கழிகிறது.

கணிதச் சிக்கலையே
கடிதென முடிப்பவள்
இந்த
கவிதை சிக்கலா
உனக்கு புரியாது?
அதனால்,
கௌரவங்களை
களைந்து,
கரையில்
வைத்துவிட்டு
எழுது ஒரு கடிதம்
நான்
கனவுகளுடன்
காத்திருக்கின்றேன்!!!

சாந்தினி சந்திரன்
பிரான்ஸ்.



### தேர் தலைகள்
கயிறி ழுத்து கொடி பிடித்து
குரல டைக்கப் பேசுவர்
வயிறி ழுத்த வறி யவர்க்கு
விடிய லென்று ஆடுவர்

படித்து வந்த யுவ ருக்கு
பதவி யென்று கூறுவர்
பிடித்து அங்குஇருத்தி விட்டாம்
பிறகு மென்ன பாருமன்!

வாச லோடு காவல் வைத்து
வசை களோடு விரட்டுவர்
காசி னூடு போன வர்க்கு
கடவு ளாக விளங்குவர்

நாலு ஐந்து பேர்க ளோடு
நாலு சில்லில் ஏறுவர்
ஆளுக் கொரு மந்தி ரியாம்
ஆல தென்று ஏதுமில!

கல்வி யிலே நாகு ரித்து
கழிந்த தெங்கள் காலமென
மல்வி யிலே தேச மீட்க
முனைந்த தோளின் வீரரெலாம்,


ஆளுக் கொரு வழி பார்த்து
அதற்கு விலை பல கொடுத்து
கூழுக் கொரு ஆசை வைத்து
கழித்து விட்டார் மீசையைத்தான்!

கோடி கேட்டு லட்ச மாகி
கால னாவில் வந்து நின்றார்
மாடி வாழ தேறு மென்றால்
மாந்தர் நோவை யாருணர்வர்?

கற்ற கல்வி பேறும் போச்சு
கோல மான வாழ்வும் பாழே!
முற்றி போன தேச வாழ்வில்
மீட்சி தன்னை யார் தருவர்?

மாலை—விரோதயன்.

## தினமுரசு
## தேர்தல் கணிப்புப் போட்டி



'தினமுரசு தேர்தல் கணிப்புப் போட்டி' வாசகர்களின் கணிப்பு ஆற்றலுக்கு களமாக அமைகிறது.

இதில் நீங்கள் செய்யவேண்டிய தெல்லாம் மிகச் சுலபமானதே!

3 கேள்விகளும் அவற்றுக்கான உத்தேச விடைகளும் இங்கு தரப்பட்டுள்ளன. உங்கள் கணிப்புப்படி எந்த விடை சரியானதோ அதற்கு நேரே புள்ளடியினை இட்டு, இக்கட்டத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர், முகவரி ஆகிய விபரங்களை தெளிவாக எழுதி கீழ் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

1. உங்கள் மாவட்டத்தில் வெற்றி யாருக்கு?
   1. ஐ.தே.க. ☐ 2. இ.தொ.க. ☐ 3. த.வி.கூ. ☐
   4. மு.கா. ☐ 5. பொ.ஐ.மு. ☐ 6. ரெலோ ☐
   7. புளொட் ☐ 8. ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப். ☐ 9. சுயே.கு- ☐
2. நாடு தழுவிய ரீதியில் யார் வெற்றிபெற்று வந்தால் நல்லது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
   1. ஐ.தே.க. ☐ 2. பொ.ம.கூ. ☐ 3. பிறிதோர் கட்சி ☐
3. தற்போதைய அரசியல் உங்களுக்குப் பிடித்தமானதாக இருக்கிறதா?
   1. ஆம் ☐ 2. இல்லை ☐

பெயர்: ..............................
முகவரி: ..............................
______________________________
மாவட்டம்: ______________________

சரியான கணிப்பினை வெளியிடும் வாசகர்களில் அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு ரூ. 1000/= பரிசாக வழங்கப்படும்.
உங்கள் விடைகள் வந்துசேரவேண்டிய கடைசித்திகதி- 6.8.94.

தேர்தல் கணிப்புப் போட்டி
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு-06.

குறிப்பு: ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். விடைகள் இங்கு இடம்பெற்றுள்ள கூப்பனில் மட்டும் இருத்தல் வேண்டும்.

### நினைவுகள்...
கலைந்திருக்கும் என் குழலில் அலையிருக்கும்
கடலலை போல் நுதலில் நுனியிருக்கும்
நனைந்திருக்கும் கருவிழியில் கனிவிருக்கும் கண்ணனை—
நினைத்திருக்கும் கனவுகளில் தாபமிருக்கும்
என் சிரிப்பில் பல முத்திருக்கும்—அங்கே
தேன் இதழ்போல் அமிழ்ந்த மொழியிருக்கும்
துடிப்பிருக்கும் துடியிடையின் அசைவிருக்கும்
துகில்களில் சந்தரத் தெருகிருக்கும்
இரவிருக்கும் இமையாத விழியிருக்கும்
இசையிருக்கும் நெஞ்சில் ஏக்கமே துணையிருக்கும்
உயிரிருக்கும் வரை அவன் நினைவிருக்கும்—என்
உயிர்போன பின்பு நினைவுகள் எங்கிருக்கும்...???

ஜெயந்தி—பம்பலப்பிட்டி.

### கவிஞன்
ஏய் பெண்ணே..
உனை நான்
பாடமாட்டேன
ஏனெனில்—
நீயென்னை..
கணவனாக்கிப்
போடுவாய் என்பதல்ல
கவிஞனாக்கிப்
போடுவாய்
என்பதால்.

### பொங்கல்
அந்த...
சூரியனுக்கு
பொங்கலிட்டோம்
பொங்கலை
வயிறு புடைக்க
உண்ட சூரியன
உண்ட மயக்கத்தில்
எங்களை பார்க்கவும்
மறந்து விட்டது.

### விரதம்
நானா—
விரதமென்றேன்
அவா..
நானெல்லாம்
விரதம்
என்றாள.

### நாணயம்
நாணயம் அடித்த
அன்றே
நாணயம்...
போயா
விட்டது?

சுந்தரலிங்கம்
திருகோணமலை.

### மீனம்: சுப நேரம்
(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் தொல்லை மறைவு, மனச் சந்தோஷம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | புதிய நம்பிக்கை, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| சனி- | முயற்சி மேன்மை, பணச் செலவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், இலக்கம்- 1

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, பொருளாதார நன்மை. | பகல் 11 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், காரியக் கேடு. | காலை 10 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், இனசனக் கொண்டாட்டம். | காலை 7 மணி |
| சனி- | வீண் குறைகேட்டல், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | கடன் தொல்லை நீங்கும், உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், இடமாற்றம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | பணக்கஷ்டம், கடன் படல். | காலை 7 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சிகளில் வெற்றி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், பணச் செலவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | துன்பநிலை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப 1 மணி |
| புதன்- | வீண் குறைகேட்டல், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் சகாயம், பொருட் செலவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | தொழில் கேடு, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| சனி- | செலவு மிகுதி, மனப் பயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, முயற்சிகளில் வெற்றி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், இடமாற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினர் உபத்திரவம், செலவுமிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | துயர் அதிகம், வைத்தியச் செலவு. | பி.ப 4 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், தெய்வானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, கடன் படல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 8

## இந்த வாரம் உங்கள் பலன்
(31.07.94 முதல் 06.08.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன் |
| கன்னி | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - செவ்வாய் |

சந்திரன்-மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| திங்கள- | பெரியோர் சகாயம், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், காரியசித்தி. | பி.ப 2 மணி |
| புதன்- | இனசனக் கொண்டாட்டம், மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | தனலாபம், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், உறவினர் பகை. | காலை 7 மணி |
| சனி- | கடன்படல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி வெற்றி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பணவரவு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் சகாயம், கவலை மறைவு. | காலை 6 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, ஆடம்பரச் செலவு. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை நீங்கும், உயர்ந்த எண்ணம். | காலை 8 மணி |
| சனி- | பணக் கஷ்டம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள்வரவு, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, வீண் குறைகேட்டல். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | தனலாபம், உயர்ந்த நோக்கம். | காலை 8 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, ஆடம்பர நிலை. | பகல் 12 மணி |
| சனி- | மனப்போராட்டம், முயற்சி மேன்மை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| திங்கள்- | முன்னேற்றம், தொழில் சிறப்பு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | உறவினர் தொல்லை, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| புதன்- | கடன் தொல்லை நீங்கும், குடும்ப சுகம். | பகல் 11 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, புதிய முயற்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, அரச மதிப்பு. | காலை 6 மணி |
| சனி- | வீண் பிரயாசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -7

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, நிலைப்பிரிவு. | காலை 9 மணி |
| திங்கள்- | குடும்ப சுகம், காரியானுகூலம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | முன்னேற்றம், எதிர்பார்த்த நன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், முயற்சி வெற்றி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், வெளியிடப் பயணம். | காலை 7 மணி |
| வெள்ளி- | பொருட் செலவு, பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | காலை 8 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப 2 மணி |
| புதன்- | மனக்கவலை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், வீண் பிரயாசம். | காலை 7 மணி |
| வெள்ளி- | அரசவிரோதம், பதவியிழப்பு. | பகல் 12 மணி |
| சனி- | மனஅமைதி குன்றும், பொருட் செலவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனக் கவலை நீங்கும், முயற்சி வெற்றி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் உதவி, தொழில் முன்னேற்றம். | காலை 9 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், பணச் செலவு. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | மனக்கவலை, புதிய முயற்சி. | காலை 8 மணி |
| சனி- | பெரியோர் உதவி, அரச விரோதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## வெளியே தள்ளிய உடல் உறுப்புக்கள்
## உயிருக்குப் போராடிய குழந்தை!





முக்கியமான உள்ளுறுப்புகள் யாவும் வயிற்றுக்கு வெளியேறிய நிலையில் பிறந்த குழந்தை இன்று பூரண குணமடைந்து விட்டாள். நான்கு வயதான இச்சிறுமி பள்ளிக்கூடம் செல்லும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்ஃபோர்ட் ஜோண் றாட்கிளிஃப் மருத்துவமனையில் சாறா சிமித் என்ற இந்தப் பெண் குழந்தையின் வெளியேறிக் கிடந்த உள்ளுறுப்புக்களை, அவற்றுக்குரிய இடங்களில் வைத்துப் பொருத்துவதற்கு இதுவரை மொத்தம் 11 சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இவளுடைய வயிறு இப்பொழுது அளவுக்கு மீறிப் பருத்திருப்பதுடன் காயம் பட்ட வடுக்களுடன் காணப்படுகிறது. இதன் அளவையும் 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சையின் மூலம் குறைத்து கூடுமான அளவு வடுக்களையும் நீக்கிவிட முடியும் என்று மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சாறா பிறக்கும்போது அவளுடைய சமிபாட்டு உறுப்புக்கள், குடல் முதலானவற்றுடன் நுரையீரல் முதலிய முக்கிய பாகங்கள், வயிற்றின் வெளியே, 'பொலித்தீன்' பை போன்ற ஒரு மென்மையான பையில் அடக்கப்பட்டுக் காணப்பட்டன. இவற்றை உள்ளே வைத்து குழந்தையை உயிருடன் பாதுகாப்பது மிகவும் சிரமமான காரியம் என்றும் குழந்தை உயிர் பிழைப்பது அரிது என்றும் மருத்துவர்கள் கூறினர். ஆனால் 43 வயதான அக்குழந்தையின் தாய் சுயி, தன் குழந்தையை எவ்வாறாயினும் உயிருடன் காத்துத் தரும்படி வேண்டினார்.

அந்த மருத்துவமனையைச் சேர்ந்த பிரபல சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் நிக்கலஸ் டட்லி, இதனை ஒரு சவாலாக ஏற்று மருத்துவ உலகில் ஓர் அரிய சாதனையினையே நிலைநாட்டிவிட்டார்.

ஒன்றன்பின் ஒன்றாக 11 சத்திரசிகிச்சைகள் செய்யவேண்டியிருந்தமையினால் அந்த மருத்துவமனையே சாறாவில் சொந்த வீடுபோலாகிவிட்டது. டாக்டர் நிலக்கலசை குழந்தை சாறா, 'அங்கிள் நிக்' என்று செல்லமாக அழைக்க ஆரம்பித்துவிட்டாள்.

மிகச் சிரமமான சத்திரசிகிச்சைகளின் போது சில தடவைகள் சாறாவின் உயிர் பிரிந்துவிடும் ஆபத்தும் ஏற்பட்டதாம். இவளுடைய தாய் சுயி, "நான் இத்தருணங்களில் செய்வதறியாது நகத்தைக் கடித்துக்கொண்டு சத்திரசிகிச்சைப் பிரிவைச் சுற்றிச் சுற்றி வருவேன்.


"டாக்டர் நிக்கலஸ் வெளியே வரும் போது அவருடைய முகத்தில் காணும் குறிகளைக் கொண்டே நான் நிலமையை நிதானிப்பேன். ஒவ்வொரு தடவையும் சிகிச்சை முடித்து அவர் வெளிவரும்போது மலர்ந்த முகத்துடன் என்னைப் பார்த்து புன்னகை சிந்துவார். அப்போது என் குழந்தை நெருக்கடியான கட்டத்தைத் தாண்டிவிட்டாள் என்று தெரிந்துவிடும்" என்கிறார்.

"எனக்கு எப்போதும் இளஞ்சிவப்பு நிறத்தில் தான் விருப்பம். சில நேரங்களில் தனிச் சிவப்பு உடையினையும் விரும்பி அணிவேன்" என்று மழலை மொழி பேசும் குழந்தை சாறா தனது உப்பிய வயிறையும் காய வடுக்களையும், தன்னைப் பார்க்க வருவோரிடமெல்லாம் தயக்கமின்றிக் காட்டுகிறாள்.

ஆனால் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் ஒரேயொரு ஏக்கம். அதனையிட்டு ஒருநாள் தன் தாய் சுயியிடமே வருத்தத்துடன் கேட்டுவிட்டாள். சுயி திகைத்துப்போனாள். டாக்டர் நிக்கலசிடம் சாறாவின் ஏக்கத்தினையும் கூறினாள். அவரும் அந்தக் குறைபாட்டை அடுத்து நடைபெறவிருக்கும் 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சையின் போது கண்டிப்பாக நகி அவளுடைய ஆசையையும் நிறைவேற்றி விடுவதாக உறுதி கூறியிருக்கிறார்.

சாறாவின் குறை இதுதான். "என்னோட விளையாட வாற எல்லாப் பிள்ளைகளுக்கும் வயிற்றில் 'பொக்கிள்' இருக்கிறது. எனக்குமட்டும் இல்லையே?" இப்பொழுது ஏனைய குழந்தைகளிடம் சாறா "அங்கிள் நிக் எனக்கு பொக்கிள் ஒன்று வைத்துத் தருவாரே" என்கிறாள்.

## துர்நாற்றத்தை துரத்தவழி



சிலர் பேசும்போது, அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் சுவையாக இருந்தபோதிலும் அவற்றைக் கேட்காமல் பலர் வெகுதூரம் விலகிச் சென்று விடுவார்கள். வேறுசிலர் எட்ட நின்றே கதையைச் செவிமடுப்பர்.

இதற்கெல்லாம் காரணம் அந்நபரின் வாயிலிருந்து வீசும் துர்நாற்றமாகும்.

பற்பசைகளில் பலவிதமுண்டு. மணம் குணம் நிறைந்ததாக பற்பொடிகளும் சந்தையில் விற்கப்படுகின்றன. இவை எவற்றைப் பயன்படுத்தினாலும் வாயிலிருந்து எழும் துர்நாற்றத்தை அகற்ற முடிவதில்லை. அவை பற்களில் படிந்த காவியை அகற்றலாம்; பல்லீறுகளுக்குள் படிந்துள்ள அசுத்தத்தை வெளியேற்றலாம். ஆனால் வாய் நாற்றம் மறைவதில்லை.

வாயில் துர்நாற்றம் ஏற்படுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன என்று தந்த மருத்துவத் துறை நிபுணர்கள் கூறுகின்றனர். வயிற்றினுள்ளிருந்தே வெளிவரும் கெட்ட வாடை வாய் வழியாக வெளியேறுவதுமுண்டு. பற்களுக்கிடையே ஒட்டிக்கொள்ளும் உணவுப் பொருட்கள் நுண் கிருமிகளின் செயற்பாட்டினால் அழுகும் நிலை அடைவதனாலும் துர்நாற்றம் ஏற்படும்.

ஆனால் நாக்கின் மீது படியும் அழுக்குகள் தான் பெரும்பாலும் அதிக நாற்றமெடுக்கக் காரணமாகும் என்று டாக்டர் ஜொன் றிச்சர் என்ற தந்த ரோக நிபுணர் கூறுகிறார். ஃபிலடெல்ஃபியாவிலுள்ள பென்சில்வேனியா சுவாசச் சீர்கேடுகளுக்கான சிகிச்சை மையத்தின் அமைப்பாளர் இவர்.

'பக்டீரியா நுண்கிருமிகளின் சுகவாச ஸ்தலம் நாக்கு' என்று டாக்டர் ஜொன் கூறுகிறார். நாக்கின் மேற்பரப்பில் மிகச் சுலபமாக பக்டீரியாக்கள் படர்ந்து கன வேகத்தில் விருத்தியடைகின்றன. இவற்றை வாய் கொப்பளிக்கும் மருந்துகளாலோ பல் தீட்டும் பசைகளினாலோ சுலபமாக அகற்றிவிட முடியாது.

பற்களைத் தேய்ப்பதற்காகப் பயன்படுத்தும் குச்சு (பிரஷ்)களினாலேயே நாக்கைச் சுத்தம் செய்வதன் மூலம் பக்டீரியாப் படலத்தை 'அகற்றிவிட முடியும் என்று கூறுகிறார் அவர்.

நாக்கினை வளிப்பதற்காக சிலர் மென்மையான கதடுகளைப் பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் பக்டீரியாக்கள் அகற்றப்படலாம். ஆனால் இவற்றால் நாக்கிலுள்ள திசுக்கள் பாதிப்படையக்கூடும். பற்களைச் சுத்திகரிப்பதற்காகப் பயன்படுத்தும் பிரஷ் மூலம் நாக்கை மென்மையாக வளிப்பதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும் என்பது டாக்டர் ஜொன் தரும் கருத்தாகும்.



## சீசன் விளம்பரம்

உதைபந்தாட்ட 94 உலக கிண்ணம் பிரேசிலிடம் போய்விட்டது. ஆனால் உதைபந்தாட்ட போட்டிகள் ஏற்படுத்திய பரபரப்புக்கள் இன்னமும் ஓய்ந்தபாடாக இல்லை. பிரபல வியாபார நிறுவனங்கள் தம் விளம்பரங்களில் அழகான பெண்களிடம் பந்தைக் கொடுத்து பளிச்சென்று சிரிக்கவைத்து வியாபாரம் பெருக்கியுள்ளன. சீசனுக்கு ஏற்ப விளம்பரம் செய்வதும் ஒரு கலைதான். படத்தில் உள்ளது ஒரு பந்து விளம்பரம்.

## தூங்குவதில் நீங்கள் கில்லாடியா?
## இந்த வினாக்களுக்கு விடை என்ன?

### சுய சோதனை



தூக்கம் மனிதனுக்கு இன்றியமையாத வரப்பிரசாதம். நல்ல தூக்கமில்லை என்றால் ஒருவன் பெரும் சங்கடங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

தூக்கத்தின் தன்மைகள் பற்றி உங்களுக்கு எத்தகைய அறிவு இருக்கிறது என்பதனைக் கண்டறிய ஒரு பரீட்சை. தூக்கத்துறையில் பலதரப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்ட இரு மருத்துவ நிபுணர்கள் உங்களைப் பரீட்சிக்க 'இதோ சில கேள்விகளைத் தயாரித்துத் தந்துள்ளனர். ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விதமான பதில்கள் உள்ளன. பதில்கள் இப்பக்கத்தில் தரப்பட்டுள்ளன. தூக்கம் பற்றிய உங்கள் அறிவை நீங்களே அறிந்துகொள்ள இப்பரீட்சை துணைபுரியும்.

இவற்றைத் தயாரித்தளித்தவர்கள்: டாக்டர் எலியர் கின்றாதி மற்றும் டாக்டர் ஜே.கிறிஸ்ரின் விற்றர் ஆகியோர்.

**கே 1:** சாதாரணமாக 20 முதல் 30 வயதுக்குள் உள்ள மனிதன் ஒருவன் இரவு படுக்கையிலிருந்து, தூக்கம் கலைந்து A- எழுந்திருக்கவே மாட்டான். B- 10 தடவைகள் எழுந்திருப்பான், C- 40 தடவைகள்வரை எழுந்திருப்பான்.

**கே-2:** பகலில் தூங்குவதால் A- இரவுத் தூக்கம் பாதிப்படையும்; B- இரவுத் தூக்கத்துக்கு உதவும், C- இரவுத்தூக்கத்தை பாதிக்காது.

**கே-3:** தூக்கத்தின்போது குரட்டை விடுதல்- A- சுகாதாரத்துக்கு நல்லது; B- சுகாதாரத்தைப் பாதிக்கப் போவதில்லை.;
C- சுவாசிப்பதற்கு இடையூறு உண்டாக்கி உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடும்.

**கே-4:** இரவில் 10 மணிநேரம் வரை தூங்குவது; A- ஆயுளைக் குறைத்துவிடும்; B-ஆயுட் காலத்துக்கு தொடர்பில்லாதது; C- நீண்ட ஆயுளைத் தரவல்லது.

**கே-5:** போதுமான அளவு தூங்காவிட்டால், A- நோய்வாய்ப்பட நேரிடும். B- இறந்துபோக நேரிடும்; C- ஒரே வகையான சுகாதாரத்தையே தரும்.

**கே-6:** படுக்கைக்குச் செல்லுமுன் தேகப்பயிற்சி செய்வதால் A- இரவு நல்ல தூக்கம் வரும். B- தூக்கம் பாதிப்படையும், C- தூக்கத்துக்கு எதிவித பாதிப்பினையும் ஏற்படுத்தாது.

**கே-7:** இரவில் நல்ல தூக்கம் வர வேண்டுமானால் A- வாழைப்பழம் சாப்பிட வேண்டும் B- உருளைக்கிழங்கு பொரியல் உண்ணலாம்; C- சூடான பால் அருந்தலாம்.

**கே-8:** அமைதியான உறக்கத்துக்கு, படுக்கைக்குச் செல்லுமுன் A- ஒரு கிளாஸ் வைன் பருகலாம். B- சிறிதளவு பிராந்தி குடிக்கலாம்; C- மதுபானத்தை ஒதுக்கிவிடவேண்டும்.

**கே-9:** நல்ல இரவுத் தூக்கத்தின்போது காணும் கனவுகள் A- 5 நிமிடம்வரை நீடிக்கும்; B- 15நிமிடம் வரை நீடிக்கும் C- 100 நிமிடம்வரை நீடிக்கும்.

**கே-10:** படுக்கப்போகும்போது கடைப்பிடிக்க வேண்டிய சில பழக்கவழக்கங்களை தினசரி அனுசரிப்பதன் மூலம்
A- சிறுவர்களுக்கு நல்ல தூக்கம் வர உதவும்;
B- பெரியவர்களுக்கு நல்ல தூக்கம் வர உதவும்;
C- எவருக்கும் உதவப் போவதில்லை.

1-C, 2-A, 3-C, 4-A. 5-C
6-B, 7-A, 8-C, 9-C, 10-B

**இவற்றில் 8 அல்லது அதற்கு மேலான வினாக்களுக்கான விடைகளோடு உங்கள் விடை ஒத்துப்போனால் நீங்கள் ஒரு சிறந்த "தூக்க வல்லுநர்" (கும்பகர்ணன்)**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

> “இரவின் அமைதியில் நீ வருவாய்
> என் மன நிலையும் நீ அறிவாய்.
> உறவின் சுகமும் பிரிவின் துயரும்
> உனைப்போல் என் மனம் அறியாதோ!”
> –கவியரசு கண்ணதாசன்–

# கொலை விழும் நேரம்

**எழுதுவது—ரசிகன்**

டி.ஐ.ஜி.டென்சில் தொலைபேசிக் கூண்டில் ஒட்டப்பட்டிருந்த தாளில் இருக்கும் தகவலில் பொய் இருக்க முடியாது என்று நூறுவீதம் நம்பினார்.

உண்மையைப்போலவே சில தகவல்கள் வந்து சிக்கலான வழக்குகளில் தவறான திசையைக் காட்டி விடுவதுண்டு.

சில கொலை வழக்குகள் அங்கும் இங்கும் அலைத்து உயிரை வாங்கி விடுவதுண்டு. அலைச்சலும், களைப்பும் ஆளைப் புரட்டி எடுக்க, கிடைக்கும் தகவல்கள் வரப்பிரசாதம் போலத் தெரியும். அதை வைத்தே வழக்கை முடித்து விடலாமோ என்று தோன்றும்.

டென்சில் அப்படி நினைப்பவரல்ல. அடி முதல் நுனிவரை சென்று திருப்தி ஏற்பட்ட பின்னரே அடுத்த வேலை என்று ஓயாத, தளராத ரகம்.

ஆயினும், தொலைபேசிப் பெண்குரல் இதுவரை தந்த தகவல்கள் யாவும் படு சுத்தம். மிக நேர்த்தியான உதவி.

அதனால் இதில்கூட உண்மை இருக்கலாம்.

காரில் ஏறி சாவி திருப்பி கார் கிளப்பியபடி யோசித்தார்.

ஏன் அவள் இந்தத் தகவலையும் போனில் தந்திருக்கக்கூடாது. இது அவள் கையெழுத்துத்தான் என்று எப்படி உறுதி செய்வது?

ஏன் சந்திப்பைத் தவிர்த்தாள்? அப்படித்தான் அவசர வேலை என்றாலும் பொது இடத்தில் தாளில் எழுதி ஒட்டிவிட்டுச் செல்லும் அளவுக்கு புத்தியில்லாதவளாக இருப்பாளா என்ன?

முதலில் தகவலை நம்பிய மனதில் இப்போது சிவப்பு வெளிச்சம் தெரிந்தது. அபாயம் அடிப்பது மாதிரி விழிப்பாயிரு என்று எச்சரிக்கை உணர்வு தெரிந்தது.

எதிரே போக்குவரத்து ‘சிக்னல்’ கம்பத்தில் சிவப்பு விளக்கு எரிந்தது.

மஞ்சள் கோட்டின் முன்னே கார் நிறுத்தி பச்சை எரியும்வரை காத்திருந்தார்.

சிக்னல் விழுந்து வாகனங்கள் நிற்பதை தமக்கு வசதியாக மாற்றிக் கொண்ட பிச்சைக்காரர்கள் கொழும்பு நகரில் அதிகம்.

எதிரே ஒரு பிச்சைக்காரன் வருவது தெரிந்தது. அவனைப் பார்த்துக் கொண்டே தன் சட்டைப் பையில் சில்லறை தேடி கிடைத்ததை எடுத்து தயாராய் வைத்துக்கொண்டார்.

பரட்டைத் தலையும், கிழிந்த கோட்டுமாய் வந்து இரக்கப்படு என்பது போல் சிரித்து சாரதி ஆசனம் வழியாக குனிந்து கை நீட்டினான்.

கையில் தயாராக வைத்திருந்த சில்லறை எடுத்து அவன் கையில் போட, எதிரே சிக்னல் கம்பத்தில் மஞ்சள் வெளிச்சம் வந்தது. கியர் மாற்றி தயாராக பச்சை சிரித்து போகலாம் என்றது.

அலுவலக போர்டிக்கோவில் கார் நிறுத்தி இறங்கியவர், பின் கதவு கண்ணாடி மூடப்படாமல் இருப்பதைக் கவனித்து பின் கதவு திறந்து கண்ணாடி ஏற்ற முற்பட சாரதி எங்கிருந்தோ ஓடிவந்து ‘சல்யூட்’ தந்து நிற்க,

டி.ஐ.ஜி.டென்சிலின் பார்வை பின் சீற்றில் பதிந்து நின்றது.

பின் சீற்றின் மையத்தில் ஒரு ஓடியோ கசட் போல்... அவசரமாய் எடுத்தார்.



ஒடியோ கசட்டேதான். கவர் இல்லாமல் கிடந்தது.

கசட்டோடு நிமிர்ந்து சாரதியிடம் கார் சாவி கொடுத்துவிட்டு தன் அறை நோக்கி வேகமாய் செல்ல, எதிர்பட்ட பொலிசார் சல்யூட் வழங்கி ஒதுங்கி நின்றனர்.

உள்ளேபோய் கசட் பிளேயரில் செருகி விட்டு பட்டன் அழுத்திவிட்டு காத்திருந்த போது,

அந்த பரட்டைத் தலைப்பிச்சைக்காரன் சிரித்து குனிந்தது மனத் திரையில் வந்து போனது.

கசட் சற்று ஓடி மௌனம் கலைத்து பேசத் தொடங்கியது.

“வணக்கம் என் இனிய டி.ஐ.ஜி. சந்திரமண்டலத்தில் இருந்து நீல் ஆம்ஸ்ரோங் பேசுகிறேன் என்று சொன்னால் நீங்கள் சிரிப்பீர்கள்; அல்லது சினப்பீர்கள்.

சோ...நான் உங்களை சிரிக்கவைக்கவும் விரும்பவில்லை.. சினக்க வைக்கவும் பிரியமில்லை.

உபயோகமான சில தகவல்களை உங்கள் செவிக்குள், உண்டியலுக்குள் சில்லறை போடுவதுபோல போடும் ஆவலாய் உள்ளேன்.”

கம்பீரமான குரல்- தடுமாற்றம் இல்லாமல் சரளமாகப் பேசும் இலாவகம்- திடீரென்று பேச்சு நிற்க இசை கேட்டது. மேலைத்தேய வாசமுள்ள இசை.

ஒரு நிமிச இசையின் பின் அவன் குரல் மீண்டும் ஒலித்தது.

“டியர் டி.ஐ.ஜி. எனக்கு இசை பிடிக்கும். இசைப்போல சுகமான பெண் பிடிக்கும். இசை நம்மை விழிமூடி மெய் மறக்கச் செய்யும். ஆனால் நாம் அதனை பதிலுக்கு மெய் சிலிர்க்க வைக்க முடியுமா?”

கேட்டு நிறுத்தி தொடர்ந்து தானே அதற்குப் பதிலும் சொன்னான்.

“முடியாது! ஆனால் பெண்ணை.....?”

கேள்வி எழுப்பி, சட்டென்று கண்ணாடி உடைந்தது மாதிரிச் சிரித்தான்.

“முடியும்-முடியும்....முடியும் தாக்கம். மறுதாக்கம். விஞ்ஞான விதி இங்கே செல்லும்.”

மீண்டும் சிரித்தான். என்ன இவன். பைத்தியக்காரன் மாதிரி. ம்ஹூம் அப்படியும் செல்லிவிட முடியாது.

டென்சில் குழப்பமாக, அவன் கசட் வழியாக எறிந்த சிரிப்பு நிறுத்திவிட்டு,

“என்னடா குழப்புகிறானே என்று யோசிக்கிறீர்களா டி.ஐ.ஜி? முக்கியமான தகவல் எதையாவது சொல்லுவான் என்றால் இவன் இசையை பற்றியும், இளமையான பெண்ணைப் பற்றியும் புலம்புகிறானே என்று எரிசல் வருகிறதல்லவா? கொதிப்பாக இருந்தால் கொஞ்சம் கூலாக தண்ணீர் குடித்துக்கொள்ளுங்கள் டி.ஐ.ஜி.”

பிளேயரை நிறுத்திவிடலாமோ என்று யோசித்தார்.

மீண்டும் இசை. அதே மேலைத்தேய இசை. நெருப்பை கிளறிவிடுவதுபோல மனசின் ஆழத்தில் நுழைந்து உணர்ச்சியை கிளறிவிடும் வித்தை தெரிந்தவன் மீட்டிய இசை.

“என்ன இல்லை இங்கே?
விண்ணோடு மோதும்
சிகரத்தில் ஏறலாம் வா!
உன்னிலே என்னையும்
என்னிலே உன்னையும்
இடம் மாற்றிக்கொள்ளும்
இனிய ஒரு கதை
எழுதி முடிக்கலாம் வா”

இழைந்து, குழைந்து, நெளிந்து ஒரு பெண்குரல் இசையின் இரைச்சல் மீறி ஒலித்தது.

திடீரென்று பாட்டும் இசையும் அடங்கிப் போக கசட் மௌனமாய் ஓடியது.

டி.ஐ.ஜி.டென்சிலின் பொறுமை கல்லடி பட்ட கண்ணாடி ஜன்னல்போல் உடைந்து விழுந்தது.

பிளேயரை நிறுத்த சினத்தோடு கைநீட்டி விரல் நிமிர்த்த,

“நிறுத்திவிடாதீர்கள் டி.ஐ.ஜி!” என்றான் கசட் வழியாக.

டி.ஐ.ஜி. திகைத்துப்போனார். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான வார்த்தைவர திகைப்பு வந்தது. தொடர்ந்து அவன் பேசினான்.

“இனி சலிப்பு வராது டி.ஐ.ஜி. திகைப்புத்தான் வரும். என்ன ஆரம்பிக்கலாமா?”

ஒரு நொடி இடைவெளி கதிரை அசையும் சத்தம் பதிவாகியிருந்தது. அவன் தொண்டையைச் செருமிக்கொண்டு கசட் வழியே அதிர்ச்சி தரும் தகவல்களை கொட்ட தயாரானான்.

டென்சில் இருக்கையின் நுனிவரை வந்து தன் காதுகளை கூர்மையாக்கிக் கொண்டார்.

□□

காயத்திரி திரும்பிப்பார்க்க அங்கே அவள் நின்று, பாதி முகம் கருகி விகாரமாய் தெரிய-

முதலில் வந்து கதவு திறந்து, காயத்திரி அலற காரணமாகவிருந்தவள் தன்அறையின் உள்ளே நின்று முகம் மட்டும் வெளியே நீட்டி வினோவையும், காயத்திரியையும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

காயத்திரிக்கு முன்னர் போல் பயம் வராவிட்டாலும் அதில் பாதியளவு பயம் வரத்தான் செய்தது.

காயத்திரி தன்னைத் திரும்பிப் பார்க்க, அவள் முகத்தை உள்ளே இழுத்து மறைந்து கொண்டாள்.



மீண்டும் அவள் முகம் தெரிகிறதா என்று ஒரு நிமிசம் பார்த்துக்கொண்டிருந்து விட்டு வினோவிடம் திரும்பினாள் காயத்திரி.

“அவளைப் பார்த்து பயப்படுகிறாயா காயத்திரி?”

“பாதி குறைந்துவிட்டது. இனி அதுவும் போய்விடும். அறிமுகப்படுத்துகிறாயே இல்லையே வினோ. இன்னும் கொஞ்சம் பாம் தடவி விடட்டுமா?”

தலைதொட்டு முடிகோதி விட்டாள்.

தலையை பின்னுக்கு இழுத்து நெளிந்து,

“போய் இரு காயத்திரி. தாங்யூ காயத்திரி.”

“எதற்கு தாங்யூ.”

நகராமல் நின்று கேட்டாள்.

“பாம் தடவி விட்டதற்கு. பரிவோடு கவனித்ததற்கு.”

“இது என்னை வலிக்கச் செய்கிறது வினோ!”

கண்களை சுருக்கிக்கொண்டு அவளை வினோ பார்த்தான்- கேட்டான்,

“ஏன் காயத்திரி. நன்றி கூடாதா?”

“கூடும். உன்னில் இருந்து வேறான ஒருத்திக்கு சொன்னால்! எனக்குக் கூடாது. இந்த மூன்றெழுத்து செய்யும் இடைவெளி இன்னொரு மூன்றெழுத்தை சேதப்படுத்தும்.”

வினோவுக்கு புரிந்தது. புரிந்ததை புரிந்ததாகக் காட்டாமல் தவிர்த்தான். ‘அவள் சொன்ன மூன்றெழுத்து காதல். அதனை அத்தனை சுலபமாய் ஏற்பது முடியுமா? காயத்திரி நல்லவள். இனியவள். அதனால்தான் அவள் காதலை ஏற்பது கடினமானது. அதனை எப்படி புரியவைப்பது?

‘என் கதை சொன்னால்தான் புரியும். புரியவைப்பதற்கு கதை சொல்ல பழைய புண்ணில் இருந்து வேதனை வடிகிறது.

‘என்ன செய்ய? எப்படி விளக்க? இனிய இவள் காதலை எதைச் சொல்லி மறுக்க?’

வினோ யோசிக்க காயத்திரி நடந்துபோய் தன் கைப்பையை எடுத்துக்கொண்டு அவனைப் பார்த்தபோது கண்களில் ஈரம் தெரிந்தது.

“போகட்டுமா வினோ?”

“போய் வா காயத்திரி.”

“வரச்சொல்கிறாயா வினோ?”

“யெஸ். என் மீதிக் கதையை உன்னிடம் பகிர.”

“வேண்டாம் வினோ. நீ பூ மாதிரி. பழைய கதை நெருப்பு மாதிரி. உன்னைக் கருக்கியொரு கதைசொல்ல வேண்டாம் வினோ.”

“சொறி. வெரி, வெரி சொறி. உன்னையும் சங்கடமாக்கி...., நானும் கட்டுப்பாடு உடைந்து....... வெரிசொறி. இனி அப்படி நடக்காது. நிச்சயம் என் கதை கேள். வா. நாளை வா காயத்திரி. நான் காத்திருப்பேன்.”

படபடப்பாய் பேசினான். காயத்திரி அமைதியாக அவனைப் பார்த்துக்கொண்டே;

“ஏன் வினோ என்னிடம் மட்டுமா உன் கதை சொல்ல முடியும்? நான் மட்டும்தானா உன் கதை கேட்கமுடியும்?”

கேட்டுவிட்டு அவனையே பார்த்தாள்.

‘ஆமாம் காயத்திரி நீ மட்டும்தான் கேட்க முடியும். உன்னிடம் மட்டும்தான் சொல்ல முடியும் என்று அவன் சொல்லமாட்டானா? சொன்னால் எத்தனை சுகமாய் இருக்கும்’ என்று நினைத்தாள்.

வினோ தாழ்ந்த குரலில்,

“வேறு யாரிடம் நான் சொல்ல முடியும் காயத்திரி?”

என்றுதான் கேட்டான். காயத்திரிக்கு ஏமாற்றமாக இருந்தது. எனினும் வேறு யாரிடம் நான் சொல்ல முடியும்? என்று கேட்டதில் தனக்கு தரப்பட்ட தனியிடம் நினைத்து மனதை சமாதானம் செய்ய முயன்றாள். பதிலுக்குக் கேட்டாள்,

“ஏன் உன்னோயும் ஒரு பெண் இருக்கிறாளே அவளிடம் சொல்லலாமே?”

வினோவுக்குப் புரிந்தது. அவள் யார் என்று அறிவதில் காயத்திரி கரிசனம் காட்டுவது விளங்கியது.

காயத்திரியின் கண்களை பார்த்துக் கொண்டு மெல்ல குரல் எடுத்து சொன்னான்.

“அது முடியாது காயத்திரி!”

“ஏன் முடியாது?”

அவசரமாய் காயத்திரி கேட்க, நிதானமாய் வினோ சொன்னான்,

“அவள் என் சகோதரி! அவள் என் சொந்த இரத்தம்!”

□□

பிரசாத்தை காப்பாற்றாமல் தன்னை தடுத்த சம்பவம் நினைத்தாள் நிர்மலா.

மனக்கண்ணில் அந்தச் சம்பவம் விரிய உதட்டை பற்களால் கடித்தாள்.

பிரசாத் நிறைவெறியில் இருந்தார்.

நிர்மலாவின் தந்தை ஹரிகரன் பிரசாத் எதிரே மரியாதையாக நின்றுகொண்டிருந்தார்.

“ஹரி உன் போக்கு சரியில்லை. உன்னால் வியாபாரத்திற்கு அமோகமான நஷ்டம். அதிரடியான இழப்பு. நீயாகவே கழன்றுகொள்வது உத்தமம்.”

நிறைவெறியில் நாக்குழறியது. ஹரிகரன் பதில் பேசாமல் மௌனமாய் நிற்க, பிரசாத் குரல் உயர்த்தினார்.

“என்னடா நீ...நான் பேசிக் கொண்டே இருக்கிறேன். நீ பெரிய இவன் மாதிரி... டேய் ஹரி 24 மணிநேரம் வைத்துக்கொள். அதற்குள் பூபால் அன்ட் பிரதர்ஸ் சம்பந்தமே வேண்டாம் என்று பத்திரம் ரெடி பண்ணு.”

ஹரிகரன் இப்போது வாய் திறந்தார்.

“நான் இதற்கு சம்மதிக்காவிட்டால் என்ன செய்வாய் அண்ணா நீ?”

பிரசாத் அடிபட்ட புலிபோல ஹரிகரனை பார்த்தபடி தள்ளாடி எழுந்தார். சட்டை விலக்கி அங்கிருந்த சிறிய கைத்துப்பாக்கி எடுத்து ஹரிகரனை குறிபார்த்தார்.

அதுவரை ஹோலின் வலதுபுற மூலையில் இருந்து அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்த நிர்மலா,


“ஐயோ டடி...சி.. சித்தப்பா டடியை... டடியை சுடவேண்டாம்.”

கூவிக்கொண்டு ஓடி வந்தாள்.


பிரசாத் காதில் கூச்சல் விழவில்லை. அவர் ஹரிகரனை குறிவைத்து விசையைத் தட்டினார்.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என். சந்திரநாதன்
வயது: 25
முகவரி: இல.33, டி.என்.சி. மார்க்கட், நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.




பெயர்: எம்.சி.கௌது
வயது: 23
முகவரி: நிஸ்னா டெக்ஸ், கல்பிட்டி வீதி, நுரைச்சோலை.
பொழுதுபோக்கு: புத்தகம் படித்தல், பத்திரிகை வாசித்தல், பேனா நண்பர் தொடர்பு.




பெயர்: அ. சால்ஸ்டன்
வயது: 24
முகவரி: P.O.BOX- 30890 DOHA QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, விளையாட்டு.



பெயர்: எஸ்.ஒஜீஹா
வயது: 24
முகவரி: BLOCK NO. 3 STREET NO. 8, HOUSE NO. 259 AL-SABAHIYA, KUWAIT
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை.



பெயர்: பத்மநாதன் யசோதா
முகவரி: டெமேரியன் குறூப், பசறை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், புத்தகம் படித்தல், வானொலி கேட்டல், ஓவியம் வரைதல்.



பெயர்: சா.க. ஜெனீமா
வயது: 22
முகவரி: இல.317, பன்சாலை வீதி வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ்.கிருஷ்ணா
வயது: 23
முகவரி: வனராஜா மேல்பிரிவு, டிக்கோயா.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: எம்.ஓ. சஹ்லான்
வயது: 18
முகவரி: மஹாதன்னை, குருத்தலாவை.
பொ. போக்கு: வழமையான பொழுது போக்குகளுடன் வெளிநாட்டு நாணயம், முத்திரை சேகரித்தல்.

பெயர்: த. ஜெயராஜா
வயது: 23
முகவரி: CH.DU.BOSTAN-9(A), 1004 LAUSANNE, SWITZERLAND
பொ.போ: சினிமா,முத்திரை சேகரித்தல், உதைபந்து விளையாடுதல்.

பெயர்: ஏ.எம். சாஜகான்
வயது: 26
முகவரி: P.O.BOX NO. 10042, ASACCO LTD. JIC MAINT. AL-JUBAIL 31961, K.S.A.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகளுடன் ஓவியம் வரைதல்.

பெயர்: ஜெ. ரமேஷ்
வயது: 18
முகவரி: சிவானந்த கொலனி, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.
பொ.போ: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஜெ.எம். நவ்ஷாட்
வயது: 21
முகவரி: 6, கல்கடுவ, வெலம்பொட, கம்பொல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை



# உள்ளமென்பது உள்ளவரைக்கும்



## மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

**"ஸரீனா என்னைப் பரிதாபமாகப் பார்க்க, அவளது விழிகளில் நீர் கோலமிட்டது. நானும் என் விழிகளைத் துடைத்துக் கொண்டேன்"**

ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்கு முன்னையதோர் காலகட்டத்தில் இக்கதை ஆரம்பமாகிறது.

அன்று......

'காதலி...
உனக்கே தெரியாமல்
உன் சல்வார் மடிப்புக்களில்
என் கனவுகளை
-நான்
சேமித்து வைத்திருக்கிறேன்.'

-என் தேவதைக்கான கவிதையை எழுதிமுடிக்க வேண்டும் என்ற உத்வேகத்தில், பேனாவை அவசரமாய் உழுது கொண்டிருந்தேன்.

"ரமீஸ்!"

கேட்ட குரலுக்கு நிமிர்ந்து பார்த்தேன். பேனாவை உதறினேன்.

முத்து முத்தான வியர்வை முகத்தில் படிய...பதட்டமாய், கலவரமாய் என் உம்மா நின்றுகொண்டிருக்க, கேட்டேன்,

"என்னம்மா?"

"வாப்பாவுக்கு மறுபடியும் அதே வயிற்றுவலி வந்துட்டுது போல... பழைய படியே வாந்தியோடு சேர்ந்து இரத்தம் போகிறது. நோவினால் துடிக்கிறதைப் பார்த்தால், எனக்குப் பயமாயிருக்குடா... வாப்பாவை எப்படியாவது ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டுப்போ..."

நான் எச்சில் விழுங்கிக்கேட்டேன்,

"பணம் இருக்காம்மா?"

"என்கிட்ட ஏதுடா பணம்?"

"நான் மட்டும் பணத்துக்கு எங்கேம்மா போவேன்?" என்ற என் குரலில் ஏதோ பிசிர் ஒட்டிக்கொள்ள, "போன வாரம்தான் ஏ.எல்.பரீட்சையே எழுதினேன். இப்போ பணம், தொழிலுன்னு நான் எங்கேதான் அலையறது...?"

"இல்ல... யாரிடமாவது கடன் வாங்கியாவது..."

-உம்மாவால் பேசமுடியவில்லை. நா வரண்டு தொண்டை அடைபட்டு, கண்கள் குளமாகிப்போயின.

பாவம்! உம்மாதான் என்ன செய்வாள்?

வாழ்க்கையில் எந்த சுகத்தையும் அனுபவிக்காமல், குடும்பத்துக்கென்றே உழைத்து ஓடாய்ப்போன மெழுகு வர்த்தியவள்.

"ஏற்கனவே எல்லோரிடமும் கடன் பட்டாச்சும்மா. திரும்பிக்கொடுக்கவாகிலும் வழிதெரியாமல் நான் திணறிக்கிட்டிருக்கேன். நாலஞ்சு வருஷமா வாப்பாவுக்கு வைத்தியம் பார்க்கவே இருக்கிற வீட்டையும் அடகு வைச்சாச்சு. தவிர...கண்டி, கொழும்புன்னு பெரிய பெரிய ஹாஸ்பிட்டல்லயெல்லாம் வாப்பாவை நிறுத்திப் பார்த்தாச்சு. ஆனால்...பலன் என்னம்மா....?"

உம்மா அழத் தொடங்கினாள்.

-நான் எனக்குள் பொடிப்பொடியாய் உதிர்ந்துபோனேன்.

"செத்துப்போகலாம்போல இருக்கு. இந்தச் சின்ன வயசிலேயே எனக்கு நிம்மதியில்லம்மா. படைச்சவனுக்காவது நம்மேல கருணையில்ல. பணத்தைத் தந்து நோயைத் தந்தாலும் பரவாயில்ல. பஞ்சத்தோட நோயும் வந்தா நாம என்ன பண்றது? இப்போ கொஞ்சம் காலமா ஹாஸ்பிட்டலுக்கும் வீட்டுக்கும் வித்தியாசமே யில்லாமப் போச்சு. எல்லாமே நம்மோட தலையெழுத்தும்மா...."

உம்மா ஏதோ ஆயாசமாய்ப் பார்க்க.....

"வாப்பா இப்படிக் கஷ்டப்படுகிறதை விட மவுத்தாகிப் போனாலாவது நிம்மதிம்மா...."

"ர....மீஸ்!"

உம்மா சடாரென அதிர்ந்து நிமிர்ந்தாள்.

'நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாதோ?'

நாவைக் கடித்துக்கொண்டு, மனம் நொந்துபோய் அழத் தொடங்கினேன்.

வாப்பா பலமாய் இருமும் சத்தம் கேட்க, என் தேவதைக்காக எழுதிய கவிதைத் தாளை அப்படியே கசக்கிப் போட்டுவிட்டு, தானாகவே எழுந்து நடந்துபோய் வாப்பாவின் அறையை எட்டிப்பார்த்தேன்.

அறை முழுக்கப் பரவிப்போயிருந்த டெட்டால் வாசனைக்குள், வாப்பா வயிற்றின் ஆழப் பகுதியில் இருந்து வாந்தியெடுத்து அப்படியே மல்லாந்திருந்தார். தரை முழுக்கத் திட்டுத் திட்டாய்இரத்தம் உறைந்து போய்....

என் உடம்பு முழுக்க சக்தி குன்றிப் போனது.

"இப்போ என்னடா பண்றது?"

என் பின்னால் எட்டிப்பார்த்த உம்மா கேட்க,

வாழ்க்கையின் கொடூரமான- கொடுமையான சில நிமிடங்களை நான் அப்போதுதான் உணர்ந்துகொண்டேன். 'நான் என்னதான் பண்றது?'

அன்றைய அந்தி சாய்வதற்குள் நிறையக் காரியங்கள் செய்தேன். என்னிடமிருந்த ஒரே பெறுமதியான கைக்கடிகாரத்தைக் குறைந்த விலைக்கு விற்றேன். அந்தப் பணத்தைக்கொண்டு வாப்பாவை ஹாஸ்பிட்டலில் சேர்த்து; பழம், பிஸ்கட், ஹார்லிக்ஸ் என நிறைய வாங்கிக்கொடுத்தேன். மனம் கொஞ்சம் இலேசாகிப்போக....

'அவசரப் பிரிவில்' அவசரமாய் சேர்க்கப்பட்ட எனது வாப்பாவின், பாதியாய் உருக்குலைந்துபோன உடம்பைப் பார்த்து 'இஸ் ஹி யுவர் கிரேன்ட் பாதர்?' என சந்தேகமாய்க் கேட்ட நர்ஸை, பளாரென அறைந்து தள்ளவேண்டும் போலத் தோன்றியும் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மவுனமாயிருந்தேன்.

என் மனப்புகைச்சலுக்கு மத்தியிலேயும்... என்னுடன் சேர்ந்து வந்திருந்த என் உம்மா தொடர்ந்து அழுதுகொண்டேயிருந்தாள்.

இரவு வந்து இருட்டாய்ப் போன போதுகூட...

-எனக்குத் தூக்கம் மட்டும் வரவே யில்லை.

'சந்தோஷங்களேயில்லாமல் என் வாழ்க்கை மட்டும் ஏனிப்படி சோகமாய்ப் போனது?' என்று சிந்தித்துத் தெளிவதற்குள்... விடிந்தது.

தபால்காரன் அந்தக் கடிதத்தைத் தந்துவிட்டுப்போக, என்வலப்பில் இருந்த என் தேவதையின் கையெழுத்தைப் பார்த்தும் ஆர்வமில்லாமல்... மெல்லமாய்ப் பிரித்துப் படித்தேன்.

**என் உயிர் ரமீஸுக்கு,**

**அன்பு முத்தங்களுடன் உங்கள் ரிம்ஸியா எழுதிக்கொள்வது,**

**நம் காதல் விடயம் என் பெற்றோருக்குத் தெரிந்து போச்சோ என்னமோ, ஏ.எல். பரீட்சை எழுதி முடித்த கையோடு ஊருக்கு வரும்படி கடிதம் எழுதியிருந்தார்கள். ஆக, பரீட்சையும் வேறு முடிந்துவிட்டதால், பெறுபேறுகள் வெளிவரும் வரையிலாவது ஊருக்குப்போய் பெற்றோருடன் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.**

**ஊரு விட்டு ஊருக்குப் படிக்க வந்த நான், எப்படி உங்களுக்கும், காதலுக்கும் அடிமையாகிப்போனேன்... என்று யோசிக்கும்பொழுது புதிராகவேயிருக்கிறது. எனினும், உங்களையோ உங்கள் காதலையோ என்றுமே என்னால் மறக்க முடியாது என்பதும் சத்தியம். ஒரு கோடியில் நான், மறுகோடியில் நீங்கள் என நாம் பிரிந்தாலும், என்றும் என் நினைவுகள் உங்களைச் சுற்றித்தான் இருக்கும். இந்நிலையில்...'உள்ளமென்பது உள்ளவரைக்கும், இன்ப துன்பமெல்லாமே இருவருக்கும்!' எனக்கூறி விடைபெறுகிறேன்.**

**(ஊருக்குப் போவதற்கு முன்னால் கட்டாயம் சந்திப்பேன்)**

**அதுவரையில்...**

**காதல் முத்தங்களுடன்,**
**என்றும் உங்கள் ரிம்ஸியா.**

கடிதத்தைப் படித்து முடித்தபோது என் கண்களில் கண்ணீரின் குளுமையிருந்தது. ஏதோவொரு பிரமையில் உடம்பு சில்லிட்டுப் போக, ரிம்ஸியாவின் குழந்தைத் தனமான முகம் என் மனக் கண்ணில் தோன்றி மறைய... நடுங்கும் என் கரங்களையும் பொருட்படுத்தாது கடிதத்தை சுக்குநூறாகக் கிழித்து காற்றோடு பறக்கவிட்டேன்.

காதல் கடிதங்கள் கட்டாயம் பாதுகாக்கப் பட வேண்டிய பொக்கிஷங்கள் என்பதே என் கொள்கையாயிருந்தபோதும்... எதுவுமே செய்ய முடியாத-எதுவுமே புரியாத நிலைமையில் விக்கித்துப்போய்....அழுதேன். கூடவே, மெல்ல முணுமுணுத்தேன்.

'ரிம்ஸியா... என்னை மன்னித்துவிடு!'

ஹாஸ்பிட்டலில்,

வாப்பாவைப் பரிசோதித்துமுடித்த, அந்த வழுக்கைத் தலை டாக்டர் என்னை தனியே அழைத்துப்போய்ச் சொன்னார்,

"உங்க ....ஃபாதருக்கு வந்திருக்கிறது கடுமையான-கொடூரமான அல்சர். காலம் போயிட்டதால குடலெல்லாம் பிய்ஞ்சு புண்ணாகிப்போய்....அவசரமாய் ஆபரேஷன் பண்ண வேண்டியிருக்கு. ஸோ....இன்னும் நான்கு நாளைக்குள்ள ஆபரேஷன் பண்ணியாகணும். மேஜர் ஆபரேஷன் என்கிறதனால கொஞ்சம் சிலவாகும். தவிர, ப்ளட் வேறு தேவைப்படும். உங்களால பணத்துக்கு ஏற்பாடு பண்ணலாம்னா...நான் ஆபரேஷன் பண்றேன்."

"எவ்வளவு சிலவாகும் டாக்டர்?"

"எட்டாயிரம் ரூபா தேவைப்படும். பட்...ப்ளட் டொனேற் பண்றது உங்க பொறுப்பு....."

எனக்குத் தலை சுற்றியது.

'பூதமாய் நிற்கும் பணப் பிரச்சனையை நான் எப்படி சமாளிப்பேன்?' என் சின்ன மனதில் எத்தனை வேதனைகளைத்தான் சுமக்க முடியும் என்றெண்ணிக் குழம்பிப் போய், எதையுமே ஜீரணிக்க முடியாத நிலையில்....

நான் வீடு வந்து சேர்ந்தபொழுது,

வீட்டில் ஏதோ வித்தியாசமாய் உணர்ந்தேன். அக்கம் பக்கத்து வீட்டுப்பெண்கள் சிலர் ஒன்றாய்க் கூடியிருக்க...என்னைக் கண்டவுடன் சேலைத் தலைப்பில் தன் கரங்களைத் துடைத்தபடியே உம்மா ஓடிவந்து கேட்டாள்.

"ரமீஸ்...கையில பணமிருக்காடா?"

நான் பர்சை எடுத்துப் பார்க்க...பஸ் டிக்கற்கள் மட்டுமே மிச்சமிருந்தன. பணம் சுத்தமாய்க் காலியாகிப்போய்...

"என்னிடம் பணம் இல்லம்மா!"

உம்மா வெறுமையானதோர் பார்வை பார்த்து, மெல்லமாய்ச் சொன்னாள்.

"உன் தங்கச்சி பெரிய மனுசியாகி யிருக்காள். முறைப்படி சடங்கு செய்ய வேண்டாமா ரமீஸ்... பணமில்லாம எப்படிடா?"

-நான் மலர்ந்தும் மலராமல்...

என் வீட்டுக்குள் வளர்ந்துவிட்ட பருவப்பூந்தோட்டத்துக்கு, சந்தோஷ நீர் வார்க்க முடியாமல்...ஓரமாய் எட்டி நின்றுபோய் என் தங்கையைப் பார்த்தேன்.

என்றுமில்லாதவாறு புதுப்பொலிவோடு தங்கை வெட்கமாய்ச் சிரிக்க... என் மனதை ஏதோ அடைத்தது. ஆம்! நான் சுமக்க வேண்டிய இன்னொரு சுமையவள்.

ஊருக்குப்போவதற்கு முன்னால் கட்டாயம் சந்திப்பேனென்று அடைப்புக் குறியிட்டுக் கடிதம் எழுதியிருந்த ரிம்ஸியா, என்னை சந்திக்க வராமலே போய்விட்டாளோ என்ற சந்தேகம் எழ, ரிம்ஸியாவின் வகுப்புத் தோழியும் எனது மதினியுமான ஸரீனாவைப் போய்ச் சந்தித்தேன்.

இதமான மாலை வேளையில், தன் வீட்டுப் பூஞ்செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்த ஸரீனா, என்னை முகம் மலர வரவேற்றபடியே சொன்னாள்.

"ரிம்ஸியா இப்பத்தான் வந்துவிட்டுப் போனாள்."

"அப்போ...ரிம்ஸியா இன்னும் ஊருக்குப் போகலையா?"

"இல்ல...உங்களை சந்தித்துவிட்டுத்தான் போவாளாம்."

"வேண்....டாம் ஸரீனா, ரிம்ஸியா என்னை சந்திக்க வேண்டாம்."

ஸரீனா புரியாமல் பார்த்தாள்.

"நான் ரிம்ஸியாவை மறந்துவிடுறதுக்கு முயன்று கொண்டிருக்கேன். ஸோ... நாங்க ரெண்டுபேரும் ஒருத்தரையொருத்தர் சந்திக்காமல் இருப்பதுதான் நல்லது."

ஸரீனாவின் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் படர ஆரம்பித்தன.

"என்ன சொல்றீங்க 'ரமீஸ்?"

ஸரீனாவின் குரல் உடைந்து போனதை யுணர்ந்தேன்.

"ஐஆம் ட்ரையிங்ரு ஃபொர்கெட் ஹேர்"

"ர...மீ...ஸ்!"

நான் மவுனமாகிப்போனேன். ஸரீனாவே கேட்டாள்,

"அப்போ ரிம்ஸியாவைக் காதலிச்சது. அவளுக்காக உருகினது. அவளில்லேன்னா உலகமே இல்லேன்னு சொன்னீங்களே.... எல்லாமே பொய்யா? எல்லாமே வெறும் வேஷம்தானா?"

"இல்ல!"

"அப்போ...ஏன் அவளைக் காதலிச்சீங்க? பணத்துக்காகவா?"

"இல்லவே இல்ல ஸரீனா."

"அப்போ ஏன்?"

ஸரீனாவின் குரலில் கடும் காரமிருந்தது.

நான் சொல்லத் தொடங்கினேன்-

"ஸரீனா...இந்த வானமும் பூமியும் காற்றும் எப்படி உண்மையோ, அதே மாதிரி...நான் ரிம்ஸியாவைக் காதலிச்சது, அவளுக்காக உருகினது, அவளழுதால் நான் அழுதது, சந்தோஷப்பட்டது எல்லாமே உண்மையானது. பச்சையாக சொல்லப் போனால்... உடம்புப் பசியேயில்லாத ஒரு காதலில் நாங்க இணைஞ்சுப்போயிருக்கோம்."

ஸரீனா என்னையே நோக்கியிருக்க-நான் தொடர்ந்து சொன்னேன்.

"பணத்தாசைக்கு அப்பாற்பட்டது என்னுடைய காதல். என்றாலும்.... இன்னைக்கு வாழ்க்கையே பணத்தாலதான் நிர்ணயிக்கப்படுகிறது. ரிம்ஸியா பணக்கார வீட்டுப் பொண்ணு என்பதனால அவள் சந்தோஷமாயிருக்கிறாள். ஆனால்... நான் இப்போ சந்தோஷமாகயில்ல. ஏன்னா.... என்னைச் சுற்றியிருக்கிற வேதனைகளின் பின்னணியில் பணப்பிரச்சனையிருக்கு. ஸோ....

"நான் இத்தோடு என் படிப்பை விட்டுவிட்டு ஏதாவதொரு தொழிலைத் தேடிக்குவேன். என்னுடைய குடும்ப நிலைமையைப் பொறுத்து நான் தொழில் செய்தாகணும். ஆனால்... ரிம்ஸியாவுக்கு அப்படியல்ல. அவளுக்கு இன்னும் நிறையப் படிக்கலாம். பல்கலைக்கழகம் போகலாம். பட்டதாரியாகலாம்..."

நான் பெருமூச்சொன்றை விட்டுவிட்டு மீண்டும் தொடர்ந்தேன்.

"என்னோடு சேர்ந்து என் ரிம்ஸியாவுடைய வாழ்க்கை குட்டிச் சுவராகிப் போயிடக்கூடாது. பணத்துடனும் எல்லா விதமான சந்தோஷங்களுடனும் அவள் சீரும் சிறப்புமாக வாழணும். என் ரிம்ஸியாவுடைய சந்தோஷம்தான் என்னுடைய சந்தோஷம். ஆக...

"ரிம்ஸியா என்னுடைய காதலைப் பொய்யுன்னு நெனச்சாலும் பரவாயில்லை. விட்டுக்கொடுக்கிற தியாக மனப்பான்மைதான் காதலுக்கு உண்மையான அழகு- அர்த்தம் எல்லாமே. என் காதல், நேசம் எல்லாமே யதார்த்தமானது. அவளுடைய வாழ்க்கையாவது நல்லா அமையணும்னுதான் நான் அவளைவிட்டு ஒதுங்கிப்போகிறேன். அடுத்தவங்களைப் பற்றி எனக்குக் கவலையில்ல."

ஸரீனா என்னைப் பரிதாபமாகப் பார்க்க, அவளது விழிகளில் நீர் கோலமிட்டது. கூடவே, நனைந்துபோன என் விழிகளை நானும் துடைத்துக்கொண்டேன்.

"என்னால் ரிம்ஸியாவை மறக்க முடியாது. ஆனாலும்; மறந்துதான் ஆக வேண்டும் என்பது என் விதி ஸரீனா."

"ரிம்ஸியா இதைத் தாங்குவாளா ரமீஸ்...?"

"என்னாலேயே தாங்க முடியவில்லை. ஆனாலும், மறந்துதான் ஆகணும். ஸோ.... தயவு செய்து எப்படியாவது அவளுக்கும் என்னை மறந்துவிடச் சொல்லுங்க. ப்ளீஸ்... நான் வர்றேன் ஸரீனா."

நான் வேகமாய்த் திரும்பி நடக்க, ஸரீனா என் முதுகையே வெறித்துக் கொண்டிருப்பதை சுயமாக உணர்ந்தேன். என்னிதயம் முழுக்கப் பிழிபட்ட வேதனை பரவிப்போக, தள்ளாடிய நடையையும் பொருட்படுத்தாது, வழியில் தென்பட்ட அந்தப் பெட்டிக் கடைக்குள் புகுந்து ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக் கொண்டேன்.

அனுபவமில்லாத பழக்கத்தின் ஆரம்பத்தில்.....

-சிகரெட் புகையை ஈரல்வரை இழுக்க, பலமான இருமல் வந்தது.

என் வாழ்க்கையில் முதன் முதலாக நான் சிகரெட் புகைக்கப் பழகினதும் இப்படித்தானோ?

அங்கே இங்கேயென்று நிறையக் கடன் பட்டு, வாப்பாவுக்கு ஆபரேஷன் பண்ணிய மூன்றாம் நாள், வெள்ளைப் பிடவையால் போர்த்தப்பட்டு வாப்பா மையத்தாய் வீடு வந்து சேர்ந்தார்.

மையத்து வீட்டில் சனம் நிரம்பிப் போய்... உம்மாவும் தங்கையும் அழுதழுதே சோர்ந்து போயிருக்க,

நான் அழவும் திராணியற்று சோர்ந்து போயிருந்தேன்.

மீளாத்துயிலில் இருந்த என் வாப்பாவைப் பார்க்கும்பொழுது, என் நெஞ்சு அடைபட்டுப்போனதை விபரிக்க வார்த்தை இல்லையோ என்னமோ...

'வாப்பா இப்படிக் கஷ்டப்படுகிறதை விட, மவுத்தாகிப் போனாலாவது நிம்மதிம்மா.'

நான் எப்போதோ உம்மாவிடம் சொன்ன, அந்தக் கசப்பான வார்த்தை ஞாபகம் வர... பொடிப் பொடியாய் உதிர்ந்து போன நானும் முழங்காலிட்டு அழத் தொடங்கினேன்.

நேரம் போனதே தெரியாமல்...

மையத்தை அடக்க ஸ்தலத்திற்குக் கொண்டு போவதற்காக சந்தூக்கில் வைத்த நேரம், அறையில் இருந்து எட்டிப்பார்த்த ஸரீனாவிடம் போய் கிசுகிசுப்பாய்க் கேட்டேன்.

"ரிம்ஸியா வரலையா?"

"அவள் இந்த ஊரைவிட்டே போயிட்டாள்."

ஸரீனா மெல்லமாய்ச் சொல்ல...

ஏதோ தொலைந்துபோன காகிதமாய் நான் ஆகாயத்தில் பறந்து, முகவரியே யில்லாததோர் இருட்டுக்குள் வீழ்ந்ததை யுணர்ந்தேன்.

அடுத்தவர்களோடு சேர்ந்து நானும் ஒருத்தனாய், வாப்பாவின் சந்தூக்கைத் தூக்கிப்போய், கபுறுஸ்தானத்தில் மையத்தை அடக்கம் செய்துவிட்டு வரும்பொழுது; வெறுமையாய்.... என்னுடன் சேர்ந்து என் வாழ்க்கை, கனவுகள், காதல் எல்லாமே ஒட்டுமொத்தமாய் மரணித்துப்போய்.... நான் நடக்கவேண்டிய பாதையின் வழி நெடுகவும் கும்மிருட்டு படிந்திருந்தது.

இன்று......

கற்கள் முட்கள் என என் வாழ்க்கைப் பாதையின் அத்தனை இன்னல்களையும், இடர்பாடுகளையும் கடந்து வந்து.... ஏதேதோ நிழல் வியாபாரங்கள் செய்து சம்பாதித்ததில், போன வாரம்தான் என் தங்கையின் திருமணத்தை வெகு சிறப்பாய் நடாத்தி முடித்திருந்தேன்.



தங்கை மணம் முடித்த கையோடு நேற்றுத்தான் புகுந்தவீடு புறப்பட்டுப் போனாள். வீடு வெறுமையாகிப்போய்.... நானும் உம்மாவும் மட்டுமே உலகத்தில் தனித்துவிடப்பட்டவர்களாய்...

ஐந்தாறு வருடங்கள் கடந்துபோயும் என் உம்மா இன்னும் வாப்பாவின் நினைவுகளுடனேயே வாழ்ந்துகொண்டி ருக்கிறாள்.

ஆனால், நான் மட்டும் எப்போதோ என்னைக் கடந்துபோன என் காதலிக்காக இன்னமும் எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன்.

**'காதலி....**
**உனக்கே தெரியாமல்**
**அதேயுன் சல்வார் மடிப்புக்களில்**
**என் காதலை**
**-நான்**
**சேமித்து வைத்திருக்கிறேன்.'**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

"மனதின் அடியில் கற்பூரம் கொளுத்தி வைத்தது போல வேதனை வருகிறது. நெருப்பாய் எரிகிறது."

# எதிலிப் பறவைகளாய்.....

சிறுகதை

ஹரீரா அனஸ்

அந்தப் பால்நிலா பட்டுத் தெறிக்கும் வெள்ளை மணல், வரிசையாய் தோப்பாகி நிற்கும் பனைமரங்கள். அதில் எப்போதும் கேட்கும் 'சர சர' என்கின்ற தென்றல் உரசும் சத்தம். என் தாய் மண்ணில் தான் எத்தனை சிறப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

வானளாவ உயர்ந்து நிற்கும் வல்லிபுரக் கோவில் கோபுரம். தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தேர் பார்ப்பதற்கு எத்தனை கண்கள் வேண்டும். அப்பொழுதெல்லாம் இந்தியாவில் இருந்து வந்த மிகத் திறமையான சிற்பிகளைக் கொண்டு உருவான தேர் அது. அந்தத் தேர் முட்டியில் அமர்ந்து பூனூல் போட்ட ஆசாரிமாருடன் உட்கார்ந்து மணிக்கணக்காக உரையாடியது...

வல்வெட்டித்துறையில் கடலில் வள்ளத்தில் போய் ஒத்துக்கொள்ளாமல் கடல் காற்றுக்கு வயிறு குடல் எல்லாம் வெளியில் வருமளவிற்கு வாந்தியெடுத்தது. எல்லாம் எப்போதோ நடந்து போனவைகள். ஆனால் நேற்றுப்போல் கண்களின் பாவைகளுக்குள்ளில் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் படச் சுருள்கள் போல... நினைவு வரும் போதெல்லாம் திரைப்படமாய் ஓடும் நினைவலை.

எங்களுடைய அப்பா சொல்லுவார், தாத்தா ஆறுமுக நாவலர் காலத்து ஆள் என்று. நல்லூர்க் கந்தன் ஆலயம். அதற்கருகில் ஆறுமுகநாவலர் வாசம் செய்த பூமி. தமிழும் சைவமும், இஸ்லாமும், கிறிஸ்தவமும் எவ்வளவு அன்னியோன்யமான பாசப்பிணைப்பில்.... ஆனால் இன்றைக்கு எல்லாமே நீர்க் குமிழிபோல ஆகிவிட்டிருந்தது. இந்த அலங்கோலம் ஏற்படக் காரணமாயிருந்தது என்ன?

நினைக்கும்போதே மனது பரிதவித்துப் போனது. கண்கள் முட்டியபோது நினைவுகள் தழும்ப தானாக அழுகை வந்தது. இனங்களுக்கிடையே இப்போது எவ்வளவு பிளவு? என்ன செழிப்பாய் இருந்த யாழ்ப்பாணம்! என்தாய் மண்!

நயகோ என்று வாய்விட்டுக் கத்த வேண்டும் போலிருந்தது.

மேரி!

உன் நினைவுகள் எனக்கு எவ்வளவு பசுமையானவை. உன்னில் நான் ஒன்றையும் காணவில்லை. வேற்றுமை என்று. நீ கிறிஸ்தவத்தி. நான் ஒரு முஸ்லிம். வேறென்ன. எத்தனை பாதை வளைவுகள்:



எத்தனை மாலை நேரப் பூங்காக்கள்: எத்தனை சர்க்கஸுகள்; எத்தனை விவாத மேடைகள்; விசுவின் படங்கள்; கவிதைப் போட்டிகள். மேரி! என் தங்கையே! மனத்தின் அடியில் நெருப்பாய் எரிகிறது. எல்லாம் முடிந்துபோய்விட்டது. நான் ஒரு அகதி. என் பூமியை விட்டுவிட்டு வந்தவன்.

என் நந்தவனம். காரைநகரின் கஜுரினா பீச். ஒற்றைப் பனை மரத்து அடி, கதை கதையாய் நானும் மேரியும்-பேசியும், ஓடியும், அளைந்து விளையாடிய மண் மேடுகள், எல்லாம் எங்கேயோ தொலை தூரம் போய் மறைந்து கொண்டன. என் மேரியும்கூட.

"மேரி!" "என்னண்ணா?"

"இண்டைக்கு எனக்கென்னவோ மனக் கவலையாய் இருக்கம்மா."

"ஏனண்ணா உடம்புக்கு ஏதாவது சரியில்லையா?"

"இல்லை மேரி உடம்புக்கில்லை; மனத்துக்குத்தான்."

"எங்கடை இந்தப் பொன்னான பூமிக்குத் தான் எத்தனை கரைச்சல், அலைக்கழிவு."

"ஓம் இப்பிடியே ஆகிக்கொண்டு போனா முடிவு என்னண்ணா?"

"முடிவாம்மா? கொஞ்சக் காலத்திலை யாழ்ப்பாணம் எண்ட ஓர் இடம் இருந்த தெண்டு புதை பொருள் ஆராய்ச்சியிலைதான் கண்டுபிடிக்க வேண்டி வரும் தங்கச்சி."

"எவ்வளவு செழிப்பாய் இருந்த பூமி....?" பெருமூச்சோடு மனம் பாரித்துக் கொண்டது. எவ்வளவோ சதாகரிக்க முடிந்தும் முடியாமல் போய்விட்டது.

'என்ன இருந்தாலும் எங்களை எங்கடை மண்ணிலை இருந்து புலியள் விரட்டியிருக்கக்கூடாது.'

மேரி பற்றிய நினைவு. அவள் என்னைவிட்டுப் பிரிந்துபோன. இல்லை... இல்லை பிரிக்கப்பட்டது......

சிறிய வயதில் இருந்து ஒன்றாகவே படித்து...பக்கத்து வீட்டில் குடிவந்து.... பின்னர் மேரியும் நானும் வளர்ந்து... அண்ணன் தங்கையாகி... இப்போது என் மனம் நிறைய என் உடன் பிறவாத தங்கச்சி மேரிதான். என் ஆசான்- என் அன்புக்குரியவள்- என் பள்ளித் தோழி- என் விமர்சகி-என் ரசிகை, என் உயிர் எல்லாமே என்ற பின்னர் அவளுடன் சேர்த்து என் பூமியை விட்டு வந்த பிரிவு மனதைப் புண்ணாக்கி அது விகாரமாகி தினம் தினம் சீழ்படியும் ரணமாக ஆகி என்ன வேதனை செய்கிறது....!

மேரியின் அப்பா றோக்நாதர் ஒரு அரசாங்க பொறியியலாளர். எவ்வளவு புரிந்துணர்வுள்ளவர். அழகான அரசியல் விமர்சகர். அவர் கிறிஸ்தவர். நாங்கள் முஸ்லிம்கள். இந்த ஒரே காரணம் மட்டும்தான் - 24 மணி நேர அவகாசத்தினுள் எங்கள் சொந்த பூமியில் இருந்து செத்த ஆட்டின் உண்ணியாய் கழற்றப்பட்டோம்.

கச்சதீவு-

எத்தனையோமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். யாழ்ப்பாணத்தில் என்றால் ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு போகும் கைங்கரியம் போல எண்ணி விடுவார்கள். அப்படியும் போலத்தான்.

போக வேண்டும் என்று முடிவெடுத்து மேரியின் அப்பாவும் எங்கள் வாப்பாவும் ஒருநாள் காலையில் நயினாதீவு போய் இயந்திர வள்ளம் ஒன்று வாடகைக்கு எடுத்துப் புறப்பட்டோம். என்ன அருமை! பரந்த நீலக்கடல் மாதா இரண்டு துருவங்களாய் இன்று ஆகிப்போன குடும்பங்களை என்ன அருமையாய் அன்றைக்குச் சுமந்திருந்தாள்.

எவ்வளவு குதூகலம்! றோக்நாதரும் எங்கள் வாப்பா பாரூக்கும் மேரியின் அம்மா கொன்செட்டாவும் எங்கள் உம்மா ஆயிஷாவும் என்ன அன்னியோன்யம். இரண்டு வீட்டுக் குழந்தைகளும் என்ன அழகாய் சேர்ந்திருந்து வீட்டில் சமைத்துக்கொண்டுவந்த பட்சணங்களை, கடலில் விரைந்து செல்லும் படகில் இருந்து கொண்டு உண்டார்கள்!

"அதோ அந்தப் பக்கம்தான் குமரி முனை" என்று படகோட்டி சொல்ல எவ்வளவு ஆசையாய் திரும்பித் திரும்பிப் பார்த்தோம். தமிழ்நாட்டு மீனவர்களை எல்லாம் கண்டோம். எங்கள் மனம் எவ்வளவு குதூகலித்துப்போனது! அவ்வளவாக ஆழமில்லாத எங்கள் ஆதம்பாலத்தை எப்படி எல்லாம் அனுபவித்தோம்! வங்கக் கடலினது பொறுமையின் ஆழத்தை வியந்து வியந்து மேரியும் நானும் எத்தனை கவிதைகளைப் போட்டிக்கு எழுதிக் குவித்தோம்! கச்சதீவின் சுண்ணாம்புக் கற்களில் அமர்ந்து எப்படியாய் குதூகலம் கொண்டோம்!

'கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமா? இந்தியாவிற்குச் சொந்தமா?' கடற்கரையின் ஓரத்தில் மணல் மேட்டல் அமர்ந்துகொண்டு விலா வாரியாய் புட்டுப்புட்டு மேரியும் நானும் என்னவாய் விவாதம் நடத்தினோம்! சத்தம் கேட்டு ஓடிவந்த றோக்நாதர் இலங்கையின் சார்பில் விவாதம் செய்த என் பக்கம் நின்று,சர்வதேச கடல் எல்லைக் கோட்டைக்காட்டி அதனை வைத்து சார்பாக்க இலங்கைக்குத்தான் சொந்தம் என்று முடித்து வைத்தபோது உச்சாய்ப்பில் மேரி கத்தி, இந்திரா காந்தி-சிறிமாவோ ஒப்பந்தத்தை ஆதாரம் காட்டி கச்சதீவு இந்தியாவிற்கும் சார்பானது என்று வாதத்தை உடைத்த போது... என்ன உற்சாகம்! என்ன குதூகலம்...!

மேரியின் அப்பா வயடைத்துப்போக... எங்கள் வாப்பா சின்னவள் ஜெமீலாவையும் கூட்டிக்கொண்டு எங்கள் எல்லோருக்கும் சிற்றுண்டி பரிமாறிச் சிரித்தது.

ஓடி ஓடி...தானியங்கி கமராவிற்கு வித்தியாசமான கோணங்களில் முகம் கொடுத்தது.

மேரி!

நினைவுகள் மட்டும்தான்.....! அடுத்தது பெருமூச்சு.

இந்த தென்னோலைக் குடில்களும் அடிக்கடி தீப்பற்றிக்கொள்கின்றன. அரசாங்க மானியத்தில் கால் வயிறும் அரை வயிறும் உண்டு காலம் கழிப்பதற்கும் முடியாத எத்தனை சோதனைகள்? அகதி என்பதற்கு இதுதானா வரைவிலக்கணம்? எதிலிப்பறவைகளாய் அங்கொரு இடம்- இங்கொரு இடம். தொடரும் துன்பங்களுக்கு எத்தனை முகங்கள்? எங்கள் அகதி முகாம்களைப்போல...

கனவுகள்கூட கஷ்டமானதாகத்தான் இருக்கின்றன.

மீண்டும் என் சொந்தத் தாய் மண்ணில் என் தமிழ் மண்ணில் ஓடி-பின்னர் நடந்து—அந்த சலசலத்து ஓடும் குருவிச்சை ஆற்றில் ஆசைதீரக் குளித்து... வளர்ந்து போன என் தங்கை மேரியைக் கண்டு, அவளையும் இழுத்துக்கொண்டு பனந்தோப்புகளுக்குள்ளாய் ஓடி... குதூகலித்து.... நடக்குமா? நான் திரும்புவேனோ...? சிதறிப்போன முத்துக்களாய் எங்கள் மக்கள்...! கண்ணீர் வருகிறது. மனம் கனக்கிறது. அழ வேண்டும் போல் அடிக்கடி நினைவு தட்டுகிறது.

நான் ஒரு அகதி.<br>
எனக்கு இரண்டு பிரிவுகள்.<br>
ஒன்று என் தாய்த் தமிழ் மண்.<br>
மற்றையது மேரி.

---

சிறுகதை

"பெண்-நட்புடன் நாலுவரி பேசினால் அவள் நடத்தையைச் சந்தேகிப்பீர்கள்"

# வேலிகள்

மட்டுநகர் நர்மி

'சீக்கிரம் ரெடியாகு' என்ற அம்மாவின் டென்ஷன் அதிகமாகப் பட்டது கங்காவிற்கு. இந்தப் பெண் பார்க்கும் படலமே ஒரு வேதனைக்குரிய வேடிக்கையாகப்பட்டது. பெண்ணை நிறுத்தி அவள் மூலம் வரப்போகும் இலாபங்களை கணக்கிட்டு, இலாபங்கள் குறைவானால் நிராகரித்து, சீ, இதென்ன சமுதாய அமைப்பு என்கிற கோபம் வந்தது. இதில் பெண்ணும் ஒரு உணர்வுள்ள மனுஷி என்கிற அடிப்படை மனிதாபிமானம்கூட அடிபட்டுப்போவது வேதனையைத் தந்தது.



இதெல்லாம் அம்மாவிற்குச் சொல்லி புரியப் போவதில்லை. அவள் பழங்காலத்து மனுசி, பெண்ணைப் பாரமாக நினைக்கும் பரம்பரை. இன்று பெண், வீடு தாண்டி வேலைக்குப் போனாலும் இந்த நினைப்பு மாறப்போவதில்லை என்ற எண்ணம் வந்தது.

மாப்பிள்ளைக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறதா? அது போதும். அவளின் எதிர்பார்ப்புகள் என்ன என்கிற பேச்சுக்கே இடமில்லை.

வெளியே கேட்ட பேச்சுக்குரல்கள் மாப்பிள்ளை வீட்டவரின் வருகையை உணர்த்தியது. மாப்பிள்ளை மகேஷ் பார்ப்பதற்குச்சுமாராக இருந்தான். பெயரின் பின்னால் என்ஜினியர் பட்டம் வேறு. இவரின் விலை என்னவாக இருக்கும் என்று எண்ணியபோது அவளின் சிந்தனையைக் கலைத்தது மகேஷின் குரல்.

"உங்கள் பெண்ணுடன் நான் கொஞ்சம் தனியே பேசலாமா?"

'ஓ இவன் படித்தவன். வெளியுலகு தெரிந்தவன். பெண்ணின் மனதையும் அறிய விரும்புகிறான். அவளின் எதிர்பார்ப்புகளுக்கு இடங்கொடுக்க எண்ணுகிறான் போலும்' என்ற எண்ணம் வந்தது. முதன் முறையாக அவன் பால் ஒரு மதிப்பு ஏற்பட்டது. அந்த மதிப்பே மனதுள் மெல்லிய சந்தோசத்தை ஏற்படுத்திற்று.

அவனை அழைத்துக்கொண்டு செல்கையில் என்ன கேட்கப் போகிறான் என்ற எதிர்பார்ப்பு வந்தது.

"உங்களை இதற்கு முன் ஒரு தரம் கடற்கரையில் உங்கள் சினேகிதியுடன் கண்டேன். தனியாக இருவருமா வந்திருந்தீர்கள்?"

அவனின் குரல் அவளின் கவனத்தை ஈர்த்தது.

"ஆமாம். அதிகமாக நான் வெளியில் படம், பீச் எங்கானாலும் சினேகிதிகளுடன் செல்வது தான் வழக்கம்."

கங்காவின் பதிலால் சற்று அசந்துதான் போனான் மகேஷ். அவன் என்னதான் படித்திருந்தாலும் பிறந்து வளர்ந்தது எல்லாம் கிராமத்தில்தான். பெண்கள் சைக்கிள் ஓட்டினாலே இன்னும் புதினம் பார்க்கும் ஊர். கம்பஸில் படிக்கும் போது அங்கு படிக்கும் பெண்களின் சுதந்திர மனப்பான்மையை வியந்தவன்தான். ஆனாலும் தனக்கு மனைவியாகப் போகிறவள் தாய், தந்தையரின் கட்டுப்பாட்டுக்குள் வளர்க்கப்பட்டவளாக- இப்போது கங்கா சொல்வது போல் -வெளியே எங்கும் தனியே திரியாதவளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தவன்.

"இப்படித் தனியே திரிவது பிழையில்லையா?"

ஆச்சரியமாக அவனை ஏறிட்டாள் கங்கா.

'நீ படித்திருந்தும் சராசரிதானா? படிப்பு, வெளியனுபவம் பெற்றிருந்தும் நீ கிணற்றுத் தவளைதானா? பெண் என்பவள் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டும் என்று எண்ணும் ஆண் ஆதிக்க கும்பலில் நீயும் ஒருத்தனா?' கேள்விகள் மனதுக்குள் சராமாரியாக எழுந்தன.

'படி தாண்டியிருக்கிறாள். இவள் பத்தினிதானா?' என்ற அவனின் சந்தேகம் புரிந்தது. எதற்குப் பதில் சொல்லாவிட்டாலும் இதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்கிற உத்வேகம் வந்தது.

"எது பிழை, எது சரி என்று எந்த அளவுகோலைக்கொண்டு அளக்கிறீர்கள்? நிழலைப் பார்த்தே கற்பு கெட்டாள் கௌதமனின் மனைவி என்று ஒரு கதை உண்டு. அதனுடன் பார்க்கும்போது இன்று உலகத்திலேயே கற்புள்ளவள் என்று ஒருவள் இல்லை தெரியுமா? இன்று வேலைக்கென்று பெண்கள் வெளியில் வந்தாயிற்று. பொருளாதார சிக்கலிலிருந்து சற்று விலகி நின்று பெருமூச்சு விட, அவள் கொண்டு வரும் சம்பளம் உங்களுக்குத் தேவையாக இருக்கிறது. ஆனால் அவள் தனியே வெளியிடங்களுக்குச் செல்வதோ நாலு பேருடன் பேசுவதோ பிடிக்காது. இது என்ன நியாயம்?

"வீட்டிற்குள்ளிருந்து கெட்டுப்போனவளும் உண்டு. படி தாண்டிய பத்தினியும் உண்டு. தயவு செய்து எங்களை மிருகக் காட்சிச்சாலை விலங்காக நடத்தாதீர்கள்"

அவளின் பேச்சு மகேஷுக்கு திகைப்பை ஏற்படுத்திற்று. தன் கட்சிக்காக இவள் இப்படி வாதாடுவாள் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் அவனின் மௌனமே அவளை மேலும் பேச தூண்டிற்று.

"நீங்க மட்டுமல்ல, அநேக ஆண்களின் மனோபாவமே இப்படித்தான் உள்ளது. பெண் என்பவள் நட்புடன் நாலுவரி பேசினால் அவளின் நடத்தையையே சந்தேகிப்பீர்கள். ஒரு நல்ல நட்பே அங்கு கொச்சைப்படுத்தப்படும். ஆடை குறைபோ, அரையிருளில் ஆட்டமோ நாங்கள் கேட்கவில்லை. ஆனால் தனியே ஒருவர் வெளியே போய் வருவதால் மாத்திரம், அவளின் நடத்தையை மட்டமாக எடை போடாதீர்கள் என்று தான் கேட்கிறோம்.

"பெண்ணையும் ஒரு மனுஷியாக மதித்து அவளின் உணர்வுகளுக்கும் சுதந்திரத்திற்கும் மதிப்புக் கொடுத்து அவளை நட்புடன் நடத்துபவனே உண்மையான ஆண்மகன். அப்படியானவர்கள் வரும்வரை- இந்த சமுதாய வேலிகளை விஸ்தரிக்கும்வரை நாங்கள் யன்னல் கைதிகள் தான்."

அவளின் இந்தப் பேச்சுக்கு மேலும் எதுவும் பேச முடியாமல் வெளியேறும் மகேஷை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் கங்கா.

அவன் உருவம் மறைந்ததும் அதுவரை தேக்கியிருந்த அழுகை வந்து எட்டிப்பார்க்க, இந்த சமுதாயத்தின் பார்வைகளைத் திருத்த தன்னால் எதுவுமே செய்ய முடியவில்லையே என்ற கையாலாகாத்தனம் மெல்ல மெல்லப் புரிபட, அப்படியே உடைந்துபோய் மெலிதாக விசும்ப ஆரம்பித்தாள் கங்கா.

---

# கித்தரித்த டி ஜோக்ஸ்



**மனைவி:** என்னங்க... என் கையால சாகணும்னு அவன் தலையில எழுதியிருக்கு. அத யாராலும் மாத்த முடியாதுன்னு, ராத்திரி தூக்கத்தில கத்தினீங்களே ஏன்?

**டாக்டர்:** ஒண்ணுமில்லை, ஒருத்தனை ஒப்பரேஷன் செய்யிற மாதிரி கனவு கண்டேன்.

▫▫

- யார் வந்தாலும் உள்ளேவிட வேண்டாம்னு தலைவரோட உத்தரவு.
- நான் அவரோட மனைவிங்க.
- ஆமா.... இதையேதான் வர்றவங்க எல்லாரும் சொல்லுறாங்க.

▫▫

**அவள்:** கல்யாணமான புதுசில எனக்கு அவரைக் கண்டாலே கைகால் உதறும்.

**இவள்:** இப்ப?

**அவள்:** இப்ப அவருக்குத்தான்.

▫▫

**அவர்:** உங்க பொண்ணு காணாமப் போயிட்டாளாமே? பொண்ணு எப்படி இருப்பா?

**இவர்:** கோயில் சிலை மாதிரி இருப்பா.

▫▫

**ஒருவர்:** குடை ரிப்பேர்காரன்கிட்ட என் புதுக்குடையை ரிப்பேர் பண்ணக் குடுத்தது தப்பாப் போச்சு.

**மற்றவர்:** ஏன் என்னாச்சு?

**ஒருவர்:** கம்பி நீட்டிட்டான்.

▫▫

**பாபு:** அதிக சத்தம் போட்டு வியாபாரம் செய்பவர் யார்?

**கோபு:** கத்தி வியாபாரி.

▫▫

**சாப்பிட வந்தவர்:** என்னப்பா இட்லி இவ்வளவு சின்னதா இருக்கு?

**வெயிட்டர்:** நீங்கதானே சார் சொன்னீங்க. மல்லிகைப்பூ மாதிரி இட்லி கொண்டுவான்னு.

▫▫

**நோயாளி:** டாக்டர், எருமைமாடுமேல நீங்க ஏறி வாற மாதிரி கனவு கண்டேன்.

**டாக்டர்:** கூடிய சீக்கிரம் உனக்கு ஒப்பரேஷனுக்கு ஏற்பாடு பண்ணிட வேண்டியதுதான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலக்கிய நயம்

## மன்னித்துவிடு மலர்க்கொடி

தருவது ரசிகன்



குயிலினம் இசைபாடி மகிழ, காலையில் மலர்ந்த பூவினம் தம் வாசத்தால் சுற்றத்தை சுகந்தமாக்கிட, இரவுப் பனியின் ஈரம் இழக்காத நிலம் பாதங்களுக்கு குளிரூட்ட, தலைவன் தன் இல்லம் முன்சென்று மெல்லக் கரம் நீட்டி வாயில் கதவினில் இரண்டுமுறை தட்டினான்.

உள்ளேயிருந்த தலைவிக்கு கதவு தட்டப்பட்ட முறையில் இருந்தே வந்திருப்பது தலைவன்தான் என்று குறிப்புத் தெரிந்தது.

ஓடிச்சென்று, கதவம் திறந்து, விரிந்து பரந்த அவன் மார்பிலே தன் மார்பு பொருந்திட கட்டியணைத்து,

"இத்தனை நாள் போயிருந்ததெங்கே அத்தான்? மோகமடி உன்மீது எனக்கு. தாகமடி தினந்தோறு ம் எனக்கு; கொட்டிக் கொடடி என் கெட்டிக்காரச் செல்லமே கட்டி முத்தம் எனக்கு. இல்லாவிட்டால் என் இல்லாளே! தட்டிப்பறிக்கப்பட்ட பொருள்போல என் தூக்கம் தொலைந்து விடும் என்று தெரியும்தானே உனக்கு!' என்றெல்லாம் ஓயாமல் உரைக்கும் என்னவனே! இனிய பொன்மகனே! இத்தனை நாள் எங்கோ நீ ஒளித்திருந்த மாயம் என்ன? அதனாலே என் மனதில் பிரிவென்ற வேல் பாய்ந்து விளைந்து விட்ட காயங்கள் ஒன்றா? இரண்டா? எப்படி என் அத்தானே அதனை நான் எடுத்து ச்சொல்ல?"

என்றெல்லாம் மனதிலே கிடந்த எண்ண ஓட்டம் சொக்கி, பிரிவென்ற வாட்டம் போக்கி சொல்மாரி பொழியத்தான் நினைத்தாள் தலைவி.

பாதங்கள் பரபரத்தன. புற்று க்குள் இருந்து வெளியே தலைநீட்டும் பாம்புபோல மனதின் ஆழத்தில் இருந்து ஆசை எட்டிப்பார்த்தது.

"விலைமகளிர் இல்லம் சென்று அவர்கள் வீசிய மோகவலையிலே விழுந்து, அவர்கள் பருவ எழில்கள் மேல் கொண்ட மையலால், நீ ஒருத்தி இங்கிருப்பதையே மறந்து, முற்று ம் து றந்த முனிவனைப்போல், இவனோ சித்தம் முற்றாய் து றந்து விட்டு உனக்கு து ரோகம் என்னு ம் குற்றம் இழைத்து க் கிடக்கிறானடி. நீ சுத்தம் என்று நம்பினாயே அந்தப் பித்து ப் பிடித்தவன்."

என்று தோழி சொன்ன செய்தி நெஞ்சில் தீயை வளர்த்து விட, மனதில் எழுந்த ஆசையினை மறித்து த் தடுத்தாள் தலைவியவள்.

அதனால், 'காத்திருக்கட்டும். நான் இருந்தேனே இத்தனை நாள். கதவம் தட்டும் ஓசை கனவில் கேட்டு எழுந்து எத்தனைநாள் ஏமாந்து போயிருப்பேன்.

வாயிலில் நிழலாடுவது போல் தெரிய வந்து விட்டார் வெந்து போன நெஞ்சக்கு அன்பென்னு ம் மென்பஞ்சால் பரிவு செய்து வருடிவிட என்று நினைத்து பின் அது முற்றத்து மாமரத்து கிளை அசைவு என்று தெரிந்து ஏமாந்து, விரகதாபத்தில் வீழ்ந்த நாட்களை எண்ண முடியுமோ விரல் விட்டு?

'நிற்கட்டும், நிற்கட்டும். நன்றாக காத்து நிற்கட்டும்.'

'காத்திருக்கும்போது வரும் வேதனையின் பாரத்தை கடுகளவாயினு ம் கண்டறியட்டும்!' என்று சின்ன இடை நெளிய, அன்னநடை நடந்து, அந்த கன்னல் மொழித் தலைவி மெல்லக் கதவம் திறந்தாள்.

கதவம் திறந்தவுடன் தன் கனிமொழி யாளைக் கிளி இதழாளை, எறிவேல் விழியாளை கண்ட தலைவன் தன் வெண் பற்கள் அத்தனையும் வெளித்தெரிய சிரித்தானே சிரித்தான்.

ஏறெடுத்து ம் பார்க்கவில்லை. 'வாருங்கள்' என்று ஒரு வார்த்தைகூட வண்ணத்தாள் இதழில் இருந்து வரவில்லை.

அவிழ்ந்திருந்த பின்னல் அலைய, பின் எழில்கள் சற்றே அசைய, உள்ளே எரிந்த தீ நடையில் தெரிய திரும்பி நடந்து போனாள்.

தலைவன் நெஞ்சுக்கு தெரியும் தலைவியின் கோபம் நியாயம் என்று.

கதவம் மூடிவிட்டு, பூனைபோல் நடந்து போய், அவள் கூந்தலில் தொட்டான்.

"கோல உருவத்தாளே கோபமா என்மீது? நியாயம்தான் நின் கோபம். கொட்டிவிடு என்மேலே கோபம் அத்தனையும். மாறாக மௌனத்தால் கொல்லாதே."

என்றான் தலைவன். எரியும் தீயில் நெய் ஊற்றியது போல் தலைவன் வார்த்தை அவள் கோபத்தை வளர்த்தது.

"குற்றமுள்ள உம் நெஞ்சை கேளும் அது கூறு ம் உரிய பதிலை! மயக்கும் விழிகள் என்று ம், தழுக்கி மினு க்கிய வெளிப்பகட்டுக்காரிகளின் மேனிதான் மேதினியில் புனிதம் என்று ம் தொட்டுத் தழுவி மதிகெட்டு கிடந்த உம் கரங்கள் தொடவேண்டாம் என் கூந்தல்!"

சீற்றத்தில் வெடித்தன சினம் உமிழும் வார்த்தைகள்.

செய்த குற்றத்தால், கண் கெட்டுப்போய் தன் கண்ணான து ணைவிக்கு செய்து விட்ட து ரோகத்தால் வருந்தி, மிகப் பணிந்து, கெஞ்சுவது போல் குழையும் வார்த்தைகளால் தலைவன்,

"வேண்டாத செயல்தான் செய்தேன் நான்.

அள்ள அள்ளக் குறையாத பருவச் சுரங்கம் நீயிருக்க, பொன் இழந்து, பொருள் இழந்து பொல்லாத பாவையரின் விழிப் பொறியில் நான் விழுந்து பொன் முடிய, பொருள் தீர 'போ வெளியே' என்று அவர் சொன்ன சொல் எந்தன் நெஞ்செரிக்க, பொன் பூவே, போர் விழியின் மறு பக்க பரிவு எனக்கு காட்டி நின்ற வான் நிலவை வெல்லு ம் என் புகழ் பெண்ணே உன் அருமை, நிகரில்லா நின் பெருமை அறிந்து ஓடிவந்தேன்–திரும்பியடி!"

தணிந்து அவன் பணிந்து சொன்ன வார்த்தைகளும் நீரின் மேல் எழுத்தாக பயனற்று ப் போனது. எரிந்து கொண்டிருந்த கோப வெப்பத்தில் குளித்து வந்தன தலைவியின் வார்த்தைகள்,

"சந்தனப் பொய்கை கசந்தது என்றோ சாக்கடைப் பக்கமாய் போய் விழுந்தீர் நீர். அறு சுவை விருந்து வெறு த்த உம் நாவு நினைத்தாலே குமட்டும் கெடுவிருந்து ண்டு எப்படி மகிழ்ந்தது? ஆடுவீர், பாதை மாறு வீர். பரத்தையரோடு கூடுவீர். ஆடவர் என்னு ம் சலு கையாலே கூடாத நடத்தையெல்லாம் நாடுவீர். ஆடி முடிந்து உம் சக்தி ஒடுங்கிப்போக, கண்கெட்டு போன பின்னால் ஞானம் வர, என் மீது வாஞ்சையென்று ம் வயிரமான நேசமென்று ம் வந்து கானம் பாடுவீர். ஏன் வந்தீர்? எதற்கு வந்தீர். போம் வெளியே!"

தலைவன் வாயடைத்து ப்போய் நட்டகல் போலே ஆனான்.

அந்நேரம் வாசல் கதவம் தட்டப்பட மாறாத கோபம் மறையாமல் தலைவி போய் கதவம் திறந்தாள்.

வந்தவள் தோழி. உள்ளே நடந்த வாயாடல் வெளியே கேட்டதால் தலைவியின் உள்ளத்து பூகம்பம் உணர்ந்தாள்.

தலைவியின் கரம் பற்றி உரிமையோடு இல்லத்தின் பின்புறமாய் அழைத்து ச் சென்றாள்,

"நியாயம்தான் உன் வாதம். அநியாயம்தான் அவன் போன சோரம். ஆயினு ம் இது முதல் முறை. அதனால் ஒருமுறை மன்னித்தால் தவறல்ல என்று தான் நூறு முறை சொல்வேன்."

"என்னடி சொல்கிறாய் மன்னிப்பா? மின்னு ம் எழில் பெண்கண்டால் நாளை மீண்டும் இவன் அவள் பின் போவான். மோகத்தால் அவள்மீது மொய்த்து க்கிடந்து விட்டு மறு படி வந்து ம் மன்னிப்பாய் என்னை என்பான். போது மடி இனி வேண்டாம்!"

"புரிகிறபடி எனக்கும். ஆயினு ம் து ணை வேண்டாமா உனக்கும்? இரந்து வந்து மன்னிப்பு கேட்கிறான் உன் மனாளன். திசைமாறியதால் தெளிவு பெற்றான். இனி கொடிய வனமாம் விலை மகளிர் இல்லம் நாடான். ஒருமுறை மன்னித்து விடு. இது வே இறு தி என்று எடுத்து ச் சொல்லிவிடு. அதற்கும் அவன் சம்மதித்தால் பிணங்காதே அணைப்பிலே இருவரும் பிணைந்து புது க் கணக்கினை ஆரம்பிக்கலாம் மகிழ்ந்து."

தலைவி வெட்கப்பட்டாள். தழுவ ஆசைப் பட்டாள். தோழி மெல்ல விடைபெற்று நழுவிக்கொண்டாள்.

'கண்ணீர் வழிந்தோடி, உறக்கம் கலைந் தோடிய கண்களே இனி உங்களுக்கு தொல்லை இல்லை. வெந்து புலம்பிய மனமே தோழி சொன்னதை கேட்டாயல்லவா? இனி ஏது நான் அதற்கு மேலே சொல்ல'

தலைவியின் விழிகள் இப்போது தலைவனைத் தேடுகின்றன.

இந்தக் காட்சியைத்தான் விளக்கியிருக் கிறது கலித்தொகை. சங்கத் தொகை நூல்கள் எட்டில் ஒன்றான கலித்தொகையில் ஒரு பாடல்.

**"தகையது காண்டைப்பாய்**
**நெஞ்சே பனி ஆனால்**
**பாடில்களர் பாயால் கொள்!"**

கலித்தொகை

## குறுக்கெழுத்துப் போட்டி இல–60

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | |
| | ■ | 4 | | | | |
| 5 | | | ■ | ■ | | ■ |
| | 6 | ■ | 7 | | | 8 |
| | | ■ | | ■ | | |
| ■ | | ■ | 9 | | ■ | |
| 10 | | | | ■ | 11 | |

### இடமிருந்து வலம்

1. சோற்றோடு தயிரும் கலந்து இதனையும் தொட்டுக்கொண்டால் சுவையோ சுவை.
3. இதை அழகுபடுத்தவும் இப்போது விரிப்புகள் வந்துவிட்டன.
4. தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் தமது தரப்புக்குத்தான் இது அதிகம் என்று சொல்லிக் கொள்ளும்.
5. குட்டி போட்டுக்கொண்டே இருக்கும் என்பார்கள்.
7. இரும்பின் இன்னொரு பெயர்.
9. மோதல்களிலும் இதைப் பயன்படுத்துவ துண்டு.
10. இது குறைவாக இருந்தால் வேட்பாளர் களுக்குப் பயம் வந்துவிடும்.
11. இது வந்தால் நாம் போர்வை தேட வேண்டி இருக்கும்.

### மேலிருந்து கீழ்

1. வேட்புமனுத் தாக்கல் செய்யும்போது இப்படியாகவும் செல்வதுண்டு.
2. திருவிழாக்காலங்களில் காணலாம்.
3. இது அதிகம் இருந்தால் கெடுதிதான்.
6. வானில் இருந்து தரைக்கு வர உதவும்.
7. இது ஒரு உருண்டை என்று முதலில் சொன்னபோது யாரும் நம்பவில்லை.
8. இருட்டில் தொலைத்துவிட்டால் தேடுவது கஷ்டம்தான்.

***இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 06.08.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:***

குறுக்கெழுத்துப் போட்டி இல-60
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-58க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பி | ச் | சை | ■ | 2 ஞா | யி | 3 று |
| ர | ■ | 4 க | ன் | னி | ■ | வா |
| 5 சா | 6 ரா | ய | ம் | ■ | 7 க | ண் |
| ர | சி | ■ | 8 ன் | 9 வி | ர் | டா |
| ம் | ■ | 10 தொ | ■ | ரி | ■ | ■ |
| ■ | 11 மோ | ப் | ப | ச | க் | 12 தி |
| 13 கோ | ப் | பி | ■ | ல் | ■ | ரி |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.58இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. கே. ரவிச்சந்திரன் பதுளை.
2. வ. துரைராசா கொழும்பு–06.
3. வி. மாரிமுத்து கண்டி.
4. ஏ. ஜபார் கல்முனை.
5. திருமதி. கோகிலா சதாசிவம் திருகோணமலை.
6. எஸ். உவைஸ் புத்தளம்.
7. சி. தாரிணி மாத்தளை.
8. பா. சிவயோகன் நீர்கொழும்பு.
9. எம். வீரசிங்கம் மட்டக்களப்பு.
10. ஆ. குமுதினி நுவரெலியா.

*இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.*

## தேர்தல்கால குறுங்கதை

# இவர்களுக்கும் திருவிழா



திருமலை சூந்தா

"'எம்.பி.' உத்தியோகம் இப்ப மலிஞ்சு போச்சு. காற்சட்டை போட்டவன் எல்லாம் 'எம்.பி.' ஆக ஆசைப்படுகிறான். இதுக்கென்று ஒரு தகுதி வேண்டாம்? சரி கதைக்க பேச கெட்டித்தனம் இல்லே...ஊரில நல்ல பேராவது எடுத்திருந்தால்..சே..."

தேவகடாட்சம் தன் பெருத்த உடலை அசைத்துக்கொண்டு சொன்னபோது நாதன் சிரித்தே விட்டான்.

"ஏண்டா சிரிக்கிறாய்...?"

"இல்ல..சும்மா.." நாதன் மளுப்பினான்.

"பாராளுமன்றம் வேண்டாம் என்றும் வந்தவையள் இப்ப எதுக்கு பாராளுமன்றம் போயினம்? சரி...இந்த பாராளுமன்றத்தால எங்கட பிரச்சனைகள் தீரப்போகுதோ? கதிரையில் இருக்க ஆசை...பெஜிரோவில் குடும்பத்தோடு திரிய ஆசை. இவங்கள...?"

"என்ன செய்யப் போறாய்?" நாதன் இடைமறித்தான்.

"இவங்கள...முற்றவெளியில சனத்துக்கு முன்புவிட்டு சுடவேணும்...இவங்களும் மனிசன்களா.....?"

"சிலருக்கு வந்திருக்கிற துணிச்சலைப் பார். தங்கடை தகுதி உணராமல் பாராளு மன்றம் போக ஆசைப்பட்டு..." நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்..?"

"இல்ல..சும்மா...." நாதன் மளுப்பினான். சிவராசன் இலக்சன் கேட்கிறது அவன் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அவரோட சண்டை. "நீங்க இலக்சன் கேட்டு வெல்லு வியளோ... யாரோ வெல்ல..அவையள் பாதுகாப் பாக கொழும்பில இருக்க...நீங்க அநியாயமாக சாகப் போறியள்.. நானும் என்ர பிள்ளைகளும் அனாதைகளாக தவிக்க வேண்டும்...இந்த இலக்சனில நிக்கிறதை விடுங்க...அப்படி விடாட்டி நான்...உங்களோட வாழ விரும்பவே இல்ல..." என்று சிவராசன் மனைவி சண்டைபோட்டுவிட்டு தாய்வீட்ட போய்விட...இப்ப சிவராசன் இலக்சன் மறந்து மனைவியை சமாதானப்படுத்த போயாக அலைய.. அய்யோ நினைக்கவே...

நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்..?"

"இல்ல....சும்மா...." நாதன் மளுப்பினான்.

"நாங்களும் 'எம்.பி'க்களாகப் போறம். என்று சிலபேருக்கு ஆசை. தேர்தலில் நின்றால் சரி வெல்ல வேண்டும் என்ற நினைவு இல்ல. வரலாறு இந்த ஆண்டில் இந்த தேர்தலில் நின்றான் என்று பலரும் பெருமையாக சொல்ல வேண்டும் என்ற ஆசை...பலர் தங்களைப் பற்றி பேச வேண்டும்... என்ற வரலாறு படைக்கும் ஆசை. மனச்சாட்சி இல்லாத மடையர்கள்..."

தன் அழகான கண்களை சிமிட்டி, சிமிட்டி அற்புதமான தெய்வ வாக்குகளாக வார்த்தைகளை கொட்டிக்கொண்டிருந்தான் தேவகடாட்சம்.

நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்..?"

"இல்ல...சும்மா..." நாதன் சமாளித்தான். அவன் வாயே திறக்கவில்லை.

"ஊர்பேர் தெரியாதவன்கள் தேர்தலில் நிக்கிறாங்க. நாங்க ஆர்...எங்களுக்கும் இந்த மண்ணுக்கும் என்ன தொடர்பு என்ற ஆதங்கமே இல்லே. இன்னார் தேர்தலில் நிக்கிறார் என்ற பேர் இருந்தால் போதும். சரி... இவர்களுக்கு இதுக்கு செலவழிக்க எங்க இருந்து காசு வருகுது? வருசா வருசம் இதுக்கென்றே உழைச்சு வைச்சிருப்பினமோ.... குறைஞ்சது பத்தாயிரம் வாக்காவது பெறும் தகுதி வேணும். பத்து பேரை தெரியாதவங்க எல்லாருக்கும் இந்த 'எம்.பி' பதவியில ஆசை...சே...."

நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்..?"

"இல்ல சும்மா.... நாதன் சமாளித்தான்.

"நான் என்ன சொன்னாலும் உனக்கு சிரிப்புதான்..." தேவகடாட்சம் தன் மோட்டர் சைக்கலை ஸ்டார்ட் செய்தான்.

நாதன் சிரித்துக்கொண்டான்...


'நானும் இந்த தேர்தலில் நிக்கிறது...இவனுக்கு தெரியவில்லை போல..... தெரிஞ்சால்.....'

நாதன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

"எங்களை ஆதரியுங்கள். நாங்கள் மண்ணை மட்டுமல்ல. மக்களையும் நேசிக்கிறவர்கள். நாட்டை விட்டு இனியும் ஓடமாட்டோம். மக்களுக்கு கேடயமாக நின்று துச்சமென உயிரும் கொடுப் போம். எங்கள் வாக்குகளை நம்புங்கள்...உங்கள் வாக்குகளை தாருங்கள்... ஆகவே எங்கள் வேட்பாளர்...."

பிரதான வீதியால் வந்த ஒலி பெருக்கி குரல் தேவகடாட்சத்தை நிறுத்தியது.

'கத்த தொடங்கிட்டாங்க...இனியும் நிம்மதியாய் உறங்க முடியுமோ...? எப்பதான் இந்த தேர்தல் திருவிழா முடியுமோ...?' தேவகடாட்சம் மோட்டார் சைக்கிளை ஓடவிட்டான்.



நாதன் தேவகடாட்சம் போன பாதையைப் பார்த்தான்... அவனுள்...

தேவகடாட்சம் சொன்ன வார்த்தகைள் எல்லாம்...

நாதனை...

தேவகடாட்சம் எல்லாம் நகைச்சுவை யாகத்தான் சொல்லி விட்டுப்போகிறான். ஆனால்....

நாதன்...

அவன் சிரிக்கவில்லை. சிந்திக்க தொடங்கியா விட்டான்.........?

www.padippakam.com                    நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 39

**இவ்வாரம் (31.07.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

**காலத்தின் குரல்:** முடிசூட்டப்பட்டதும் பிரச்சனைகள்யாவும் தீர்ந்துவிடுவதில்லை. உண்மையில் அதுதான் பிரச்சனைகளின் ஆரம்பம். அரசன் முடிசூடுவது பிரதானமானதுதான். போதிய கவனம் செலுத்தப்படவில்லையானால் அதுவே துரதிஷ்டமாக முடியவும் கூடும். பிரிவினையின் பயனாகத் தோன்றியதே யுதிஷ்டிரனின் இராஜ்ஜியம். இந்த நல்ல வேளையில் நன்மை பற்றியே சிந்திப்போம். காண்டவ பிரஸ்தத்தை பாண்டவர்களின் கர்மபூமி என்று கிருஷ்ணன் சொன்னாரல்லவா? ஆகவே அதில் பல உண்மைகள் பொதிந்துதானிருக்கும். இதற்கு யுதிஷ்டிரனின் மகுடாபிஷேகம் பிரதானமானது.

-காட்சி தொடக்கம்-

யுதிஷ்டிரனை சேடியர் அலங்கரிக்கின்றனர். சகோதரர்கள் நால்வரும் உடனிருக்கும்போது குந்தி, திரௌபதியுடன் அங்கு வருகிறார். பாண்டவர்கள் தாயை வணங்கி [illegible].

**குந்தி:** மகளே திரௌபதி! ஆசார வழக்கத்தின் படி உன் கணவன் நெற்றியில் திலகமிடு...!

**நகு:** அம்மா! தாங்களல்லவா திலகமிட வேண்டும்?

**அர்ச:** ஆமாம்! அது வெறும் திலகமல்லவே! ஆசீர்வாதமுமாகுமல்லவா அம்மா?

**குந்தி:** எனது வாழ்த்துக்கள் திலகமிடுவதுடன் தங்கியிருக்கவில்லை மகனே! மருமகள் வீட்டுக்கு வந்துவிட்டால் உரிமைகள் தாய்க்கும் மருமகளுக்குமிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட வேண்டும். தாயானவள் மாமியின் அந்தஸ்த்தை அடைந்ததும் அவளுடைய உரிமைகளும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஒரு சிறந்த இல்லத்தின் மகிழ்ச்சிக்கு இதுதான் அளவுகோல். ஆகவே யுதிஷ்டிரனுக்குத் திலகமிடும் உரிமை திரௌபதிக்கேயாகும்.

**திரௌ:** அவ்வாறே ஆகட்டும் அத்தை!

**குந்தி:** எல்லா நலனும் பெற்ற புத்திர பாக்கியத்துடன் நீடூழி வாழ ஆண்டவன் அருளட்டும்.

குந்தி ஆரத்தித் தட்டை திரௌபதியிடம் தருகிறார். ஆரத்தி எடுத்து திரௌபதி யுதிஷ்டிரனின் நெற்றியில் திலகமிடுகிறாள்.

**குந்தி:** யுதிஷ்டிரா! திரௌபதியைக் காப்பது உன் கடமை. உன் சகோதரர்களைவிட திரௌபதியின் மீது உனது அக்கறை அதிகமாக இருத்தல் வேண்டும்.

**யுதிஷ்:** அவ்வாறு ஏன் என் கடமைகளை கட்டுப்படுத்துகிறீர்கள் தாயே! தங்களையும் என் தம்பிமாரையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பது என் கடமையல்லவா?

**குந்தி:** இல்லை மகனே! உங்கள் பெரிய தந்தை மகாராஜாதான் என்னைப் பாதுகாக்க வேண்டியவர். திரௌபதி! உனது மைத்துனர்கள் நால்வரும் உன் பொறுப்பு. இளையவன் சகாதேவன் மீது கூடிய சிரத்தை காட்டவும்.

**திரௌ:** அவர்கள் தங்கள் புதல்வர்கள் அத்தை! என்னைவிட தங்களுக்குத்தான் அவர்கள் மீது அதிக பாத்தியதை உண்டு. தங்கள் குடும்ப பாரம்பரியம் நான் அறியாதவள். தாங்கள் இல்லாமல் நான் என் கடமைகளை பூரணமாக நிறைவேற்றுவது சாத்தியமா தாயே?

**குந்தி:** மகனே பீமா! அரசவைக்கு அண்ணனை அழைத்துச் செல்!

**திரௌ:** அத்தை! தாங்கள் வரவில்லையா?

**குந்தி:** இல்லை மகளே! நான் அரசவைக்கு என்றுமே போனதில்லை. நான் மணம் முடித்து வந்த அன்றே என் கணவர் படையெடுத்துச் சென்றுவிட்டார். திரும்பியதும் ஓய்வுக்காக அவருடன் கானகம் சென்றேன். அங்கு கிந்தம முனிவரை தெரியாமல் கொன்ற பழிக்கு அவர் ஆளான துர்ப்பாக்கியம் சம்பவித்தது. நாட்டின் அரசி என்ற அந்தஸ்த்துடன் நான் செல்ல முடியாத அந்த அரசவைக்கு அரச மாதா என்ற நிலையில் போக விரும்பவில்லை. எனது உள்ளமே பவித்திரமான பீடமாகிவிட்டது. நான் இங்கிருந்த வண்ணமே வாழ்த்துகிறேன். சென்று வாருங்கள்.

பின்னணிப் பாடல்:

மணவாளனில்லம் மாதவள் சேர்ந்ததும்
மாதாவி னுரிமைகள் மறுகை மாறிடும்
நிலையது நிலைத்தால் நிகழ்வுகளெல்லாம்
நிறைவுறும் மகிழ்வும் பொலிவுறுமாங்கே.

அரசவை- அஸ்தினாபுரி மக்கள், மன்னர் திருதராட்டினர், அமைச்சர்கள், பீஷ்மர், கிருபாச்சாரியார், துரோணாச்சாரியார், விதுரர் ஆகியோர் வீற்றிருக்க அந்தணர்கள் மந்திரம் ஓதுகின்றனர்.

**கர்ண:** (சகுனியிடம்) துரியோதனன் வந்திருக்க வேண்டுமே...!

**சகுனி:** எவ்வளவோ எடுத்துக் கூறினேன். பாதி இராஜ்ஜியத்தை இழப்பதனால் அவன் குழம்பியிருக்கிறான்.

**கர்ண:** இழந்தானா?... பாதி இராஜ்ஜியமாவது தேறியிருக்கிறதே?

**சகுனி:** கருத்துக்களில் மாறுபாடு- அங்க நாட்டு அதிபதியே!

**கிருபா:** மகாராஜா அவர்களே! குருகுலத்தின் தலைமகன் யுதிஷ்டிரனை அழைத்துவர ஆணையிடுங்கள்.

**திருத:** அரசரின் ஆணைக்கு முகூர்த்த வேளை காத்திருப்பதில்லையே...!

கிருபாச்சாரியார் சைகை காட்டியதும் சங்கு முழங்குகிறது. பீமன் யுதிஷ்டிரனையும் திரௌபதியையும் அழைத்துவர சகோதரர்கள் நால்வரும் தொடர்கின்றனர். யுதிஷ்டிரனும் திரௌபதியும் மன்னரை வணங்குகின்றனர். ஆசிபெற்றபின் விதுரர் இருவரையும் அவர்கள் இருக்கைகளுக்கு இட்டுச் செல்கின்றார்.

**விதுர:** மகாராஜா! தங்கள் அறிவித்தலுக்குரிய வேளை இது!

**திருத:** மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியோருக்கு முதல் வணக்கம் கூறுகிறேன். அவர்களின் ஆசியினால் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். பெரியப்பா பீஷ்மரை வணங்குகிறேன். இந்நாடு அவருடைய வழிகாட்டலினால் வளம் கொளிக்கிறது. சந்திர வம்சத்தின் எனது மூதாதையர்களை வணங்குகிறேன். எனது பார்வைக் குறைபாடையும் பொருட்படுத்தாது என்னை ஏற்றுக்கொண்ட நாட்டு மக்களை வணங்குகிறேன். எனது அருமைத் தம்பியின் பிரதிநிதியாக இந்நாட்டைப் பரிபாலனம் செய்யும் உரிமை பெற்ற நான் தம்பி பாண்டுவின் நிலையிலேயே தீர்மானங்களை எடுக்கிறேன். பாண்டுவின் மூத்த மகன் யுதிஷ்டிரனுக்கு ஒரு பகுதியாகவும் எனக்குப்பின் என் மகன் துரியோதனனுக்கு ஒரு பகுதியாகவும் இந்நாட்டைப் பிரிக்கவேண்டியேற்பட்டது. பெரியப்பா பீஷ்மர், பிரதம அமைச்சர் விதுரர் ஆகியோருடன் யாதவ குல அதிபர்களும் அரசாங்க உறுப்பினர்களும் இம்முடிவினை ஏற்றுக்கொண்டுள்ளனர். காண்டவ பிரஸ்தத்தை ஏற்கும் யுதிஷ்டிரன் அதனை சொர்க்கபுரியாக மாற்றி அமைப்பதை நான் என் கண்களால் பார்க்க வேண்டும்; அவன் இராஜசூய யாகத்தையும் நடத்த வேண்டும். எங்கும் அமைதி சூழட்டும். வாழ்க!

**பீஷ்ம:** மகுடாபிஷேக விழாவினைத் தொடங்கலாமா மகாராஜா..?

**திருத:** தாங்களே ஆணையிடலாம் பெரியப்பா!

**அறிவிப்பாளன்:** மகாரிஷி வேத வியாசர் வருகிறார்!

வியாசரை அனைவரும் வணங்க அவரும் எல்லாரையும் வாழ்த்துகிறார்.

**சகுனி:** வணக்கம் மாமுனிவரே! இது அங்கதேச மன்னன் கர்ணன்!

**வியா:** அண்டங்கள் பற்றிய அறிவு கொண்டோர் அனைவரும் அந்த வீரனையும் அறிவர். இவ்வீரன் வாழும் காலத்தில் வாழும் நீயும் அதிஷ்டசாலியே!

**கிருஷ்:** வணக்கம் முனிபுங்கவரே!

**வியா:** என்னை வணங்கவேண்டாம் நந்த குமாரா?

**விதுர:** (காந்தாரியிடம்) அண்ணி மாமுனிவர் வியாசர்!

காந்தாரி ஆசி பெறுகிறார்.

**யுதிஷ்:** மாமுனிவரே! எனது வணக்கமும் உரித்தாகட்டும்!

**வியா:** மகனே! வாழ்க்கை ஒரு பெருங்கடல். அதனைக் கடையும் போது அமுதமும் வரும். கூடவே ஆலகால விஷமும் வரும். இரண்டுக்கும் பொறுப்பு உனது செயல்களே என்பதை மறவாதே!

**யுதிஷ்:** பாஞ்சாலிக்கும் தங்கள் வாழ்த்துக்கள் அருளுங்கள்.

**வியா:** அவளுடைய உள்ளம் உரமுடையது. ஆகவே வாழ்த்து அவசியமற்றது. மகளே! உனது கேசத்தை கவனமாகப் பார்த்துக்கொள்!

வியாசரை வணங்க திருதராட்டிரர் எழுந்திருக்கிறார்.

**வியா:** மகாராஜா! சிம்மாசனத்தைவிட்டு எழவேண்டாம். யுதிஷ்டிரனின் மகுடாபிஷேகம் காணவே வந்தேன்.

**பீஷ்ம:** அப்போ தாங்களே மகுடாபிஷேகத்தை நடத்தி வைக்கலாமே?

**வியா:** இல்லை! நன்றி கங்கையின் மைந்தரே! முடிசூடுவதும் அதனை இறக்குவதும் எனது வேலையல்ல. அது உங்கள் குலகுருவின் கடமை.

**திருத:** தாங்கள் அமர்ந்திருக்கலாமே!

**வியா:** இல்லை மகாராஜா! எனக்கு இங்கு இடமில்லை. நிகழ்ச்சிகளை தாமதிக்க வேண்டாம். கிருபாச்சாரியாரே! காண்டவ பிரஸ்தம் அதன் மன்னனுக்காகக் காத்திருக்கிறது.

வேத பாராயணம் முழங்க யுதிஷ்டிரன் தலையில் கிருபாச்சாரியார் மகுடம் சூட்டுகிறார். மக்கள் வாழ்த்தொலி எழும்புகிறது.

**யுதிஷ்:** (திருதராட்டினரை வணங்கி)- பெரியப்பா! எனது பணிவான வணக்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**திருத:** பெயரும் புகழும் பெற்று நீடூழி வாழ்க மகனே! உனது தம்பிமாருடன் நீ காண்டவ பிரஸ்தம் சென்றாலும் என்றும் என் இதயத்திலேயே இருப்பாய்.

**யுதிஷ்:** வணக்கம் பெரியம்மா!

**காந்:** அந்த சங்கரனிடம் நான் வேண்டுவதெல்லாம் ஒன்றுதான் மகனே! இந்நாடு பிரிந்திருக்கலாம். ஆனால் எமது குடும்பம் பிளவுபடலாகாது என்பதுதான்.

**யுதிஷ்:** பெரியம்மா! தங்களுடைய நல் வாழ்த்துக்கள் என்னுடன் இருக்கும் வரை எந்தப் பிளவும் எம் குடும்பத்தை பாதிக்காது தாயே!

**காந்தா:** மகிழ்ச்சிபொங்க வாழ்வாயாக. நான் பார்வையற்றிருப்பதனால் உன் துன்ப துயரங்கள் என்னுடமையாக இறைவன் அருளட்டும். நன்மையெலாம் உனதாகட்டும்.

**யுதிஷ்:** வணக்கம் முனி சிரேஷ்டரே!

**வியா:** மகனே! உன்னை வாழ்த்துவதைவிட வேறு எதற்கும் நான் இங்கு வரவில்லையே! வாழ்க! நீடூழி வாழ்க...!

**யுதிஷ்:** தாத்தா! தங்கள் நல்லாசிகளைத் தாருங்கள்.

**பீஷ்ம:** நாட்டுடன் நானும் பிளவுபட்டு விட்டேன் மகனே! மக்களைக் காப்பது உன் கடமை. எதிர்காலம் உன்னைப் போற்றட்டும். எமது பண்டைய பெருமைக்கு வாரிசு நீ. சத்திரியன் மனித தர்மத்தைப் பாதுகாப்பதற்கு எத்தகைய தியாகத்தையும் ஏற்கவேண்டும். சகல வளமும் பெற்று நீடூழி வாழ்வாயாக...!

**துரோ:** உன் சகோதரர்களுடன் நீயும் எனது பெருமைக்குரிய மாணாக்கர்கள். இன்று எனது கடைசி போதனை இதுதான்! வேறு வழிகள் இல்லை என்றால் மட்டுமே இறுதியாக யுத்தத்தை நாட வேண்டும். வாழ்க்கையின் இலட்சியங்களை பாதுகாத்து அமைதியை நிலைநாட்ட யுத்தம் அவசியமாகலாம். சத்திரிய தர்மத்தை நிலைநாட்டுவாய் நீ என்பதில் எனக்கு பெரு நம்பிக்கை உண்டு.

**யுதிஷ்:** எவ்விதத்திலும் சத்திரிய தர்மத்திலிருந்து மாறுபடமாட்டேன் என உறுதி கூறுகிறேன் குருதேவா!

(விதுரரிடம்) வணக்கம் சித்தப்பா!

**விதுர:** மகாராஜா! இந்த அரசவையில் நான் தங்கள் சித்தப்பா அல்ல. அஸ்தினா புரத்தின் பிரதம மந்திரி நான். அதே நிலையில்தான் எனது வாழ்த்துக்கள்....!

**யுதிஷ்:** சித்தப்பா என்ற நிலையில் தங்கள் வாழ்த்தினைப் பெற, தாங்கள் பிரதமர் என்ற நிலையிலல்லாத தங்களிடத்துக்கு தங்கள் இல்லம் வருகிறேன்.

மக்கள் வாழ்த்துகின்றனர். அவர்கள் மத்தியில் யுதிஷ்டிரன் உரையாற்றுகிறான்.

**யுதிஷ்:** நான் மூன்று தாய்மார்களின் புதல்வன். முதலாவதாக நான் குந்தி மகாராணியின் மகன். அடுத்து மகாராணி காந்தாரியின் மகன். மூன்றாவதாக இந்த அஸ்தினாபுரியின் மைந்தன். இந்த சுப வேளையில் எனது மூன்றாவது தாயான அஸ்தினாபுரியின் வாழ்த்துதலை யாசிக்கிறேன். காண்டவ பிரஸ்தத்தின் அரசனாக நான் இன்று மகுடமேற்றாலும் என்றும் இந்த அஸ்தினாபுரத்தின் மைந்தனாகவே நான் இருப்பேன்."

மக்கள் வாழ்த்தொலி-

-காட்சி மாற்றம்-

**காலத்தின் குரல்:** பாண்டவர்களுடைய கர்ம பூமியை நோக்கி நாமும் செல்வோம். பாண்டவர்களைத் தொடர்ந்து பெருந் தொகையான நான்கு வர்ணத்தினரும் செல்கின்றனர். காண்டவ பிரஸ்தத்தில் பூமி பூஜையை நடத்தி வைக்க மாமுனிவர் வேதவியாசரும் ஏனையோருடன் செல்கிறார். காண்டவப் பிரஸ்தம் பாண்டவர்களின் கர்மபூமியே என்று கிருஷ்ணனே கூறியதில் பெரும் பொருள் பொதிந்துள்ளது. அங்கு நடைபெறப் போகும் புதுமையைக் காண காலமாகிய எனக்கும் ஆவல் எழுந்தது வியப்பில்லை. குன்றும் குழியுமாக வரண்டு போய்க் கிடக்கும் அந்தப் பூமியின் இயற்கைச் சூழ்நிலைகள் அனைவரையும் வரவேற்கின்றன. தங்கள் பிரதேசத்துள் புகுவோரை எதிர்க்க அசுரர்களும் நாகர்களும் ஆயத்தமாகின்றனர்.

**குடிமகன்1:** மகாராஜா தன் தம்பியின் புதல்வர்களுக்கு வாழ்த்து வழங்கினாரா அல்லது சாபம் கொடுத்தாரா?

**கு.மக-2:** அமைதியாக நடப்பதைக் கவனி! கங்கா புத்திரரே அவமானத்தால் தலை குனிந்து நிற்பதைப் பார்த்தாயா?

**கு.மக-3:** பாவம்! அவர் என்ன செய்வார்? அவருடைய சபதத்தால் கட்டுப்பட்டு செய்வதறியாதிருக்கிறார். தனது பெரியப்பா கொடுத்ததை மனம் கோணாது ஏற்றுக்கொண்ட தர்மரான யுதிஷ்டிரரை பாராட்ட வேண்டும். பார்த்தாயா? அந்த ஐவரின் முகத்திலும் ஏதாவது சோக ரேகை தெரிகிறதா?

குந்தியும் திரௌபதியும் இரதத்திலிருந்து இறங்குகின்றனர்.

**கிருஷ்:** உங்கள் கர்மபூமி எவ்வாறிருக்கிறது?

**அர்ச்:** கேசவா! இது எமது கர்மபூமி என்பதனால், இதனை வணங்கக் கடமைப்பட்டவர்கள் நாங்கள். இப்பூமி எவ்வாறிருக்கிறது என்று என்னைக் கேட்டீர்கள். ஒரு தடவை குரு துரோணாச்சாரியார், ஒரு குருவிப் பொம்மையினை மேலே மரக்கிளையில் தொங்கவிட்டு இலக்குப் பார்க்கும்படி கேட்டார். எல்லோரும் எதையெதையோ சொன்னார்கள். நான் குருவியின் கண் மட்டும்தான் என் கண்களுக்குத் தெரிவதாகக் கூறினேன். அதேபோல் இன்று இங்குள்ள மரம், செடி, கொடி, மலை எதுவுமே தெரியவில்லை. எமது இலக்கு- அந்த இலட்சியமே துல்லியமாகத் தெரிகிறது எனக்கு.

**கிருஷ்:** நல்லது நண்பனே! இந்திரனை வணங்கிவிட்டு உனது பணியினைத் தொடங்கு...!

**அர்ச்:** அப்படியே ஆகட்டும் கண்ணா!

அர்ச்சுனன் துரோணர், கிருபர் ஆகியோரை வணங்கியபின்னர் பீஷ்மரை வணங்குகிறான்.

**பீஷ்ம:** உனது புகழ் எங்கும் பரவட்டும்.

(இருவரும் அணைத்துக்கொள்ளுகின்றனர்.)

எல்லோரும் அமர்ந்திருக்க ரிஷிகள் வேத மந்திரங்களை ஓதுகின்றனர்.

▫▫▫

கிருஷ்ணன் மற்றும் பலராமரைத் தொடர்ந்து ஏர் பிடித்து பாண்டவர்கள் நிலத்தினை உழ ஆரம்பிக்கின்றனர்.



பின்னணிப்பாடல்:

கண்ணனவன் முன் செல்ல அவன் பின்னே
பாண்டவரும்
அண்ணன் பலராமன் அளித்த வரும்
ஏர்தாங்கி
மண்ணை உழுதார்கள் மகிழ்ச்சியுடன்
வாழ்த்தியம்பி
விண்ணவரும் மலர் சொரிந்து
வளங்களெலாம் குவித்தனரே!

ஒளியிழந்து உருவழிந்து உதவா நிலையிருந்த
களையிழந்த காண்டவனம் கடுமுழைப்பின்
காரணத்தால்
மழைகண்டு விளைகொண்டு இந்திரன்
தன்னுறைவிடமாய்
எழிலோங்கி புகழோங்க கண்ணனவன்
சங்கொலித்தான்.

▫▫▫

இந்திரப் பிரஸ்தமாளிகை- பாண்டவர்களையும் ஏனையோரையும் கிருஷ்ணன் புது மாளிகைக்குள் அழைத்துச் செல்கிறான். தேவ தச்சனான விஸ்வகர்மாவும் உடன் வருகிறார்.

**கிருஷ்:** வாருங்கள் மகாராஜா!

**விஸ்வ:** நான் விடைபெற்றுக்கொள்ளட்டுமா?

**யுதிஷ்:** நாங்கள் தங்களுக்கு உரியபடி நன்றி கூறமுடியவில்லையே..! அதற்குள்ளாக தாங்கள் புறப்பட வேண்டுமா?

**விஸ்வ:** இது எனது கடமை. கடமையைச் செய்வதற்கு பிரதி உபகாரம் பெறலாகாது மகாராஜா. வாழ்த்துக்கள்!

**கிருஷ்:** வணக்கம் தேவதச்சரே!

விஸ்வகர்மா மறைகிறார்.

சகலரும் தங்கள் தங்கள் இருக்கையில் அமர்கின்றனர். சகாதேவனும் நகுலனும் யுதிஷ்டிரனின் அரியணையின் இரு மருங்கும் நிற்கின்றனர்.

**கிருஷ்:** மகாராஜா அவர்களே! தங்கள் கர்மபூமி எவ்வாறுள்ளது?

**யுதிஷ்:** எனது சாதனை எதுவுமே இல்லை வாசுதேவா. எல்லாம் உன் கருணையே கண்ணா!

**கிருஷ்:** அவ்வாறு கூறலாகாது மகாராஜா! ஒருவருடைய நல்லாசிகளில் தங்கள் தலை விதியினை தக்க வைக்கலாகாது. உமது அபிலாசைகளை கடும் உழைப்பினால் அலங்கரிக்க வேண்டும். இதோ இராஜ்ஜியம் உருவாகிவிட்டது. அடுத்து பாதுகாப்புப் பற்றி சிந்திக்க வேண்டும்.

**சகா:** ஏன்? இங்கும் அவர்கள் எங்களை அமைதியுடன் வாழ விடமாட்டார்களா?

**பலரா:** அவ்வாறு எண்ண வேண்டாம். நான் அஸ்தினாபுரம் செல்கிறேன். துரியோதனனிடம் பேசப்போகிறேன். அவன் என் சொல்லைத் தட்டமாட்டான்.

**கிருஷ்:** அப்போ நீங்கள் துவாரகைக்கு வரப் போவதில்லையா அண்ணா?

**பலரா:** கிருஷ்ணா! நீ வளர்ந்துவிட்டாய்! உனக்கு இனி என் துணை தேவையில்லை. பீமா! நீயும் என்னுடன் வா! துரியோதனன் நல்ல விருந்து படைப்பான்.

**பீமன்:** இங்கு எனக்கு எல்லாம் போதுமான அளவில் இருக்கிறதே?

**கிருஷ்:** அண்ணா! உணவு கொள்ளும் போதாவது எங்களையும் நினையுங்கள்.

-காட்சி மாற்றம்-

இரவு நேரம்- கிருஷ்ணனும் அர்ச்சுனனும் உலவுகின்றனர்.

**அர்ச்:** பாதுகாப்பு பற்றி கூறினீர்களே! அதன் அர்த்தம் என்ன கண்ணா?

**கிருஷ்:** அயல் நாடுகளுடன் நட்புறவை வளர்க்க வேண்டியது ஆட்சியிலிருப்பவனின் அரச தந்திரத்தின் முதற்படி. அயலவன் நட்பை விரும்பவில்லையானால் அதற்கு அப்பாலுள்ள நாட்டின் அரசனுடைய உறவினை வளர்த்தால், இடையிலுள்ளவனின் பகைமை செயலிழந்துவிடும்.

**அர்ச்:** அப்போ இதற்கு மார்க்கமென்ன கண்ணா?

**கிருஷ்:** திருமண உறவு ஒரு சிறந்த மார்க்கம்! இத்தகைய உறவு விருத்திக்கான பயணம், படைகளுடன் தொடரலாகாது. துரியோதனனும் சகுனியும் சந்தேகம் கொள்ளாதிருக்கட்டும். இந்திரப் பிரஸ்தம் மட்டுமே உனது இலக்கல்ல மைத்துனா! இது உன் வரலாற்றின் முதலாவது அத்தியாயம். இங்கு இன்று நிலவும் அமைதியைக் கண்டு அகமகிழ்ந்துவிடாதே! இந்த அமைதிக்கப்பால் ஒரு பெரும்புயல் உருவாகிறது என்பதனை மறந்துவிடாதே!

**அர்ச்:** புயலா..?

**கிருஷ்:** ஆமாம்! காயம்பட்ட துரியோதனன் பெரும்புயல் வீசக் காரணமானவன்...

**அர்ச்:** உண்மைதான் கண்ணா!

பின்னணிப்பாடல்:

அடிபட்ட நாகம் அதன் பழியினைத் தீர்க்க
அரியதொரு காலமதைக் காத்திருப்பதுபோல
துரியோதனனும் பெரும்புயலாய் வீசித்தன்
உறு பழியினைத் தீர்க்க உறுதியுடனோய்ந்திருந்தான்.

படை நடத்தி பகைபரப்பி பாரில் பழியெய்தலினும்
பண்பன்புப் பலம் தேடல் பாலமதாய் அமையுமென
பாரினிலவதாரப் பரந்தாமனாயுதித்தோன்
பகன்ற மொழி பார்த்தனுக்கு பாதையதாயானதுவே!

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


## அருள் ஜுவலர்ஸ்

4 3 6 3 3 1



பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





## Kala JEWELLERY



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

4 3 3 6 8 6




## பயமில்லாப் படையாக

அமெரிக்க 'டைம்ஸ்' சஞ்சிகையில் மூன்று வாரத்தின் முன் வந்த படம் இது.

இது ஒரு உலக சாதனைப் படமல்ல. திருக்குர் ஆனில் உள்ள கருத்தோடு முரண்பட்டு பேசிய 'தஸ்லிமா நஸ்ரின்' மீது கோபம் கொண்ட பங்களாதேஷ் வாசிகள் நடத்திய ஆர்ப்பாட்டக் காட்சி. பாம்பை நாங்கள் பிடித்துவிட்டோம். தஸ்லிமாவை அரச பிடிக்கவேண்டும் என்று உணர்த்தவே பாம்புகளை தோளில் வைத்திருக்கிறார்கள். முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்களை பொறுத்த வரை தஸ்லிமா என்னும் பெண் எழுத்தாளர் "பாம்பைவிடக் கொடியவர்".

## உயிர் மற மோதுது!

குத்துச்சண்டைகள், மல்யுத்தங்கள் பலவாசிரம் இரசிகர்களைக் கவர்ந்து வருகின்றன. பல இலட்ச ரூபாய்கள் பந்தயம் வைத்து அரங்கில் மோதுகிறார்கள். இரத்தம் சிந்தலை இரசிக்கும் இரசனை வக்கிரம்தான். ஆனால் வன்முறைதானே வருவல் தருகிறது.

தரு வது
வி
யோ
டெ

## கனவிலும் இரத்தம்



## தினமுரசு வாரமலர்



## இங்கும்



## எரியும் வாழ்க்கை

## அங்கும்

கண்ணுக்கெட்டாத-
தொலைவிலும்
கண்படும் சொந்த மண்ணிலும்
போரது நெய்யும்
வாழ்க்கை என்பது-
உடனே கிழியும்
கந்தலாய் இருத்தல்
மெய்யேயன்றிப்
பொய்யில்லை-

அறிவோம்.

கன்று வாழைகள்
சடசடவென்று சரியும்
போர் புயல் தேசத்தில்
எரியும் வாழ்க்கையை
பாட்டியின் கண்ணீர்
அணைத்தல் முடியுமோ?
இன்றுபோய் நாளை விடியினும்
போர் இது முடிதல்
கனவு என்று ஆனது.
ஆயினும்-
இன்றைய சோகப் பதிவுகள்
வருங்கால சந்ததிக்கு
சொல்லி அழ
நிறைய சங்கதிகளை
விட்டுச் செல்வது மெய்!

'அமெரிக்க உதைபந்தாட்டத்தில்' நட்சத்திர வீரர் ஓ.ஜெ.சிம்சன் கையில் விலங்கு. அவர் மடியில் இருக்கிறார் பாருங்கள் அவர்தான் மனைவி நிக்கோலி.

## உள்ளே—வெளியே

சிம்சன் அவரை கொன்றுவிட்டார் குற்றச்சாட்டை திருபிக்க பொலிஸ் திணறுகிறது. பிரபல விளையாட்டு வீரர் தனது வாழ்வில் விதி விளையாடி விட்டதாக கம்பிகள் பின்னால் நின்று கலங்குகிறார்.



ஊசிமூலம் போதை மருந்தை உடலில் செலுத்தும் பழக்கம் மேலை நாடுகளில் பரவிவிட்டது. விரக்தியின் உச்சத்தில் இளம் வட்டம் போதையில் விழுந்து வாழ்க்கையை தொலைக்கிறது. வெளியே விரக்தி உள்ளே போதை. ஒழிந்துபோகும் எதிர்காலம்.


## 1994 பாராளுமன்றத் தேர்தல்-கொழும்பு மாவட்டம்



### சுயேச்சைக் குழு

கொழும்பு வாழ்
தமிழ், முஸ்லிம் மக்களின்
ஆத்மார்த்த தோழன்
**A. கங்காதரன்**
சட்டத்தரணி, அகில
இலங்கை சமாதான நீதவான்.

X 8

"சிறுபான்மையினர் நீதியைக் கேட்கின்றனர்.
தராசுதான் பதில் சொல்லும்." ADVT.





## வீரமக்கள் தின கவிதைப் போட்டி

மூன்று பெறுமதி மிக்க பரிசில்களும் மேலும் பத்து ஆறுதல் பரிசில்கள் தலா 500/=ரூபாப்படி கொடுக்கப்படும்.

கவிதைக்கான தலைப்பு-

'ஒற்றுமையே பலம்', 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

சகோதர யுத்தம் என்றைக்கும் இனி வேண்டாமெனக்கோரியும் அனைத்து தமிழர் விடுதலை அமைப்புக்களும் ஒரே கொடியின் கீழ் இணைந்து செயற்படவேண்டுமென்பதை வலியுறுத்துவதாயுமிருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களில் ஏதாவது ஒன்றைப்பற்றி எழுதினாலும் சரி. குறைந்தது ஐந்து வரிகளுக்கு குறையாமல் இருந்தால் விரும்பத்தக்கது.

உங்கள் கவித்துளிகள் வந்து சேரவேண்டிய கடைசித்திகதி எதிர்வரும் 4.8.94 வியாழக்கிழமை. பரிசுக்குரிய கவிதைகளை தேர்ந்தெடுப்பது, இப்போட்டியை நடத்தும் ஐக்கியத்தை வலியுறுத்துபவர்களே! பரிசுக்குரியோர் பெயர் விபரமும் பரிசுக்குரிய மூன்று கவிதைகளும் தினமுரசு வாரமலரில் பிரசுரிக்கப்படும்.

நன்றியுடன்

முகுந்தனை நேசித்தோரும் அன்றுமுதல் ஐக்கியத்தை வலியுறுத்துவோரும்-
-SWISS [SO]- சுவிட்சர்லாந்து

வீரமக்கள் தின கவிதைப் போட்டி.
மே/பா. தினமுரசு வாரமலர், த.பெ.எண்-1772, கொழும்பு.

ADVT.